~~A.T.R~~

# வீட்டுக்கு ஓர் வாயில்

~~310~~

2. 243

கணபதி துணை.

தத் ஸத் ஸ்ரீபர ப்ரஹ்மணே நம:

இது

கடப்பை ஜில்லா கடி கோட்டை ஆசிரமவாசிகளாகிய
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
அவர்களால் இயற்றப்பட்ட

# ஜீவப்பிரம்மைக்ய
# வேதாந்த ரஹஸ்யம்

எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

* *

1970-ம் ஆண்டு தை மாதம் 9-ந் திகதி

22-1-70


சாவகச்சேரி ஸ்ரீ ஜெயா அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

உசன், மிருசுவில்.

## பிரம்மஸ்ரீ. திரு. நாராயணையங்கார் அவர்கள் எழுதியதில்

பூவுலகத்திற்பிறந்திறந்துழலும் ஜீவராசிகளுள் மக்கட்பிறப்பிற் புண்ணியமிகுதியுடையார் அவரவர் தகுதிக்கேற்றவாறு கடவுள்வழிபாடு புரிந்து நன்ஞானங் கைவந்துய்யு நெறிகளை வைதிக சமயாசாரியர்கள் பலவழியாக வகுத்து விரித்துரைத்திருக்கின்றனர். அந்நெறிகளெல்லாம் ஒருவரால் ஆராய்ந்தறிந்து சீர்தூக்கி இந்நெறியே நன்னெறியென்று கடைப்பிடித்தற் கியலாதனவென்றும், அவையொவ்வொன்றும் ஓரோராற்றால் உய்வடைதற்குரிய நன் நெறியென்றும் உயர்ந்தோராற் கொள்ளப்பட்டன.

கல்வியிற் பெரிய கம்ப நாடரும்,

''ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென்றுரைக்கிற் பல
வேயாம்
அன்றேயென்னி னன்றேயாம் ஆமென்றுரைக்கி னுமேயாம்
இன்றேயென்னி னின்றேயாம் இலதென்றுரைக்கி னிலதே
யாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னே பிழைப்
பம்மா''

என்று எல்லா நெறிகளையும் உய்யுமுபாயமாக!

# ஸ்ரீ காசி சிவானந்த சுவாமிகள் எளுதியதில்

உலகநூற் பெருங்கடலாகிய தொல்காப்பியம் முதல் கம்பர் காப்பியம் வரை கரைகண்ட தமிழ்ப் பெரும் புலவரேனும் அறிவுநூற் பெருங் கடலாகிய அத்வைத ஞானநூல்களை ஆராய்வதென்றால் அவர்களுக்கும் அது சிறிது அரிதென்றுதான் முடிவுரைத்தல் வேண்டும், அங்ஙனம் உலகநூல் கற்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அறிவு நூல் கற்று ஐயத்தினீங்கி யோர் பெருமையை விளக்குதற்கு ''

'' அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லாது
உலகநூ லோதுவ தெல்லாம் – கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில் ''

என்னும் நாலடிச் செய்யுளே சாலச் சிறந்த சான்றாகும்.

# முன்னுரை

எண்ணரிய பிறவிகளில் அதி உயர்ந்த மானுடப்பிறவியினை எடுத்த நமக்கு இச் சரீரத்தை இறைவன் நல்லருளால் தம்மை வணங்கி முத்தியின்பமாகிய பேரின்பத்தைப் பெறும் பொருட்டேயாம். அத்தகைய பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவதற்கு நமக்கு வாய்த்த சமயநெறி சைவம். சைவ நெறியைத் தப்பாது கடைப்பிடித்தொழுகிய புண்ணிய சீலர்களாலே - தவசிகளாலே - முனிவர்களாலே அநுபவ வாயிலாகப் பல உபதேசங்கள் சொல்லப்பட்டுள்ளன. அத்தகையதொருவகை அநுபவ நூல் ஜீவப்பிரம்மைக்கியமாகும். அந்நூல் ஸ்ரீ பரமகம்ச சச்சிதானந்த யோகீஸ்வரரால் அருளிச் செய்யப்பட்டது.

அந் நூலிலே சொல்லப்பட்ட சிறந்த கருத்துக்களை உசன் சரவணமுத்து குலசேகரம் அவர்கள் தெரிந்தெடுத்துத் தந்துள்ளார். இத்தொகுதியினை யாம் நூலோடு சரிபார்த்து வேண்டிய திருத்தங்களைச் செய்துள்ளோம்.

சாதாரண அறிவு படைத்தவர்களும் கற்றுணரக் கூடிய கதைப்பகுதிகளையும் உவமைகளையும் இடையிடையே கொண்டு நுண்கருத்துக்களை விரைவிற் தெளிவிக்கின்றது. இதனை வாசிப்பவர்கள் நல்லுணர்வு பெற்றவர்களாய் மேலும் சமய சாஸ்திரங்களை ஆராய வேண்டுமென்னும் அவா உடையவர்களாவர். அன்றியும் இறைவன் ஒருவனையே பெரும் பொருளாகக் கருதி வழிபட்டுய்ய வேண்டுமென்னும் உணர்வும் எழுச்சியும் பெறுவர். ஆதலால் இத் தொகுப்பிற்கு ''வீட்டிற்கோர் வாயில்'' எனப் பெயர் குறித்தனர் போலும்.

இதனை வாசிப்பவர்கள் தொகுப்பின் உள்பொருளை அறிவதற்குப் பலதரமும் கற்பார்களாக. பொருளை உணர்ந்து அநுட்டானங்களை அநுபவத்திற்குக் கொண்டுவருபவர்கள் அவ்வநு

பவ ஞானத்தாலே மேலும் சமய உணர்வு கைவரப் பெற்று ஆசாரசீலர்களாகிச் சிவபதத்தையே சிந்தை கொண்டு வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்தை எய்துவார்களாக.

உய்யவல்லார்கட் குயிர்சிவ நாமமே
உய்யவல்லார்கட் குயிர்சிவ தெய்வமே
உய்யவல்லார்கட் கொடுக்கும் பிரணவம்
உய்யவல்லாரறி வுள்ளறி வாமே. (திருமந்திரம்)

சி. சரவணமுத்து
சைவ ஆசிரியர்
பட்டிருப்பு மகாவித்தியாலயம்

ஐயா!

ஷெ, ஆசிரியராகிய சி சரவணமுத்து, தற்போது பட்டிருப்பு மகாவித்தியாலய ஆசிரியராக அமர்ந்திருக்கின்ருர் இவர் பண்டித வித்துவானும் சைவ ஆகம ஆராய்ச்சியுடையவருமாவர். எனவே, நாம் தொகுத்துள்ள வீட்டுக்கோர் வாயில் என்னும் வேதாந்த உரையைப் பரிசீலனை செய்து தந்துதவிய அன்பை, இன்றும் என்றும் அயராதிருக்கும்வண்ணம் பெருமானை என்றும் வேண்டுகின்றேம்.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில;

இங்ஙனம்
அடியேம்
ச. குலசேகரம்

## சஸ்சி தானந்தம்
## குரு துணை

உசன் பதியைச் சார்ந்த விடத்தற்பளை வாசியாகிய அடியேன், மேற்படி பதியாகிய முருகன் திருவருளை முன்னிட்டு வேண்டி, ஷடி குருவை நியமனங் கொண்டு நின்று இதனைத் தொகுத்துள்ளேன்.

மனமானது பிரபஞ்ச பந்தத்திலிருந்து விடுதலையடைந்து லக்ஷியமாவதே. மனோலயம், மனம் லயப்பட்டுவிட்டால் சகல அறிவுகளையும் நுகரச்செய்யும். வீட்டுக்கோர் வாயிலென்றால் நிறைந்த ஒளிபொருந்திய நித்தியானந்தத்திற்கு இதுவும் ஒரு வாயில் என்பதாகும். மனமாகிய ராஜன் கட்டுப்பட்டு லயமானவுடன் லக்ஷியக்குறி கொண்டு பரமாத்மாவை அறிவான். ஆன்மா, பரப்பிரமத்துடன் இரண்டறக் கலக்கும் பொழுது இந்த ஆனந்தமுண்டாகிறது. மாயையாகிய இருள் அகல, அகல ஞான ஒளியானது வளர்ந்து வளர்ந்து வருகின்றது. அவ்வொளியினூடே வெளியொன்று தோன்றும். அவ்வெளியிலே இறைவனுடைய ஆனந்த நிருத்தத்தைக் கண்டு இன்புறலாம். அவ்வின்பத்தினை அடைவதுதான் எங்கள் யாவருக்கும் இலட்சியமாகும். இந்த இலட்சியத்துக்கு இத் தொகுப்பு வழிகாட்டுமென்பதே எமது கருத்தாகும். மேற்படி இலட்சியம் என்றால் எப்படியென்பதன் விபரத்தை நன்றாக ஊகித்துக்கொள்ள வேண்டும். இலட்சியமே என்றும் முக்கியமானது.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே — வித்தகமாய்க்
காதி விளையாடி யிருகைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

ஆனமுறையில், கற்கவேண்டிய கல்வி இருவகையாகும்; கீழ்ப் பகுதியொன்று, மற்றொன்று பேரறிவு. ஸ்வரம், வியாக்கரணம், சந்தம், பதவுரை இவையடங்க, சகல வேதங்களையும் நன்றாகக் கற்றுவிட்டபோதிலும் அது கீழ்ப்பகுதி அறிவேயாகும். அழிவற்ற பரம்பொருளைப் பற்றிய அறிவே பேரறிவு. கிரியைகளினால் மாத்திரம் நித்தியமான பரம்பொருளை அடைய முடியாது. அறிவும் ஒழுக்கமும் கொண்ட ஆசாரியனை அடைந்து ஆத்மதரிசனம் தரக்கூடிய பேரறிவைத் தேடுவீர்களாக.

புலன்களையும் மனதையும் வசப்படுத்தி ஆசைத்தளைகளை அகற்றிவிடும் முயற்சியிலே கண்ணும் கருத்துமாகத் தைரியமும் பிரயாசமும் கைக்கொண்டு புலன்களையடக்கிப் பற்றுதலை ஒழிக்கவேண்டும்.

குறியற்ற தவத்தால் இதயத்தில் மறைந்து நிற்கும் பரமாத்மாவைக் காணமுடியாது. வறிதே உடலை வருத்துதனாலே பயனொன்றுமில்லை. சரியான முறையில் அறிவும், பக்தியும் கொண்டு மனதை அடக்கி ஆசைத்தளைகளை நீக்குவதே பயன் தரக்கூடிய தவமாகும். தியானம் செய்கிறவன் வில்லாளி. குருவிடத்தில் அடைந்த வேதாந்த ஞானமே வில். தியானம் செய்பவனுடைய ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை அதாவது தன் உள்ளத்தை, வில்லில் வைத்து நாணை இழுக்கவேண்டும். நாணை இழுப்பது என்றால் ஏகாக்கிரசித்தத்துடன் தான் அடைந்த ஞானத்தை உபயோகித்துத் தியானிப்பது. நாணை நன்றாக இழுத்துக் குறிபார்க்கவேண்டும். பரமாத்மாவே குறியாகும். நல்ல வில்லாளன் வில்லை வளைக்கும்போது குறியும், அம்பும் ஒருநேரில் அமையச்செய்கிறான். அந்த நிலையில் அம்பு குறியில் மறைந்துபோகின்றது. பரம்பொருளைத் தியானம்செய்பவனும் அவ்வாறே தன் ஆத்மாவையும், பரமாத்மாவையும் ஒன்றாகவே காணவேண்டும். தியானம் செய்யும் காலத்தில், பரமாத்மாவில் தன் ஆத்மா முற்றிலும் அத்துவிதீயமாக மறைந்துபோக வேண்டும்.

வில்லை வளைத்து அப்பை விடுந்தருவாயில், நல்ல வில்லாளன் குறியைத்தவிர வேறு எதையும் காணமாட்டான். அவன கண்ணுக்கு வில், அம்பு, உலகம் அனைத்தும் அந்தச் சமயம் மறைந்துபோகும்; தன் உடலையும் மறந்து விடுவான். குறி ஒன்றே அவன் கண்ணில் நிற்கும். அதுபோல் ஏகாக்கிரசித்தத்துடன் தியானம் செய்பவனுக்குப் பரமாத்மாவைத் தவிர மற்ற அனைத்தும் மறைந்து போய், தன் உள்ளமும் அந்தப் பரமாத்மாவில் மறைந்து அத்துவிதியமாகிவிடும். அத்தகைய தியானத்தினால் அவன் உள்ளம் நல்ல வில்லாளன் ஏந்திய அம்பைப்போல் பாய்ந்து குறியைச் சேரும். அதாவது பரமாத்மாவைத் தரிசிப்பான்.

யுத்தத்திலும், மிருக வேட்டையிலும் எய்யும் அம்பைக் கூராகத் தீட்டி வைத்துக்கொள்வார்கள். அதைப்போல் உள்ளமாகிய அம்பையும் பக்தியினால் நன்றாகத் தீட்டிக் கூராக வில்லில் வைப்பாயாக என்கிறார் முனிவர். அவ்வாறு தீட்டினால்த் தான் உள்ளமாகிய அம்பு ஈசுவரனாகிய குறியை அடைந்து, நன்றாகப் பதிந்து பற்றிக்கொள்ளும் என்றவாறு லக்ஷயமாய்ப் பக்தி செய்து நித்தியானந்தம் அடைவோமாக.

ஸ்திரி புருஷர்களே; ஆகவே தன்னைத்தான் அறிந்தவர்கள் நிர்மலமாகிய ஞானசம்பந்தத்தால் நிராகார பரப்பிரம்மத்தைத் தெரிந்துகொண்டு, கேவலதியான ரூபமாய் ஐந்தாவது பதவியாகிய கைவல்ய பதவியில் இச்சையுண்டாய், ஜீவன் முத்தர்களாய் இருந்து கடைசியில் விதேஹ முத்தியையடைவார்கள்.

ஆதலால் மானிட ஜநநம் எடுத்த ஒவ்வொருவரும் ஞான நூல்களைப் பலகால் வாசித்து நல்ல ஆசானைச் சார்ந்து, ஆங்காங்கு சொல்லியிருக்கும் உபநிஷத் வாக்கியங்களின் அபிப்பிராயத்தை நன்குணர்ந்து தெளிந்து, அதனால் ஞானானந்தப் பெருவாழ்வை எய்தவேண்டுமென்பதே இத்தொகுப்பின் நோக்கமாகும்.

## தாயுமான சுவாமிகள் பாட்டு

ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல் விசை யடங்கி மனம்
வீழ் நேரே
யறியாமையாகின்ற விருளகல விருளொளியு மல்லாதிருந்த
வெளிபோற்
கோடாதெனைக்கண் டெனக்குணின்ற. சாந்தவெளி கூடியின்
பாதீதமுங்
கூடினே ஞேசரியை கிரியையின் முயன்றுநெறி கூடினேனோ
வல்லனியா
னீடாகவேயாறு வீட்டினி னிரம்பியே யிலகிவளர் பிராண
னென்னு
மிருநிதியினைக் கூடியோகபரனுகாம வேலைழைக் குடும்பனுகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ தேடரிய
சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேஜோ மயா
னந்தமே.

தொகுப்பினைத் தந்த அடியேம்
ச. குலசேகரம்



எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் – சிட்டன்
சிவாய நம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
யவாய மற நின்றாடுவான்.

ஓட்டைத் துருத்தியை யுடையும்
புழுக் கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ரருளைமிசப்
போற்றியே
வீட்டைத் திறந்து வெளியை யொளி
யாலழைத்துக்
காட்டும் பொருளி தென்று கருதியே
நெஞ்சமே,

பட்டினத்தார் பாடல்

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடி யன்று தான்.

## சாஸ்த்ர ரத்னம்

## தேதியூர், ஸுப்ரமண்ய சாஸ்த்ரியன்.

அறம் பொருளின்பம் வீடாயவோர் நான்கின்
றிறந் தெரிந்திங் கொன்றாக்கிச் சிந்தை — கறங்கென்ன
வாடாது நிற்றற் கருநெறியெல்லா முறையிற்
கோடா தளிப்போன் குரு.

## சொரூபானு சந்தான துதி

தானந்த வமியாக மாதியினாலே தன்மனச் சுத்தியைப் பெற்றுச்
சமஸ்த

ஊன சுகத்திலுந் துச்ச மதியால் ஓதும் விராக மடைந்திந்தப்
பந்த

மான வினைகளனைத்துந் துறந்திங் கந்தண ராதிக ளியா
தொறைப் பெற்றார்

மோன சதானந்த பூரண நித்த முத்த பரப்பிர மம்மது நானே

---

இந்தச் சொரூபானு சந்தான ரூப வின்பத் துதிதனை யாதர
வோடும்

எந்தப் புருடனற்பத்தியினோடும் ஏகாக்கிரசித்தனாகப் படிப்பான்
எந்தப் புருடனா மந்தப் படியே இந்தத் துதிதனை நித்தமுங்
கேட்பான்

அந்தப் புருட னகண்டப் பிரம மாகுவ னப்படி வேதம் பிர
மாணம்.


## வேறு

மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனி தந்தாற் கனிஉண்ணவும் வல்லிரே
புனிதன் பொறீகழல் ஈசனெனுங் கனி
இனிது சாலவும் ஏசற்ற வர் கட்கே.

திருச்சிற்றம்பலம்

# தொகுப்பின் அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| i | கடவுள் வணக்கம் | |
| ii | குருஸ் துதி | |
| iii | அவதாரிகை | |
| iv | உலகம் கண்ட உண்மை | 11 |
| v | குரு உபதேசம் | 14 |
| vi | மனமே எதற்காக நீ சலித்தாய் | 17 |
| vii | ஆன்மாவே தெய்வம் | 19 |
| 1. | சம்சார பந்தம் புருஷனைத் தொடர்வது | 20 |
| 2. | பிணத்தைப் பார்த்து விசனப்படுபவர்களின் சோகம்நிவிர்த்தி அடைய உபதேசித்தல் | 27 |
| 3- | மனோலயத்தால் சகலதும் சித்தியடைதல். | 34 |
| | சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள். | 56 |
| 4. | பிரபஞ்ச விரக்தி மார்க்கம் | 56 |
| 5. | மனதின் சுபாவம் | 63 |
| 6. | ஓர் கடவுளையே பக்தி செய்து கடைத்தேற வேண்டிய ரகஸ்யார்த்தம் | 69 |
| 7. | ஸோகம் மந்திர ஜப கண்டனை | 71 |
| 8. | அஸம் பிரஞ்ஞாத சமாதி | 72 |
| 9. | சிதாகாஸம் எது? நிர்விகல்பசமாதி எது? | 75 |
| | முத்தியடைந்த ஐவர் சரீரத்திலொன்று! | 78 |



## கடவுள் வணக்கம்

வெண்பா: திருச்சிற்றம்பலம்

அடையு மடியார்க் கருள் செய்யுங் கோவே
இடமோ டெனக்கு மருள் செய்வாய் — படியிற்
பிரசித்தி பெற்றுள்ள பேரின்ப ஞான
வரசித்தி வாரண தேவா!

சிவபெருமான்

அல்லல் இல்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வனார் திருவேட்களம் கைதொழ
வல்லராகில் வழியது காண்மினே.

கலைமகள்

ஆயகலை களறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

திருச்சிற்றம்பலம்

## குருஸ்துதி

(1) நலம்பொழியு நற்பொருளே நத்துமிகுந் தத்துவனே
தலஞ்செறியுந் தற்பரமே தனிமுதற் றயாபரனய்
சலம்பெருகும் வேலையெனச். சரற் கருணை மாமுகிலே
புலங்கோதின் பரமாம்ஸ சச்சிதானந்தப் பிழம்பே.

(2) உண்மை நிலையை அறியாமல்
உழலு மடியேம் உணர்ந்திடவே
வண்மை மொழி மந்திர மொன்றும்
மலர்வாய் திறந்து வழுத்திடுவீர்
திண்மைப் பொருளைத் தெரிந்த பசுந்
தேனே திகட்டாத் தெள்ளமுதே
தண்மைப் பொழில்சூழ் கடப்பைநகர்
தனில் வீற்றிருக்கும் தவக் கொழுந்தே.

(3) மதத்தைத் தவிர்த்து மலமொழித்து
மயலைக் கெடுத்து மன நிறுத்தும்
விதத்தை யுணர்த்தி விளங்குகின்ற
மெஞ்ஞானப் பேரின்ப, நல்ல
முதத்தை யருந்திப் பிறப்பாழி
முழுகாதருளு முளரியஞ் செம்
பதத்தை மனத்தில் நிலைநிறுத்திப்
பணிந்தேம் சிரத்தி லணிந்தேமே.

(4) புன்சொல் எனினும் புகலுமிவை யெல்லாம்
இன்சொல் என்மனத்தி லெண்ணியே — நன்சொல்
திருவாய் மலர்ந்தருள்வீர் சேவித்தேன் பாதம்
குருவாய்ச் சிரமீதிற் கொண்டு.

## அவதாரிகை

ஜீவ சாக்ஷியாகிய கூடஸ்தனும் ஈஸ்வரசாக்ஷியாகிய பரப்பிரம்மமும் தானென்று அறியாமல், ஸ்தூலசூக்கும காரணங்களினல் உண்டாகிய தேகமே தானென்று அபிமானம் வைத்து. நான் பிராமணனென்று பிரமையடைந்து அனேக யுக வருஷங்களாய்ப் புருஷன் காலசக்கரத்தில் (சுழல் காற்றில் அகப்பட்டுக் கொண்ட செத்தையானது கிறுகிறுவென்று சுழல்வதுபோல்) சுழன்று கொண்டு நாநாவித ஜந்துக்களின் யோனிகளில் போய்ப் பிறந்து பிறந்து புண்ணிய பாப மிசிர (இரண்டு) கர்மங்களையும் செய்து கொண்டு, சுகதுக்கங்களை அனுபவித்துப் பிறந்து கொண்டும் இறந்து கொண்டும் இருக்கிறார்கள். பிரம்மமே நான் என்று தெரிந்து கொள்ளும் வரையில் ஜநந மரணங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஆதலால், உலகத்தில் ஸ்திரி புருஷரூபமாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மானிட ஜனங்களெல்லோரும் மாயையென்னும் ஆசையால் கட்டுப்பட்டு மிகவும் ஆழமான சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி என்றால், சம்சாரமென்பது மனைவி மக்கள் மீதுள்ள ஆசையேயல்ல; எந்தப்பொருள் தனக்கு வேண்டுமென்று இச்சைக் கொள்ளுகின்றானே அவையாவும் சம்சாரபந்தமென்றே சொல்லப்படும். இந்தச் சம்சாரமென்னும் பந்தமே பெரிய சமுத்திரமாய் இருக்கின்றது. இப்படிப்பட்ட சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி தனைச என்னும் வியாதியினல் பீடிக்கப்பட்டு மின்னலைப்போல் க்ஷண நேரம் இருக்கும் ஸம்போகச் சுகங்களுக்கு ஆசைப்பட்டு எப்பொழுதும் வருத்தமடைந்து கொண்டிருப்பார்களே அல்லாமல் நித்தியானந்தப் பதவியை வேண்டார்கள். இவர்கள் செய்வது எப்படியிருக்கின்றதென்றால், காட்டில் பெரிய பள்ளம் வெட்டிக்கழிகளைப் பரப்பி அதன் மேல் பாயும் மண்ணும் போட்டு விதைவிதைத்துச் செழுமையாய் வளர்த்து வைக்கப்பட்ட பயிரைப் பார்த்து அதனல்கேடு சம்பவிக்குமென்று யோசனை செய்யாத யானையானது, அந்தப் பயிரை மேய்வதற்காகத் துரிதப்பட்டுச் சென்று அந்தப் பாழும் பள்ளத்தில் வீழ்வது போல் இருக்கின்றது.

விட்டில் பூச்சிகள் தீபப்பிரகாச ரூபத்தைப் பார்த்து, பழமெனப் பிரமித்து அந்தத் தீபத்தில் வீழ்ந்து மரணமடைவது போல, புருஷர்களுக்குப் பூர்வ புண்ணிய விஷேசத்தினுல் துர்லபமான மானவ ஜன்மம் உண்டாகியும், ஈஸ்வர பக்தியில்லாமல் எல்லாவற்றிலும் விசேஷ ஆசையுடையவர்களாயிருந்து, சம்சாரமென்னும் பாழும் பள்ளத்தில் வீழ்ந்து நசிக்கிருர்கள். ஆதலால் சிலநாளில் அழியும் இத்தேகத்தை நம்பி வீணுகக் காலம் கழித்துக் கெடாமல் இத்தேகமெடுத்தது முக்கியமாய் மோட்சத்தை அடைவதற்கே என்று தெரிந்து கொள்ளவேண்டும். இதற்கு சிவஞான சித்தியார் பாடல் பிரமாணம் என்னவென்ருல்,

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து
ஆனிடத்தைந்து மாடுமரன் பணிக்காக வன்ரூ
வானிடத்தவரும் மண்மேல் வந்தரனை யர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலு மூமரொன்றையு மறியாரம்மா.

எனவே; உலகப் பொய் வாழ்க்கையை முற்ருக நம்பி உடலை ஓம்பற்க.

மோட்சமென்ருல் எல்லாப் பந்தத்திலிருந்தும் விடுதலை அடைதலேயாம், இப்பந்தம், பாஹ்யம், ஆந்தரம், என இரண்டு வகைப்படும்.

பாஹ்ய பந்தமாவது:- எனது வீடு, எனது பார்யாள், எனது புத்திரர்கள். எனது புத்திகள், எனது சரீரம், எனது பூமி, எனது மாடு, எனது தோட்டம், எனது துரவுகள் என்று தனதல்லாத வேறு வஸ்துக்களைத் தனதாகப் பாவிப்பது.

ஆந்தர பந்தமாவது:- காம, குரோத, லோப, மோக. மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்சை, அசூசை, என்னும் இந்தப் பத்துக் குணங்களினுல் புருஷனுக்குப் பந்தம் உண்டாகின்றது. இந்தப் பந்தம் அஞ்ஞானத்தினுல் ஏற்பட்டதேயன்றி வேறன்று. இவ் வஞ்ஞானத்தை விசாரிக்குமளவில் இது கானல் நீரைப்போல் ஜீவனுக்கு அநேக ஜன்மங்களாய் வந்துகொண்

டிருக்கும். இதனுல் ஆசாபாசங்களும் காமக் குரோதாதிகளும் நம்முடன் கூடவே விருத்தியாய் வந்தன. இவைகளைக் கிரமக் கிரமமாய் யோக சாதனையினுலும், ஆத்ம விசாரணையினுலும் போக்கடித்தால் சித காச (ஜீவாத்மா) சொரூபமாயிருக்கும் நாம் ததா காரமாய் (தான் தானுய்) நின்று விடுவோம். இவ்வாறு நின்றுவிடுவதே முத்தியடைவதென்பதாம்

ஒருவனுக்கு தன் சரீரத்திலிருக்கும் வியாதியைப் போக்கடித்துக் கொள்வதற்கு, வைத்தியனும் ஔடதமும் எப்படி வேண்டுமோ, அதுபோல் தனது மனத்திலிருக்கும் ஆசையென்னும் அழுக்கினைப் போக்கடித்துக் கொள்வதற்கு குருவென்னும் வைத்தியனும், யோகாமிருதமென்னும் ஔஷதமும் அத்தியாவசியமாய் வேண்டற்பாலன.

ஸம்சார நிவர்த்தியானது ஞானத்தினுல் உண்டாகுமேயன்றி கர்மத்தினுல் உண்டாகமாட்டாது; பூர்வ ஜன்ம புண்ணிய கர்மங்களினுல் பரிபக்குவமடைந்து சம்சாரத்திலிருந்து விரக்தியடைந்தவனே ஞானத்திற்கதிகாரி. அவனே மோக்ஷமடைய அருகன் மோட்சமே பந்த விமுக்தியாகிய பிரம்ம ஞான சொரூபம் எனவும், அஞ்ஞானமே பந்தத்திற்குக் காரணமெனவும், விசாரித்துத் தெளிதலே மானுட யாக்கையெடுத்ததனுலான பயன். ஆகவே, ஒவ்வொருவரும் ஸத்குருமுகமாய்ச் சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து அவரால் உபதேசம் பெற்று, அவ்வழியே அநுட்டித்து வந்தால், சிறுகச்சிறுக மேலெடுக்கும் ஜன்மங்களில் சகல ஆசைகளும் விட்டு நீங்கும்:

அறியாத பாவிக்கு ஞானமேது
ஸச்சிதானந்தன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பிரம்மைக்கிய மென்னுடைய நூலைப்பாரு
விரிவாசச் சித்தர்சொன்ன நூலை யெல்லாம்
வீணுக மறைப்பாகச் சொன்னுரையா
குறியான அண்டமதை யொளித்தே விட்டார்
கூறினுர் வெவ்வேருய்க் குற்றந் தானே.

ஆகவே, ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தில் சொக்கி இருப்பதே எமது இலட்சியம். இந்த இலட்சியமாக வாழ்ந்து வந்தாற் காலகதியில் நித்தியானந்தம் பெறலாம், என்பதே உறுதி.

ஒழியாப்பிறவி எடுத்தெடுத்தேங்கி உழன்ற நெஞ்சே
அழியாப் பதவிக் கடவுள்தங் கேட்டடியணுதியனே
மழுமான் கரத்தனை மனத்திலுன்னி மால்விடை யானை
விழியாற் புனல்சிந்தி விம்மி அழுநன்மை வேண்டுமென்றே.

(பட்டினத்தார்)

ஆனமுறையில், படிப்பினாலால் மதிநுட்பத்தினால் மாத்திரம் அந்தராத்மாவின் தரிசனம் ஒருவன் பெறமுடியாது. எவ்வளவு வேதம் ஓதினாலும், எவ்வளவு புத்திக்கூர்மையும் அறிவும் படைத்தாலும், எவ்வளவு கல்வி கேள்விகள் அடையப்பெற்றாலும் உள்ளத்தில் மறைந்து நிற்கும் இறையருள்தானே விரும்பினாலொழிய அவன் சொரூபம் தோற்றமாகாது. இதயத்தினுள் வசிக்கும் ஈசுவரன் அருளிருப்பின் இந்த விருப்பம் பொங்கிக் காட்சி பெறுவோம்.

அன்பே உயர்த்தும் ஏணி!

## உலகம் கண்ட உண்மை

### நிலையாமை

1. மண்ணிற்செய்தகலமுடையின் மண்ணில் மண்ணாய்ப் போகுமென
எண்ணி முன்னாள் அக்குயவன் எனையும் மண்ணில் வனைந்தனனால்
உண்மை இதனை உள்ளத்தில் ஊன்றி உணரா மாந்தரெல்லாம்
வெண்மைபேசித் திரிபவரே வீணாய் வாதம் செய்பவரே

2. உண்டவெறியில் முன்னொருநாள் உண்டகலத்தை உடைத்தெறிந்தேன்
துண்டு துண்டாய்ப் போன கலம் துணிந்து மெல்ல எனை நோக்கிப்
பண்டு யானும் உன்வாழ்வைப் பாரில் அடைந்தேன் நீயுமெனக்(கு)
அண்டும் இந்த வாழ்வை இனி அடைவாய் உண்மை என்றதடா.

3. நலஞ்செய் பன்னீர் நாடியொரு நந்தவனத்தை நானடைந்தேன்
உலர்ந்து வெந்து கரிந்தங்கோர் உரோஜா நின்ற நிலைகண்டு
கலந்தநோயும் யா(து) என்றேன் காதில்மெல்ல யான்முன்னம்
மலர்ந்த முகமாய் விளையாடி வாழ்ந்த இடமீ(து) என்றதம்மா.

### விதி

4. எல்லாம் இங்கோர் சூதாட்டம் இரவும்பகலும் மாறுட்டம்
வல்லான் விதியே ஆடுமகன் வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுத்திடுவான் ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லாதாக்கி ஒவ்வொன்றுய்த் திரும்ப அறையில் இட்டிடுவான்

### அவன் செயல்

5. நாடும்வெற்றி தோல்விகள்எந் நாளும் பந்து விரும்பிடுமோ
ஆடுமவரின் அடிக்கேற்ப அங்கும் இங்கும் அலைந்திடுமால்
நீடும் இந்த நிலமீது நின்னைத் தூக்கி இட்ட அவன்
ஈடு செய்வான் இரங்கிடுவான் யாவும் அறிவான் நன்கறிவான்

### விதியின் வலிமை

6. எழுதிச் செல்லும் விதியின்கை எழுதிஎழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றுலும் சூட்சிபலவும் செய்தாலும்
வழுவிப் பின்னும் நீங்கியொரு வார்த்தையேனும் மாற்றிடுமோ
அழுதகண்ணீ ராறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ.

வாணுள் வீணுள்

7. இன்றைக் கின்றைக் கென்றே யா(து) இரவும் பகலும்
உழைத்திடுவீர்
அன்றி நாளைக் காமெனவே அலுப்பில்லாது முயன்றிடு
வீர்
ஒன்று சொல்வன் உண்மை மொழி உறுதியாய்க் கொள்
வீரே
என்றும் மூடர் நன்மையுமக்(கு) இங்கும் இல்லை அங்குமில்லை

8. நாடும் தெய்வம் இது வென்று ஞாலத்தறிய முயல்கின்
ருர்
தேடித் தேடிப் பார்த்ததெலாம் திரைமேல் வந்த திரை
யாகும்
வாடி வாடி நோற்றதெலாம் வாணுள் வீணுள் ஆன
துவே
பாடிப் பாடிப் பெற்றதெலாம் பகலிற் கனவு கண்டதுவே

9. பல நூல் கற்ற காரணமாய்ப் பலரும் சபைகள் பல
கூடிக்
கலகம் வாதம் செய்திடுக கண்டங்கிழிய முழங்கிடுக
மலரும் மலர்கள் வாடலுமிவ் வாழ்வு நிலையா தேட
லுமே
உலகம் கண்ட உண்மைகளாம் உண்டோ மற்ருென்று
ரைத்திடவே.

# குரு உபதேசம்

எனதன்பர்களே!

விசாரணை செய்யாததனல் பந்தமும், விசாரணை செய்
வதனல் மோட்சமும் உண்டாகும். ஆதலால் ஜகத் என்
ருல் எது? ஜீவன் எப்படிப்பட்டது? பரமாத்மா எப்படிப்
பட்டவன்? என்று ஜகத் ஜீவ பரமாத்மலக்ஷங்களை சதா
குருமுகமாய் விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரிப்
பதனல், ஜீவ ஜகத்து இரண்டின் லக்ஷணம் இப்படிப்பட்ட
தென்று விசிதமாய்த் தெரிந்துகொண்டவுடனே, பர
மாத்மா இப்படிப்பட்டவனென்று தெளிவாய்த் தெரிய
வரும். அப்படிப்பட்ட பரமாத்ம லக்ஷணம் தெரிந்தவு
டனே மோட்சம் தனக்குத் தானுகவே சித்திக்கும். ஜீவ
ஜகத்துக்களின் லக்ஷணம் இப்படிப்பட்டதென்று விசாரித்
துத் தெரிந்துகொள்ளாதவன் பரமாத்மாவின் லக்ஷணம்
இப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்ள மாட்டான்.
எவன் பரமாத்மாவை அறியவேண்டுமென்று எண்ணுகி
ருனே அப்படிப்பட்டவன் ஜகத் ஜீவ லக்ஷணங்களை குருமு
கமாய் விசாரித்துத் தெரிந்துகொள்வான். பிறகு பரமாத்
மாவின் லக்ஷணத்தையும் குரு முகமாய் விசாரித்துத்
தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கப்பட்ட முமு
க்ஷுக்கள் ஜீவப்பிரம்மைக்ய வேதாந்தரகஸ்யத்திலும்,
ஷெ நூலாசிரியரால் ஸ்ரீ கிருஷ்ணர் ஜுந சம்வாதரூபமாய்
எழுதிய ஸ்ரீ பகவத்கீதையிலும் வாசித்து இவைகளில் உப
தேசித்திருக்கும் குரு ரகஸ்யார்த்தங்களைக் கிரஹித்து,
சாஸ்திர விசாரணையை விட்டு ஒழித்து மனதை நிறுத்தி
இரவும்பகலுமாய் ஜபத்திலிருக்க நிச்சயம் செய்துகொள்ள
வேண்டுமென்பதே இந் நூலின் கருத்து ஞானிகள், முதல்
கோவில்களுக்குச் சென்று விக்கிரக ஆராதனைகளை (பூஜை
களை)ச் செய்து முடித்து சித்தியடைந்து விட்டபடியால்
அவர்கள் விக்கிரகஆராதனையைச் செய்யவேண்டியதில்லை.
இவர்கள் வெட்டவெளியாயிருக்கும் பரமாத்ம சொரூபத்
தில் மனதை சேர்ப்பிக்கவேண்டுமென்று உபநிஷத்துக்க
ளில் சொல்லியதை இங்கு சம்சாரிகளாகிய உங்களுக்குத்

தெரிவித்திருக்கின்றன. ஆதலால் ஞானிகளைப் போல்
நாமும் அனேக காலம் கோவில்களுக்குச் சென்று மிகவும்
பக்தியுடன் சிவன் விஷ்ணு, முருகன் பூஜைகளைச் செய்து
மனம் பரிபக்குவமடையவேண்டும். பூஜைகளை விசேஷ பக்
தியுடன் பூர்த்தி செய்யாமுன், பக்திக்கு மேல் நான்காம்
படியிலிருக்கும்வெட்டவெளியாகிய பரப்பிரமத்தில் மனதை
லயப்படுத்துவது மிகவும் கஷ்டம். ஆதலால் எல்லோரும்
முதல் கோவில்களுக்குச் சென்று பக்தியைப் பூர்த்திசெய்து
கொள்ளவேண்டும். இவ்வாறு பக்தியைப் பூர்த்தி செய்து
கொண்டபின் மனம் வெகு சுலபமாய்ப் பரப்பிரம்மத்தில்
ஐக்கியமாய் விடும். ஆகவே சம்சாரத்துடனிருக்கும் கிரு
கஸ்தர்களும், மற்றுமுள்ள சாதுக்களும், சிவராஜயோக
சமாதியில் சொல்லியிருக்கும் இரண்டு மந்திரங் [சோகம்—
சோ + ஹம்] களையும் சுவாசம் உட்செல்லும்போதும்,
வெளியில் வரும் போதும், சேர்த்து உள்ளுக்கிழுத்தும்,
வெளியில்விட்டுமாய்ச் ஜபம் செய்து வரல் வேண்டும்.
(சோ, என்று உள்ளும். ஹம் மென்று வெளியேவிடுவது
மாக); செய்துவந்தால் சுவாசம் மனதை வெளியில் ஓட
விடாமல் நிறுத்திப் பிறகு அம்மனதைத் தம்மில் (சுவாசத்
தில்) ஐக்கியம் செய்துகொள்ளும், அப்போது புருஷன் தன்
னைத்தான் மறந்து கல்பொம்மையைப் போல் நின்றுவிடு
வான். இதுவே உபநிஷத்திலுள்ள மஹா ரஹஸ்யம். இது
அனுபவத்தில் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்த
மாய்த் தெரியவரும். ஆகவே, முதலில் விக்கிரக ஆராதனை
செய்துகொண்டு, பின் விசாரணை செய்துகொள்வதே பய
னடைதற்கு வழியாகும்.

இந்த இரகசியங்களை — சிவராஜயோகத்தை ஜீவப்பி
ரமைக்யத்தில் விபரமாய் அறியலாம்.

ரெயிலுக்குப் போகிறவன் தனக்கு வேண்டிய வஸ்துக்
களைத் தன் பிரயாணத்திற்கு எப்படிச் சித்தப்படுத்திக்
கொள்ளுகின்றானோ அதுபோல் நம்முடைய பிராண பிர
யாண காலத்திற்கு முன் வேண்டிய விடயங்களையெல்லாம்

சித்தப்படுத்திக் கொள்ளும் வகைகள் இந்தத் தொகுப்பில் அறிந்து கொண்டு, இன்னும் தேவையானவற்றை ஜீவப்பிர மைக்கயத்திலும் அறிந்துகொள்ளலாம். ஆகவே,

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே – வித்தகமாய்க்
காதி விளையாடி யிருகைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். (பட்டினத்தடிகள்)

நாம் எல்லோரும் உண்பதற்காக வாழ்ந்து கொள்ளாமல். நல் வழியில் வாழ்வதற்கே உண்ண வேண்டும்!

வாதனைப் பழக்கத்தாலே மன்னுயிரெல்லாங் கட்டுண்டு
ஏதமாமந்தப் பழக்கமிறுகுமே வீடரைச் செய்யும்
வேதையில் தாந்திர நழுவுமேல் வேட்கை யாலே
தீதிலோரனேகங் கற்றோர் தீரரென்னினுங் கட்டுண்பர்.

அன்பர்களே விசாரணைகளைச் செய்து உண்மைப் பொருளை அறிந்தவனுயிருந்தாலும், ஜீவராசிகளின் உயிர்களைப் போக்கி அதன் மாமிசங்களைத் தின்று தன் தேகத்தை வளர்ப்பானுகில் நரகத்தையே அடைந்து துக்கமனுபவிக்கவேண்டியதாய் நேரிடும்.

1. உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள
எங்கள் மக்களும் தாங்களு மென்செய்தோம்
பொங்கலிட்டுப் பலியுங் கொடுக்கிறீர்
எங்கள் முறையினை யீசனுர் கேளாரோ.

2. அம்மா வென்றலர ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுட ரெல்லாம் மின்புற்றிருக்கின்றுரே
அம்மா வென்னுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமென்றுற் புசித்தவருக் கென்சொல்வதே.

3. கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோர்டிதானம் வள்ளலாய் வழங்கினுலும்
சங்கையில்லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய் நரகமடைவனன்றே.

ஆதலால் இதுவரையில் தெரியாமல் மாமிசங்களைத் தின்றிருந்தாலும் இப்போது இந்நூலை வாசிக்கும் ஸ்திரீபுருஷர்களாகிய நீங்களெல்லோரும் இனி மாமிசங்களைப் புசிக்காமலிருப்பீர்களாகில் சீக்கிரமாய் உங்களுக்கு ஈஸ்வர அனுக்கிரகம் உண்டாகும். இதை மறந்து வாதனைப்பழக்கத்தாலே ஒருவரையொருவர் பார்த்துப் பழகிக் கொள்வதில் நற்பலன் உண்டாக மாட்டாது. ஆனபடியால் நல்வழியில் வாழ்ந்து கொள்ளும் விவேகம் கொண்டு அவ்வனுக்கிரஹத்தினால் மோக்ஷசாம்ராஜ்ஜியபதவியை தப்பாமல் அடைவோமாக.

யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே.

---

## மனமே எதற்காக நீ சலித்தாய்

1. பரம்பொருளின் திருவடியைச் சதமாகப் பற்றும் உனக்கு, உண்ண உணவும் உடுக்க ஆடையும் தந்து உதவும் பொறுப்பும் அவனுடையதேயாகும். அதைப்பற்றி எள்ளளவும் கவலையுறவேண்டாம்.

2. உன் உடல் பாதுகாப்பைக் கருதி மானிடர் எவரையும் துணையாகப் பற்றி நிற்கவேண்டாம். உலகில் சகல உயிர்களையும் பாதுகாக்கும் இயற்கையாகிய இறைவனின் காருண்யக் கடலில் உனக்கும் இடமுண்டு.

3. அஞ்ஞானமாகிய திரையை அகற்றிப் பரம்பொருளின் தரிசனத்தைக் காண்பிப்பதற்கு தகுதியற்றவரனைவரும், உன்னிடம் தொடர்பற்றவராவார்கள். அவர்களைப்பற்றி உனக்கு ஒன்றுமில்லை.

4. சிந்தனை என்னும் பள்ளியிலே பரம்பொருளாகிய குருவி னுலே உனக்கு சகல கலாதத்துவம்களும் போதிக்கப்படுகின் றன.

5. உனக்கு அத்தியாவசியமாகிய இன்பம், துன்பம் என்ற இரு செல்வங்களையும் அவனே உனக்குத் தந்து உதவுகிறுன். அதை ஆனந்தமாகப் பெற்று அறிவை விருத்தி செய்து கொள்ளும் உரிமை உன்னுடையதே!

6. நீ செல்லும் பக்திமார்க்கத்தில் ஒருவரையொருவர் பிணைத் துக்கொண்டு சேர்ந்து செல்வது உசிதமல்ல. ஒவ்வொருவ ரும் அவரவர் பக்குவநிலைக்குத் தக்கவாறுதான் முன்னேற முடியும்.

எதற்கும் இறைவனை வேண்டித் தியானஞ்செய் மனமே!

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன் கூட்டை வாளாவுள்ளத்தோர் கொடுமைவைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பி நீ வுய்யக்கொள்ளாய் ஒற்றியூ ருடையகோவே.

### புராணம்

புன்நெறிய தனிற்செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்நெறி யொழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
என்னையு மடியனுக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள்போற்றி.

திருச்சிற்றம்பலம்

## ஆன்மாவே தெய்வம்

1. ஆட்டுமடா ஆசையற்று ரோஷமற்று
அன்னை சுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடா நவத் துவாரங்கள் தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாக
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங் கொண்டால்
காமதேனு கற்பகமும் உனக்கே சித்தி
வீட்டிலே தீபம் வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறினுற் றீபம் விழலாய்ப் போமே.

2. சொல்லுகின்றேன் என்மகனே மாணுகேளு
சூட்சமெல்லா மவனுடைய சூட்சமல்லால்
வெல்லுதற்கு வேறுமொரு விதமுங் காணேம்
வெட்டவெளி யொன்றுநிசம் வெளியே மைந்தா
அல்லுகின்ற ஆன்மாவே ஒன்றே தெய்வம்
அவனியிலே தெய்வமுந்தா னையா யில்லை
தள்ளுகின்ற கருவிகளைத் தள்ளினுக்கால்
தானவனைத் தன்னுளே அறியலாமே.

3. நாட்டுவார் சித்தர் ரெல்லாம் பேதமாக
நலம் போலே சாத்திரங்கள் கட்டினுர்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப் பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாராமற்றுன்
காட்டிலே திரிந்தலைந்த மானைப் போல
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே அடைத்திருக்கும் குயிலைப் பாரார்
கூறுத மந்திரத்தின் குறியைப் பாரே.

4. கூறுதமத் மந்திரத்தின் குறியைப் பார்த்துச்
சித்தமொன்று யந்தி சந்தி யுச்சிக்காலம்
தேவனுக்கும் பூசைசெய்து தெளிவு பெற்று
குற்றமது வையாமல் மனதன்பாலே
குருபரனை நோக்கியடா தவமே செய்து
பற்றுசை வைத்து மிகப்பார்க்கும் போது
பாராபரமும் கைவச மாயாவானே. (பக்· 714)

5. அலையு மனத்தை யகத்தடக்கு மவனே
சரியை கடந்தோனும்
அலையு மனத்தை யகத்தடக்குமவனே
கிரியை முடிந்தோனும்
அலையு மனத்தை யகத்தடக்குமவனே
யோக தற்பரனும்
அலையு மனத்தை யகத்தடக்குமவனே
ஞானி யதி சூரன்.

## சம்சாரபந்தம் புருஷனைத் தொடர்வது

இந் நூலுக்கு முக்கிய அங்கமாயிருக்கப்பட்டது சிவராஜ யோகம். இந்த ஸோகம் (ஸோ+கம்) மந்திரம் எவ்விதமாய் உபதேசிக்கவேண்டுபோ அதை உபநிஷத்துக்களின் திருஷ்டாந்தங்களுடன் உபதேசம்பெற வேண்டும். இந்த உபதேசத்தினால் சம்சாரபந்தம் நீங்கி (பந்தத்திலிருந்து விடுபட்டு) இச் சென்மத்திலேயே மோக்ஷத்தை அடையலாம். இந்த சம்சாரபந்தம் புருஷனை எவ்விதமாய்த் தொடர்ந்ததோ அதன் விபரத்தை இதில் சற்றே சுருக்கிச் சொல்லப்பட்டன. அதைக் கவனித்து வாசித்துப் பாருங்கள்.

ஐயா! இந்துஸ்தானி தேசத்தில், ஸத்ஜநகட என்னும் கிராமத்தில் ராமநாதசுவாமி என்னும் மாகானுபாவன் ஒருவனிருந்தானும், அவனது விவாககாலத்தில், அவன் மாங்ஹல்யம் தரிக்கப்போவதற்குமுன் தம்பதிகளுக்கு மத்தியில் திரைபோட்டு வைத்தார்கள். அந்தச் சமயத்தில் பிராமணர்களெல்லோரும் அதிசுமுகூத்த ஸாவதாந, அதிசு லக்ந ஸாவதாந, என்று எல்லோரும் ஒரே சப்தமாய்க் கூச்சலிட்டார்கள். அப்போது தன் சமீபமாயிருக்கும் ஒரு பிராமணனைப் பார்த்து ஸாவதாந, ஸாவதாந, என்று எல்லோரும் கூச்சலிடுகின்றார்களே அது என்ன விஷயமென்று மாப்பிள்ளைக் கேட்டான். இப்போது ராக்ஷசி உன் கழுத்தில் வந்து விழப் போகிறாள், ஆதலால் நீ

சாவதானமாயிரு, ஏதாகிலும் உபாயமிருந்தால் அது போல் செய்யென்று ஸர்வமுனிஜனங்களும் உன்மீது கிருபையுடையவர் களாயிருந்து உன்னை ஜாக்கிரதைப்படும்படி சொல்லுகின்றார் களென்று அந்தப் பிராமணன் சொல்லினன். அந்த வார்த்தை மாப்பிள்ளையினது செவியில் வீழ்ந்தவுடனே, அவன் திரையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டான். மறுபடியும் அவன் விவாகம் செய்துகொள்ளவில்லை (இவை இப்படிக்கு கர்மவினையிருந்தால்) புருஷர்கள் கேளாமல், ஸ்திரீ மீதிருக்கும் மோஹாந்தகாரணத்தினால் அவளைத்தன்வசப்படுத்திக்கொண்டு எங்கும் ஓடாமலிருப்பதற்காக, முதல் முதல் மங்கள சூத்திர ரூபமான பாசக்கயிற்றை அவளது கழுத்தில் போடுகிறார்கள். இந்த இக்ஷிசி ஒருவேளை அந்தப் பாசக் கயிற்றிற்கும் உட்படமாட்டாளென்று எண்ணி நவரத்தின ஆபரண ரூபமாய்ச் செய்த அனேக தங்கமாலைகளாகிய பாசக்கயிறுகளும் அவள் கழுத்தில் போட்டு அவள் இவைகளுக்கும் உட்படமாட்டாளென்றுநினைத்து கைகளையும் கால்களையும் கட்டுவதற்காக ஆபரண ரூபமாயிருக்கும் பொன் வெள்ளி விலங்குகளையும் மாட்டி, அதிகமாய் வாயாடாமலிருக்கக் கண்டத்தையிறுக்கிப் பிடிப்பதற்காகக் கெம்புரவைகளால் செய்த அட்டிகைகளை கழுத்தில் இழுத்துக் கட்டும்படி, புருஷன் செய்விக்கிறான். இப்படிப்பட்ட ஆபரண ரூபமாகிய பாசக்கயிற்றால் அவளை இறுக்கிக் கட்டி எங்கும் ஓடவிடாமல் தன்னுடன் அழைத்துச் செல்வதற்காகத் தன் வலது கைச் சுண்டுவிரலால் அவளது இடதுகைச் சுண்டுவிரலைப் பிடித்து விவாகரூபமாய் இழுத்துக்கொண்டு செல்கின்றான். அவளைத் தன் வசமாய்ச் செய்து கொள்ள இப்படிப்பட்ட ஆபரணதி பாசக்கயிறுகளால் அலங்கரித்து இழுத்துக்கொண்டு சென்றபோதிலும் நாளாவட்டத்தில் அவனுடைய சாமர்த்தியங்களெல்லாம் ஒழிந்து கேவலமூடனாய், அவள் வலையில் அகப்பட்டு அவளது ஆதீனமாய் அவள் நில்லென்றால் நிற்பதும் போவென்றால் போவதுமாயிருப்பான் இப்படிப்பட்ட அபவித்திர ராக்ஷசியை மோகிப்பதனால் அவ்விடம் என்ன இருக்கின்றது? சுகமா? அல்லது புருஷார்த்தமா? அவளால் துக்கங்களேயொழிய வேறு ஏதாகிலும் உண்டோ? ஒன்றுமில்லையல்லவா, எப்படிப்பட்டவளை மனைவியென்று சொல்லலாமென்றால்:-

புருஷனது சர்வ காரியங்களிலும் யுத்தா அயுக்தங்களைச் சொல்லுவதில் மந்திரியைப்போலவும், சரீரசம்ரக்ஷயில் தாதியைப் போலவும், பிரியத்துடன் புஜிக்கும்படிச் செய்வதில் தாயைப்போலவும், காமபோகத்தில் ரம்பையைப் போலவும் குலத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் மதத்திற்கும் தகுந்த நடவடிக்கையுடையவளும், பூமிதேவியைப் போன்ற சாந்த குணமுடையவளுமானமனைவியே குலத்தை உத்தரிக்கப்பட்டவளென்று வேதசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதனுல் இப்படிப்பட்டவளையே மனைவியென்று சொல்லலாம்.

அன்னை தயையு மடியாள் பணியு மலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும் — வன்னமுலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசிலிவை யுடையாள் பெண்.

அஃதொழிய, புருஷனுடன் வாதாடி துர்ப்பாஷைகளால் தூஷித்துக் கொண்டிருப்பவள் உத்தம ஸ்திரீயாக மாட்டாள். இப்படிப்பட்ட ஸ்திரீயுடன் கூடியிருப்பதைவிட,

பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடியிருக்கலாம் — சற்றேனும்
ஏறுமாருகி யிருப்பாளே யாமாகிற்
கூறுமற் சந்நியாசங் கொள்.

பர்த்தாவின் வார்த்தைப்படி நடவாத பெண்ணுடன் கூடியிருப்பதைவிட அவளை விட்டுச் சந்நியாசங் கொள்வதே உத்தமம். ஆதலால் இந்தச் சகல பிரபஞ்சமும் மாயையால் கட்டுப்பட்டிருக்கின்றன. இந்த மாயாப் பிரபஞ்சமோ கயிற்றைப் பார்த்து சர்ப்பமென்று பயப்படுவதுபோல் இருக்கின்றதென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லியிருக்கின்ருர். அதாவது;

இரவில் வழி நடக்கும் போது தன் எதிரில் கயிறு வீழ்ந்திருந்தபோதிலும் அதைக் கயிறென்று நினையாமல் பாம்பென்று நினைத்துக் கலவரப்பட்டுப் பிரமை அடைகின்ருன். பிறகு, கயிறென்று அறிந்த மற்றொருவ புருஷன் பயப்படாதே, அது பாம்

பல்ல, கயிறு என்று சொன்ன பிறகு பாம்பென்னும் பிரமை எப்படி நாசமாகின்றதோ அதுபோல், ஆத்மாவே தானென்று அறியாமல், ஜீவனென்று எண்ணி பிரமை அடைந்த புருஷன் குரு உபதேசத்தினுல் நான் ஜீவனல்ல, ஆத்ம சொரூபியாகிய நானே பரமாத்மா என்று தெரிந்துகொள்வான். ஆதலால், ஒருவன் கயிற்றைப் பார்த்துப் பாம்பென்று பிரமை அடைவது போல், ஜனங்களெல்லோரும் இந்த மாயாப் பிரபஞ்சத்தைப் பார்த்து நிஜமான பிரபசஞ்மென்று நம்பி மோசம் போகிறுர்கள். இப்படி மோசம்போவதனுல் கயிறு சர்ப்ப திருஸ்ட்டாந்தமாய் வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை வருமாறு;-

ஒரு கிருகஸ்த்தன் வீட்டிற்கு எதிரில் கிணறு ஒன்றுண்டு, அவ்வூரிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஜலம் எடுக்க அந்தக் கிணற்றிற்கு வருவதுண்டு. ஒருநாள் மாலை தீபம் வைக்கும் சமயத்தில் ஒரு ஸ்த்திரி ஜலம் எடுக்க மிடா எடுத்துக்கொண்டு அந்தக் கிணற்றண்டை வந்து, பாம்பு, பாம்பு! ஓ! அம்மா! எவ்வளவு பெரிய பாம்பு! என்று உரத்த சத்தத்துடன் கூக்குரலிட்டு மிடாவைப் போட்டு மூர்ச்சையாய்க் கீழே வீழ்ந்தாள். அவளது கூச்சலைக் கேட்டுச் சுற்றுப் பக்கங்களிலிருந்த ஜனங்களெல்லோரும் ஓடிவந்து தூரமாய் நின்று பார்த்திருந்தார்கள். அவர்களில் இரண்டு புருஷர்கள், மூர்ச்சையாய் வீழ்ந்து கிடக்கும் ஸ்த்திரீயினுடைய கையைப் பிடித்துத் தொட்டுப்பார்த்து உபசரித்தார்கள். ஒருவன் தூரமாய் நின்று சூ! சா! என்று கூச்சலிட ஆரம்பித்தான். மூன்று புருஷர்கள் மூர்ச்சையாய் வீழ்ந்தார்கள். ஒருவன் துப்பாக்கியிற் தோட்டப் போட்டுக் கொண்டு தூரமாய் நின்று பாம்பைக் குறிபார்த்தான். ஒருவன் பெரிய தடிகொண்டு அடிக்கப் பிரயத்தனப்பட்டான். ஒருவன் உறையிலிருந்த கத்தியைஉருவி வெட்ட ஆரம்பித்தான். ஒருவன் பெரிய கல்லைத் தலைக்குமேலெடுத்து அதன்மேல் போட ஆரம்பித்தான் அதிக பயமுடைய ஒருவன் செடியின் மீதேறி அம்பில் பாணத்தைப் பூட்டி அப் பாம்பின்மேல் பிரயோகஞ்செய்ய குறிபார்த்து நின்றுன். ஒரு பாம்பாட்டி வந்து மோடி வாசிக்க ஆரம்பித்

தான். ஒருவன் மீசையை உருவிக்கொண்டு நின்றான். ஒருவன் பிரம்பினால் பாம்பை அதட்டினான். ஒரு ஸ்த்திரி குழந்தையைத் தூக்கிப் பாம்பைக் காட்டினாள் சில ஸ்திரிகளும் புருஷர்களும் தூரமாய் நின்று வேடிக்கைபார்த்திருந்தார்கள். இவ்விதமாய் அனேகர்கள் அனேக விதங்களாய் அந்தப் பாம்பைக் கொல்லப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்விதமாய் இருக்கும்போது அந்த வீட்டிலுள்ள தைரியமுடைய ஒரு கிழவி இந்தக் கூச்சலையெல்லாங் கேட்டு ஓர் அகல் விளக்கை ஏற்றிக்கொண்டு மெதுவாய் அந்தப் பாம்பினிடஞ் சென்று நின்றாள். பாம்பின்மீது தீபப் பிரகாசம் பட்டவுடனே ஜனங்களெல்லோரும் கயிறு, கயிறு, என்று சொல்லிக், கல்லென்று சிரித்தார்கள். இதற்குள் அந்த வீட்டில் வேலைசெய்பவன் வெளியில் சென்றிருந்து மறுபடியும் தாம்புக் கயிற்றைக் கொண்டு போகக் கிணற்றினிடம் வந்து பார்த்தான். அப்போது இவர்கள் செய்துகொண்டிருக்கும் அட்டகாசங்களையெல்லாம் பார்த்து விழுந்து விழுந்து சிரித்து இராட்டினத்தின் மீதிருந்த தாம்புக்கயிற்றைச் சுற்றி தொட்டியின் மீது நானே வைத்தேன் என்று சொன்னான். அதைக்கேட்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், கயிறு இருந்த இடத்தில் பாம்பின் பிரமை தோன்றிற்று. அதனால் பாம்பைக் கொல்ல அனேக ஜனங்கள் அனேக உபாயம் செய்தபோதிலும் அவைகளெல்லாம் வியர்த்தமாயிற்று. கடைசியில் கிழவியால் கொண்டுவரப்பட்ட தீபப் பிரகாசத்தினால் பாம்பின் பிரமை நீங்கிக் கயிறாய்க் காணப்பட்டது. அதனால் எல்லோருடைய சந்தேகமும் நிவாரணையாய் ஆச்சரியத்தை உண்டாக்கியது கிழவியினுடைய தீபமல்லவோ? அதுபோல் சம்சாரமென்பது ஒரு பெரிய பாம்பாயிருக்கின்றது. இது ஆதியில் பிரமசிருஷ்டியினால் உண்டாகிய அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம், பிராந்தியினால் உண்டாயிற்று. ஆதலால், இந்தச் சம்சாரசர்ப்பம் அனேக ஜன்மங்களாய்ப் புருஷனுடன் கூடவே வந்துகொண்டிருக்கின்றது: இதிலிருந்து தப்பித்துக்கொள்ள அனேகர்கள் அனேக உபாயங்களைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அவை வருமாறு:-

சிலர் கஞ்சாப் புகை சாப்பிடுவதும், சிலர் ஜபஞ் செய்வதும், சிலர் தியானம் செய்வதும். சிலர் தீர்த்தயாத்திரை செய்வதும், சிலர் கர்மாநுஸ்டானங்களைச் செய்வதும், சிலர் பூசை செய்வதும், சிலர் யாகங்களைச் செய்வதும், சிலர் பஜனைகளைச் செய்வதும், சிலர் விசேஷ தர்மங்களைச் செய்வதும், சிலர் கோவில் குளம் சத்திரங்கள் முதலானவைகளைக் கட்டுவதுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட உபாயங்களினால் இந்தச் சம்சார சர்ப்பம் நாசமாகமாட்டாது. பின் எப்படி நாசமாகுமென்றால் ஞான விருத்திக்காக சமாதி சாதனம் செய்து வரவேண்டும். அதாவது, சுத்த அசலமாகிய (சலிக்காத) அந்தக்கரணம், என்னும் அகலில் ''அஹம்பிரம்மாஸ்மி'' என்னும் ''ஸோஹம்'' மந்திரச் சுடரினால் 'நான், என்னும் தீபத்தைப் பிரகாசிக்கச் செய்தால் அந்தச் க்ஷணமே சம்சாரசர்ப்பம் இறந்து ஸச்சிதானந்த பிரம சொரூப தரிசனமாய் ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்கலாம். இதற்கு திருஷ்ட்டாந்தம் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் - 17 சுலோகம் - 16 பார்க்க.

மனதை, காமக்குரோதாதிகளென்னும் ஆசாபாசங்களில் போகவிடாமல் பரிசுத்தமாய் வைத்திருந்தால், மனதில் சந்தோசமென்ற அகக் குறி முகத்தில் விளங்கி விகசித்திருக்கும். மனம், அப்படிப்பட்ட விகாரங்களில் போகாமலிருப்பதனால் வாய் திறவாமலிருக்கும். வாய் திறவாமலிருந்து மனதை அகமுகப்படுத்தி ஆத்மாவில் சேர்ப்பித்தால். அப்போது மனதிற்கு உண்டாகும் சங்கற்ப விகற்பங்களெல்லாம் அதனிடமே கலந்து ஏகமாய்ப் போகும். இதுவே மனதினால் செய்யத்தக்க தவமென்று சொல்லப்படும். ஆதலால் கயிறு பாம்பாய்த் தோன்றிய திருஷ்டாந்தம் வேதாந்த சாஸ்திரத்திற்குப் பிரமாணமாய்க் காட்டப்பட்டது. பிராணனில்லாதசரீரம் எப்படி வியர்த்தமோ அதுபோல் சர்ப்பக்கயிறு திருஷ்டாந்தம் இல்லாவிட்டால், வேதாந்த சாஸ்திரத்தை ஸ்திரப்படுத்துவதற்குச் சாத்தியமாகமாட்டா.

ஓங்கார ரூபமாய் நிர்க்குணமாய் பரப்பிரம்ம சொரூபமாயிருப்பதை இந்நூலில் உபதேசிக்கப்பட்டன. அதைச் சதா

காலமும் அப்பியசித்துக் கொண்டுவரவேண்டும். இந்த நிர்க்குணத் தியானம் செய்ய சாத்தியமாகாவிட்டால், சகுணரூபமாகிய விக்கிரக ஆராதனைகளைச் செய்துவரவேண்டும். இந்தச் சகுணத் தியானம் சாத்தியமாகாவிட்டால், நிஷ்க்காமகர்மத்துடன் ஒரு ரூபத்தை நிறுத்தி பரமாத்ம சொரூபமாய் நினைத்து பஜனைகளைச் செய்துவரவேண்டும். நிஷ்க்காம கர்மரூபமான பஜனைகளைச் செய்யச் சாத்தியமாகாவிட்டால், காம்ய கர்மங்களை அதாவது கோரிக்கையுடைய கர்மங்களைச் செய்துவரவேண்டும். கோரிக்கையுடன் கூடிய கர்மங்களைச் செய்யச் சக்தியில்லாவிட்டால் வாரம் வாரம் அதாவது, ஞாயிறு திங்கள். செவ்வாய், புதன். வியாழன், வெள்ளி; சனி, என்னும் இந்த ஏழு நாட்களிலும், ஜன்மங்கள்தோறும் பிறந்துகொண்டும், இறந்து கொண்டுமாயிருப்பதே திண்ணம்.

ஆதலால் முன் சொல்லிய கயிற்றைப் பார்த்துப் பாம்பென்று எல்லோரும் பிரமையடைந்து மதிமயங்கி இருக்கும் போது கிழவியால் கொண்டுவரப்பட்ட தீபப் பிரகாசத்தினுல். யதார்த்தமான கயிறு காணப்பட்டு, பாம்பின் பிரமை நீங்கி சந்தேகம் நிவர்த்தியானதுபோல், இந்த உபதேசமானது கிழவியால் கொண்டு வரப்பட்ட தீபம் போலிருந்து சகலருடைய சந்தேகங்களையும் போக்கடித்து நிராகார பிரம்மத்தைத் தரிசிக்கும்படிச் செய்விக்குமென்று அறியக்கடவீர்களாக.

# பிணத்தைப் பார்த்து விசனப்படுபவர்களின் சோகம் நிவிர்த்தி அடைய உபதேசித்தல்

எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லாரென்னுன் நல்குரவறியான்
தீயார் என்னுன் செல்வரென் றுன்னுன்
தரியா னெருகணம் தறுகணுளன்
உயிர் கொடு போவான் உடல் கொடு போகான்:
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்.

ஓ சகோதரிகளே! ஓ சகோதரர்களே! உங்கள் குடும்ப சம்ரக்ஷணையில் தெய்வ விதிப்படி யாவரேனும் மரணமடைந்தால் அவர்களுக்காக நீங்கள் விசனப்படவேண்டாம். அவர்கள் நம்முடன் கூட வந்தவர்களுமல்லர், வரப்பட்டவர்களுமல்லர், சந்தையின் கூட்டம்போல் மத்தியில் வந்து மத்தியிலேயே சென்றுவிடுகிறுர்கள். புத்திர, பௌத்திர, களத்திர, மித்திராதிகளின் முற்பிறப்பு நமக்குத் தெரியவரமாட்டா. அவர்கள் பிறந்த பின்புதான் நம்முடையவர்களென்று தோன்றி ஆசை என்னும் பிரமையை உண்டாக்குகிறுர்கள். மறுபடியும் அவர்கள் மரணமடைந்த பிறகு எப்படி ஆகின்றுர்களோ தெரியவராது. மத்தியில் சிலநாள் மாத்திரம் நம்முடையவர்களென்று பிரமையை உண்டாக்கும் புத்திர களத்திராதிகளைக் குறித்து ஏன் விசனப்படவேண்டும். காணப்படும் வஸ்துக்களெல்லாம் நசிப்பது நிச்சயம். இந்தப் பந்துக்களில் சிலர் உங்களுக்கு முன் பிறந்தவர்களும் சிலர் பின் பிறந்தவர்களுமாயிருக்கின்றுர்களல்லவா? உங்களுக்கு முன் பிறந்தவர்களுக்குப் பின் நீங்கள் பிறவாமலிருந்தபோது அவர்களுக்கு நீங்கள் என்ன உறவாயிருந்தீர்கள்? நீங்களும் அவர்களும் பிறப்பதற்குமுன்னே எவ்விடத்தில் எப்படி இருந்தோமென்று சொல்ல யாதொன்றும் உங்களுக்குத் தெரியவரமாட்டாதல்லவா? நல்லது, அவர்கள் இறந்தபிறகாயினும்

எவ்விடத்தில் எப்படி இருக்கிறீர்களோ அது உங்களுக்குத் தெரியவருமா? அதுவும் தெரிய வரமாட்டாதல்லவா? அவர்கள் பிறந்து ஜீவித்திருக்குங்காலம் வரையில் மாத்திரம் உங்களுக்குக் காணப் படுகிறீர்களேயன்றி, பிறப்பதற்கு முன்னும் இறந்தபின்னும் எவ்விடத்தில் எப்படியிருக்கிறீர்களோ என்பதும் உங்களுக்குத் எதரியவரமாட்டாதல்லவா? அப்படி வியசனப்படுவது அறியாத் தன்மையினாலேயே யன்றி வேறல்ல. ஆத்மா அநாத்மா. விவேகமில்லாதவர்கள் வியசனப்படுவார்களேயன்றி, ஆத்மா நாத்ம விவேகமுடையவர்கள் ஜீவித்திருக்கப்பட்டவர்களைப் குறித்தேனும் இறந்தவர்களைக் குறித்தேனும், சந்தோஷமும் வியசனமும் படமாட்டார்கள். ஒரு தேகம் மரணமடைந்தால் அந்தத் தேகத்திலுள்ள ஆத்மாவும் மரணமடைகின்றதென்று எண்ணுகிறீர்களோ யென்ன? அப்படி எண்ண வேண்டாம், அதற்குக் காரணம் சொல்லப்படுசின்றன கேளுங்கள்.

மரணமடைவதென்றால், சாஸ்வதமா யிருக்கப்பட்ட ஆத்மா, ஒரு தேகத்தினின்று மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பது. ஆத்மா, எந்தத் தேகத்தினின்று கிளம்பிவிடுகின்றதோ, அந்தத் தேகம் மாத்திரம் மரணமடைந்ததாகின்றது. அதிலிருந்து ஆத்மா அத்தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிக்கும். அதில் சிலநாள் குடியிருந்து அந்தத் தேகத்தையும் விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்து இப்படியே எப்பொழுதும் ஆத்மா, எதையோ ஒரு தேகத்தை ஆசிநயித்துக் கொண்டேயிருக்கும். ஆதலால், அசத்தாகிய தேகாதி சர்வப் பிரபஞ்சமும், கானல் ஜலத்தை முதல் பார்த்தவுடன் அது நிஜமாகிய ஜலம்போல் தோன்றிப் பிறகு அது ஜலமல்லவென்று அறிந்த ஒருவன் மற்றொருவனை நம்பும்படிச் சொல்லியும், சமீடத்தில் அழைத்துச் சென்று காட்டியும், அவன் சம்சயம் எப்படி நசிக்கப்படுகிறதோ, அதுபோல் நசிக்கப்பட வேண்டும். அனேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ணிய விஷேஷத்தினால் ஆத்மாவின் நிஜ சொரூபம் தெரிந்த பிறகு ஜனன மரணங்களுக்குக் காரணமாயிருக்கும் சஞ்சிதமென்னும்

மூட்டை நசிக்கும். இந்தச் சஞ்சிதமென்னும் மூட்டை நஸித்தவுடன ஜீவசொரூபியாயிருக்கும் ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகுமேயன்றி, பஞ்சபூதங்களால் உண்டாகிய தேகத்தைப் போல் சொரூபம் நாசமாகப் பட்டதல்ல. அதாவது, பஞ்சபூதங்களினுல் உண்டாகிய தேகம் மாத்திரம் நாசமடையத்தக்கதென்றும், ஆத்மா நித்தியமாகிய வஸ்த்து வென்றும் அறிய வேண்டும்.

ஓ சகோதரர்களே! இந்த ஆத்மா பரப்பிம்மத்தின் அம்சமேயன்றி வேறல்ல அதுவே சகல ஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றது. அது பிரகிருதி சம்பந்தத்தை அடைந்திருப்பதனுல் அதற்கு ஜீவாத்மா என்று சொல்லப்படும். பிரகிருதி என்ருல் மாயை, இதற்கே அவித்தை யென்றும், அஞ்ஞானமென்றும் நாமங்களுண்டு, பரமாத்மாவானது அப்பேற்பட்ட அஞ்ஞான சம்பந்தமில்லாமல் சுயம் பிரகாசமாயிருக்கும். அதனுலேயே அது பரமாத்மாவெனப்படும். அந்தப் பரமாத்மா பிறப்பு இறப்பு உயர்வு தாழ்வு முதலான எவ்வித விகாரங்களும் இல்லாததாய் எப்பொழுதும் ஒரேவிதமாயிருக்கும். அப்படிப்பட்ட பரமாத்மாவே உங்கள் முதலானவர்களிடத்திலும் இருக்கும் ஆத்மா அது, பிரகிருதி சம்பந்தமான அஞ்ஞானத்துடன் கூடியிருக்கும் வரையில் பிறப்பு இறப்பு அதாவது, ஒரு தேகத்தை விட்டு மற்ெருரு தேகத்தில் பிரவேசித்தல் முதலான விகாரங்களை அடைவதனுல் அது. ஜீவாத்மாவென்றே சொல்லப்படுகிறது. இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது அஞ்ஞானம் விட்டு ஒழிகின்றதோ அப்பொழூதே அது பரமாத்மாவில் கலக்கும். அப்படிக் கலந்த பிறகு அதற்கு ஜனன மரணுதி விகாரங்கள் உண்டாகமாட்டா. பரமாத்மாவில் கலத்தலே, மோக்ஷம் எனப்படும் இதற்குத் திருஷ்டாந்தம். ஸ்ரீ கிருஷ்ணுர்ஜுந சமவாத ரூபமாய் எளுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 2. சுலோகம் :- 16.

கிருஷ்ணன்;- ஸத் என்ருல் நித்தியமான (கெடாத) பதார்த்தம். அஸத்தென்ருல், அநித்தியமான (நசிக்கத்தக்க) பதார்த்தம். ஸத் பதார்த்தத்திற்கு அநித்தியமும், அஸத்

பதார்த்தத்திற்கு நித்தியமும் எக்காலத்திலும் உண்டாக மாட்டா. இவ்விரண்டு பதார்த்தங்களின் ரகஸ்யம் தத்வ வேத்தர்கள் (ஞானிகள்) அறிவார்களேயன்றி, மற்றவர்கள் அறிய மாட்டார்கள். அர்ஜுநன்:- ஸத் என்ருல் ஏது? அஸத் என்ருல் ஏது?

கிருஷ்ணன்:- என்னிடத்திலிருக்கும் பரமாத்மாவும், உன்னிடத்திலும் நம் எதிரிலிருக்கும் ராஜர்களிடத்திலும் இன்னும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பிபீலிகாதி என்ருல் கண்களுக்குக் காணப்படாத சிறிய புழு முதல் பிரமபரியந்தம் சமஸ்த ஜந்துக்களிடத்திலும் இருக்கப்பட்ட ஜீவாத்மாவும் எந்தக்காலத்திலும் நசிக்கத்தக்கதல்ல ஆதலால், இந்தப் பரமாத்மா 'ஸத்' என்றும் மற்ற திருஸ்ய (கண்களுக்குக் காணப்படும்) பிரபஞ்சமெல்லாம் நசிக்கப்ப்டுவதாதலால் 'அஸத் என்றும் சொல்லப்படும்.

அர்ஜுநன்::- உம்மிடத்தில் இருப்பது பரமாத்மாவென்றும், நான் முதலான மற்ற ஜந்துக்களிடத்தில் இருப்பது ஜீவாத்மாவென்றுப் சொன்னீரல்லவா? அங்ஙனம் கூறுவதற்குக் காரணமென்ன? பரமாத்மா ஜீவாத்மாக்கள் வெவ்வேறு வஸ்த்துக்களா? அப்படியானுல், அவ்விரண்டிற்குமுள்ள பேதமென்ன? நான் முதலான மற்ற ஜந்துக்களில் வியாபித்திருப்பது ஜீவாத்மா என்றீரல்லவா? அந்த ஜீவாத்மாவொன்றே சகல ஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றதா? அல்லது அந்தந்த ஜந்துக்களில் வெவ்வேறு ஜீவாத்மாக்கள் வியாபித்திருக்கின்றனவா? இந்த ஜீவாத்மா பரமாத்மாக்கள் மாத்திரம் எப்படி நாசமில்லாமலிருக்கும்.

கிருஷ்ணன்:- பரமாத்மாவென்ருல், சகல பிரபஞ்சங்களையும் சிருஷ்டிக்கப்பட்டதும் அழிக்கப்பட்டதுமாகிய பரப்பிரம்மத்திற்குப் பெயர் ஜீவாத்மாவென்ருல், அந்தப் பரப்பிரம்மத்தின் அம்சமேயன்றி வேறல்ல. அதுவே சகல ஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றது. அந்த ஜீவாத்மா மாயையுடன் சம்பந்தப் பட்டிருப்பதனுல் அதற்கு ஜீவாத்மாவென்று சொல்லப்

படும். இந்த மாயையே அவித்தை யென்றும், அஞ்ஞான மென்றும். சொல்லப்படும். பரமாத்மாவானது அப்பேற்பட்ட அஞ்ஞான சம்பந்தமில்லாமல் சுயம் பிரகாசமாயிருக்கும். அதனுலேயே அது பரமாத்மாவென்று சொல்லப்படும். அந்தப் பரமாத்மா, பிறப்பு, இறப்பு. உயர்வு தாழ்வு முதலான எவ்வித விகாரங்களுமில்லாமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும். அப்படிப்பட்ட பரமாத்மாவே உன்முதலானவரிடத்திலும் இருக்கும் ஆத்மா, அது மாயையுடன் கூடியிருக்கின்றது. அது மாயையுடன் கூடியிருக்கும் வரையில் பிறப்பு, இறப்பு, அதாவது. ஒரு தேகத்தைவிட்டு மற்ெருரு தேகத்தில் போய்ப் பிரவேசிப்பது முதலாகிய விகாரங்களை அடைவதனுல் அது, ஜீவாத்மாவென்றே சொல்லப்படும். இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது மாயை விட்டு ஒழிகின்றதோ அப்பொழுதே அது பரமாத்மாவில் கலக்கும். அப்படிக் கலந்த பிறகு அதற்கு ஜனன மரணுதி விகாரங்கள் உண்டாகமாட்டா. பரமாத்மாவில் ஜீவாத்மா சேருவதே மோக்ஷம் எனப்படும். இதற்குத் திருஷ்டாந்தம் சொல்கின்றேன் கேள்:-

கிருஷ்ணன்:- இவ்வுலகில் சுயமாயிருக்கப்பட்ட சொர்ணத்திற்குத் தங்கம் அல்லது அபரஞ்சியென்றும், செம்பு முதலான உலோகத்தினுல் கலந்திருக்கும் சொர்ணத்திற்குப் பொன் என்றும் நாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அப்படி நாம பேதங்கள் உண்டான காரணத்தையும் அவற்றின் பேதத்தையும் நீ அறிவாயா?

அர்ஜுநன்:- ஆம் அறிவேன் தங்கம் சுயமானது அதாவது, வேறு எந்த லோகங்களுடனும் கலக்காமலிருப்பது; அதனை எத்தனைமுறை உருக்கினுலும் அல்லது புடம் வைத்தாலும் அது, தன் மாற்றிலாவது குறைவதும் உயர்வதும் இல்லை. பொன்னைப் புடம் வைத்தால் அதன் மாற்று உயர்ந்து, எடை குறைந்து கொண்டே வரும். அப்படியே புடம் போடப் போட அதிலிருக்கும் அழுக்குகளெல்லாம் ஒழிந்து அதுவும் சுயமான தங்கமாகும் அதன்பிறகு, அதை எத்தனை புடங்களிட்டாலும் அது, மாற்றும் எடையும் குறையாமலும் உயராமலும் தங்கமேயாகும்.

கிருஷ்ணன்:- ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கும் உள்ள பேதங்களும் அதுபோல் ஆகுமென்று அறிக. ஜீவாத்மா பொன்னைப் போன்றதும், பரமாத்மா தங்கத்தைப் போன்றதுமாகும். தங்கத்தை எத்தனை புடங்களிட்டாலும் அது மாற்றிலாயினும் எப்படி மாறுவதில்லையோ அதுபோல், பரமாத்மா எப்பொழுதும் எந்த விகாரங்களையும் அடையாமல் ஒரே விதமாயிருக்கும். பொன்னானது புடங்களால் எடை குறைந்து கொண்டும், மாற்று உயர்ந்துகொண்டும் வரவர அதிலிருச்கும் அழுக்குகளெல்லாம் நீங்கிச் சுயமான நிறமாய் அதுவும் தங்கத்துடன் எப்படிக் கலக்கின்றதோ அதுபோல் சீவாத்மாவும் அனேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த நிஷ்க்காம்ய தவத்தினால் அஞ்ஞானம் நீங்கிக் கொண்டே வரவர, கடைசியில் அஞ்ஞானம் பூர்த்தியாய் நீங்கினபிறகு பரமாத்மாவில் கலக்கின்றது. இதற்குப் பின் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். ஆதலால், உங்கள் குடும்பத்தில் இறந்தவர்களைக்குறித்து வியசனம் உண்டான போதெல்லாம் மேற்படி கீதையில் வாசித்தறிந்தால் சோகம் தீர்ந்து மனம் சாந்தியடையும். ஆதலால்,

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றே னென்பீர்
கண்ணேடே கருத்தேடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடு வந்தாரைப் பார்க்கவே நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர்
குறியோடே குணத்தோடே குறிப்பதைக் குறியீர்
எட்டுடன் ரெண்டும் சேர்ந்தெண்ணவும் அறியீர்
எத்தொழிலைப் புரிகின்றீர் பித்துலகீரே!

என்னும் திருவருட்பிரகாச வள்ளலார் வாக்கிய ரீதியாய், உலகத்திலுள்ள ஜனங்களாகிய நீ. நீங்களெல்லோரும், பந்து மித்திர களத்திராதிகளென்னும் கூட்டத்துடன் சேர்ந்து பெருங் கௌரவத்துடன் வாழ்கின்றோமென்றும் நினைக்கிறீர்கள். ஓ ஸ்த்திரீகளே! பட்டுப் பீதாம்பர ஆடைகளையும் வைரத்தினால்

செய்த உயர்ந்த ஆபரணங்களையும் அணியவேண்டுமென்னும் கருத்துடனிருக்கின்றீர்கள். இது போல் புருஷர்களாகிய நீங்களும், பட்டு பீதாம்பரங்கள் சரிகை வேஷ்டி முதலான ஆடைகளும், ருத்திராக்ஷங்களுக்குத் தங்கக்கவசங்களும் அணிந்து, உங்கள் குடும்ப சரவணைக்கு வேண்டிய விஷயங்களை மாத்திரம் செய்துகொண்டு, பசியுடன் வந்தவர்களை ஆதரிக்காமல் அனேக விதங்களான மேள வாத்தியங்களுடன் மிகவும் சந்தோஷமாய் ஊர்க்கோலம் வருகின்றீர்கள். இப்படிப்பட்ட அல்ப விஷயங்களான சந்தோஷத்தை அடைந்து உங்களுக்கு முக்கியமான குறி எதுவோ அதைப் பார்க்கமாட்டீர்கள். எட்டுமிரண்டு மென்று சொல்லும் 'அ' கார 'உ' கார, மென்னும் ரேசக பூரங்களை என்றால், மூச்சை உள் இழுப்பதையும், வெளியில் விடுவதையும் அறியாமல் எத்தொழிலைச் செய்தாலும் என்ன பிரயோசனம் அடையப்போகின்றீர்கள். தனக்குள் அந்தர்யாமியாயும் சாக்ஷி சொரூபனுயும் இருக்கும் பரமாத்ம சொரூபத்தை அறிய எல்லோருக்கும், ஞானக்கண் என்பதை ஈஸ்வரன் கொடுத்திருந்தும் பூர்வ வினைப்பயனுல் அதை அறிய மறந்திருக்கிறுர்கள். அம்மறதியை நீக்க, இதன் பிரகாரமாய், ஷை நூலை வாங்கி அதில் சொல்லியிருக்கும் உபதேசத்தைச் சாதனம் செய்துவரப்பட்டவர்களுக்கு யமபாதை நீங்கும்.

**வினைப்பயன்** - அனேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த சஞ்சிதமென்னும் மூட்டையே வினைப் பயன் என்று சொல்லப்படும். இவை நீங்குவண்ணமாகவே. மனதை லயம் செய்யும் வகை அறிந்து, பின் லயமாக்கிக்கொண்டால், நல்ல வீடு என்பதில் சொக்கியிருக்கலாம்.

## மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல்

## சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள்

நாம் ஒவ்வொருவரும், அநேக ஜன்மங்களாய் அனுபவித்து வருகின்ற ஜனன மரணமென்னும் துக்க சமுத்திரத்திலிருந்து விடுபட்டு, நித்தியானந்த சுகத்தையடைய விரும்புகின்றோமன்றோ? அதற்கென்ன செய்யவேண்டுமோ அதை இதனடியில் சொல்லப்படலாயின கேளுங்கள்.

ஒரு கன்னிகை பருவமடைந்து விவாகம் முடிந்தபிறகு தனது குடும்பத்திலுள்ள சகல காரியங்களையும் கவனித்து வருவதுடன், மாமன் மாமி மூத்தார், மைத்துனர் முதலானவர்களிடத்திலும் அன்பாயிருந்து அவர்களை உபசரித்து வருகின்றனள். அங்கனம் உபசரித்து வந்தபோதிலும் தனது பிராண நாதனிடத்தில் மாத்திரம் தனது விசுவாசத்தைப் பாராட்டி மிகவும் அன்பாய் இருப்பாள். அன்றியும் அப் புனிதவதிக்குப் புத்திரபாக்கியம் கிடைத்தவுடன், அவள் முன்போல் குடும்பத்தில் அதிக கவலையின்றி இரவும் பகலும் அரிதாய்க் கிடைத்த செல்வக் குழந்தையைச் சீராட்டி அன்பாய் நீதமுதூட்டித் தாலாட்டி வளர்த்து ஆனந்தமடைந்தாளன்றோ? அதுபோல் நாம், அநேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ணிய விஷேஷத்தினால் பரிபக்குவமடைந்து, நல்லுணர்வுதித்து நமது நிலையில்லா தேகத்தையும் அதன் சம்பந்தமாக விளையும், பெண்டு பிள்ளை பண்டு பதார்த்த மாதிரியாயுள்ள போகத்தையும், நேற்றைக் கிருந்தார் இன்றைக்குக் காணோம் என்கிறபடி நீரிற் சுழுழியைப்போல் நிலையில்லா வாழ்க்கையையும் கவனித்து அந்தோ! இன்நாள்வரையில் என்ன செய்தோம்! நமது வாழ்நாளெல்லாம் திரவியம் சம்பாதிப்பதில் வீழ் நாளாய்விட்டதேயென்று மரணத்திற்குப் பயந்து ஸாது சங்கத்திற் பயின்று நல்வழியாய்க் சடந்து சற்குருவின் திருவடியை ஆசிரயித்து அவரால் உபதேசிக்கப் பெற்றுள்ள அந்நிலையை வழுவாமல் தியானித்துவரவேண்டும். எப்படியெனில், நாம் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்போது. முதலில் துவாரபாலகர்களை வணங்கிப் பின், எறுல் பலிபீடமிருக்கின்றது.

''துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன் கன்ம துஷ்ட தேவதைகளில்லை'' என்பதுபோல், நம் மனதிற் குடிகொண்டுள்ள காமக்குரோதாதி துஷ்ட குணங்களையும், அஹங்கார மமகாராதி சகல துஷ்ட மிருகங்களையும், அந்த பலிபீடத்தினிடம் பலிகொடுத்து, பரிசுத்த மனதுடன் சன்னிதானத்தினுட் புகுந்து, மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தைத் தரிசனம் செய்யச் செல்லும்போது, லிங்கத்திற்கு நேராயிருக்கும் நந்தியைக் குறுக்கிட்டுச் செல்லாமல் நந்திக்கு வலது அல்லது இடதுபுறமாய் மூலஸ்தானஞ் சென்று, அந்த மூலவிக்கிரகத்தைப் பாத பெருவிரல் முதல் உச்சி வரையில் நன்றாய்த் திருஷ்டித்துப் பார்த்து, அந்த வுருவத்தைப் புருவமத்தியில் நிறுத்தி, கண்களை மூடி உள்முகமாகவே மனக்கண்ணால் பார்த்து ஒரே தியானமாய்ச் சில நேரம் தியானித்து, பிறகு விபூதி பிரசாதம் பெற்று, வெளி வரும்போது முன் நந்தியைக் குறுக்கிடாமல் எவ்வாறு சென்றோமோ அவ்வாறே வெளிவரவேண்டும். நந்தியைக் குறுக்கிட்டுவரலாகாது. ஏனென்றால், நந்தி ஈஸ்வரற்கு நேராயிருந்து தாம், மூக்கின் ரந்திரதிரயங்களின் வழியாய் உள்ளுக்கும் வெளிக்குமாய் இழுத்துக்கொண்டும், விட்டுக் கொண்டுமாயிருக்கும் யஞ்ஞோபவீதமென்னும் சுவாசத்தினால் (மூச்சினால்) ஈஸ்வரனை விசுறுகின்றார். அதனால் நந்திக்கும் ஈஸ்வரருக்கும் குறுக்காய்ப் போகலாகாது. குறுக்கிட்டுப் போனால் விசுறுதல் தடையாகும். ஈஸ்வரன் மஹாயோகியாதலால், எப்பொழுதும் அக்கினி ஜுவாலையாகவே இருப்பார். அவருக்கு சதா அபிஷேகமே பிரீதியாதலால் ஈஸ்வரருக்கு ''அபிஷேகப் பிரிய:'' என்று சொல்லப்படும். இதற்குத் திருஷ்டாந்தமாக அறியத்தரப்பட்டன. பூனா, பொம்பாய் முதலான இடங்களில் ஈஸ்வரர் ஆலயங்களிலுள்ள லிங்கங்களின் சிரசின் மத்தியில் தென்னம் ஈர்க்கு அவ்வழவு கனத்தில் நீர்த்தாரை சதாகாலமும் வீழ்ந்துகொண்டிருப்பதற்காக, வாழைப்பூவைப்போன்ற, ஒரு குடம் ஜலம் பிடிக்கும்படியான செம்புப்பாத்திரம் செய்து, அதை லிங்கத்திற்கு மேல் உயரத் தூக்கிக் கட்டி அதில் ஜலம் கொட்டுவார்கள். பிறகு செம்புக்குடம் நுனியிலிருக்கும் துவாரத்திலிருந்து இரவும் பகலுமாய் ஜலம் லிங்கத்தின் சிரசில் வீழ்ந்துகொண்டே யிருக்கும்.

சதாகாலமும் நீர்த்தாரை, ஈஸ்வரர் சிரசின்மீது வீழ்ந்து கொண்டிருந்தால், உஷ்ணம் சாந்தமாகும் என்று காட்டுவதற்காக பூர்வீக பெரியோர்கள் லிங்கத்தின் சிரசில் சதாகாலமும் ஜலம் வீழ்ந்து கொண்டிருக்கும்படி செய்வித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆதலால் இனி யோகாப்பியாசம் செய்துவரப்பட்டவர்களுக்கு விசேஷ உஷ்ணமுண்டாகும். அவ்வுஷ்ணத்தைத் தணிக்க ஸ்நானம் செய்யவேண்டும். உஷ்ணத்திற்கு உஷ்ணமே கொடுத்தால் உஷ்ணம் சாந்தியாகும். குளிர்ந்த சலம் உஷ்ணம் ஆதலால், ஈஸ்வரருக்குக் குளிர்ந்த ஜலத்தால் விசேஷமாய் அபிஷேகம் செய்துவருகிறார்கள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், யோகியும் குளிர்ந்த ஜலத்தினால் ஸ்நானம் செய்துவரவேண்டும். இதற்கு கைவல்யமாக:

இம்பரிநஞ்சை நஞ்சாலிரும்பினை யிரும்பாலெய்யும்
அம்பினையம்பாற் பற்றுமழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்
வம்பியன் மாயைதன்னை மாயையான் மாய்ப்பதுபோல்.

என்றிருப்பதனால், உஷ்ணத்திற்கு உஷ்ணமே கொடுக்க வேண்டும். வெந்நீர் குளிர்ச்சி. குளிர்ந்த ஜலம் உஷ்ணம் ஆதலால். யோகி குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும் என்பதேயாம். யோகசாதனையை விரும்பினால், விசாரணையில் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட யோகியை, தேங்காயின் மீது பிடித்துக் கொண்டிருக்கும் பட்டையைப்போல் பிடித்துக் கொண்டிருந்த சகல பந்தபாசங்களென்னும் பிடிப்புக்கள் யாவும் தனக்குத் தானாகவே யோக பலத்தினால், அந்த யோகியை விட்டு நீங்கும்.ஆதலால்,

மேற்சொல்லிய குடும்பத்திலுள்ள ஸ்த்திரீயைப் போல், ஈஸ்வரன்மீது அதிகப் பிரீதியைப் பாராட்டி அன்பே வடிவாயிருந்து ஈஸ்வரனைத் தியானித்து வரவேண்டும். அங்ஙனம் தைலதாரையைப்போல் இடைவிடாமல் தியானித்துக்கொண்டு வருகிற காலத்தில் அவ்வுபாசனா மூர்த்தியின் திருவருளால் ஆனந்தமே வடிவமாகிய ஞானம் உதயமாகின்றது. அங்ஙனம் கிடைப்பதற்கரிய ஞான சூரியன் உதயமானதுடன் அதாவது பல்லா

யிரங்கோடி அண்டங்களிலும் பரிபூரணமாய் சுயம் பிரகாசமாயுள்ள சுத்தசைதன்ய பரமாத்மாவாகிய ஆத்ம சொருபத்தைத் தரிசித்தவுடனே, ஆயிரமாயிரமாகக் கூடியுள்ள காகத்தின் பெருங் கூட்டத்தில் ஒரு கல் எறிந்தால் மாத்திரத்தில் அக்காகங்களனைத்தும் அந்த க்ஷணமே ஓடி எப்படிக் காணுமல்விடுமோ அதுபோல், ஆனந்த ஜன்மங்களாய் நம்மைப் பற்றியுள்ள அழிவில்லாத பாபகர்மக் கூட்டங்கள் யாவும் அஞ்ஞானமென்னும் இருளைக் கடந்து ஒருங்கே தொலைந்து விடுகின்றன. இவ்வித அப்பியாசத்திலுள்ள பெரியோர்கள், ஜீவகோடிகளிடத்திலும் அன்பே வடிவாயிருப்பார்கள். அவர்கள், ஏழை, தனவான், நல்லவன், தீயவன், புண்ணியவான், பாபி, குலத்திலுயர்ந்தவன், தாழ்ந்தவன், வித்துவான், மூடன் என்கிற எவ்வித பேதமுமில்லாமல் யாவரிடத்திலும் சமரச பாவனையுடையவராகி சாந்தமுங் கருணையுந் ததும்பப்பெற்று ஈஸ்வரனுக்கொப்பாவார்கள். இதற்குத் திருமந்திரமும், கீதமும் பிரமாணம்.

அன்பு சிவமிரண்டென் பரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே.

என்றிருக்கின்றது. அதாவது, சமஸ்த ஜீவகோடிகளிடத்திலும் சமமாய் நிறைந்துள்ள ஆத்ம சொருபத்தைத் தனது ஆத்ம சொருபமாக அறிந்தவன் எவனோ, அவன் எந்த ஜீவனையும் இம்சிக்கமாட்டான். அப்படிப்பட்டவனே பரம சொருபத்தை அடைவான் என்பதேயாம். இதற்கு உபதேச காண்டப் பிரமாணம்,

உரைக்கு மற்றுணர்வுக்கு மறிய வொண்கிலாப்
பரப்பிரம்மத்தினிற் றோன்றிப் பல்லுயிர்க்
கிரக்க முற்றளித்திட வெய்து மிப்பொருள்
நிரப்புறு முயிர்த்தொகை நிறைந்து நிற்குமால்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஜனன மரண துக்கத்திலிருந்து விடுபட்டு நற்கதியடைய வேண்டுமாயின், நாம் பரிசுத்த மனமுடையவர்களாயிருந்து சகல ஜீவகோடிகளையும் சமரசமாய் நினைத்து உள்ளன்புடன் கடவுளைத் தியானிக்க வேண்டும். அங்ஙனங் குவிந்த மனதுடன் அப்பியசித்துக்கொண்டு வருவோமானால் அக்கடவுளின் திருவருளால் வாக்கு சுத்தியும் ஞான சக்தியும் எல்லாக் காரிய சித்தியும் உண்டாகும். (ஸ்ரீபகவத் கீதையில் அத்தியாயம் 3- சுலோகம் 9- பார்க்க)

இவ்வப்பியாசம் பூர்வ சஞ்சித கர்மங்கள் ஒழிந்தவர்களுக்கே எளிதில் வசமாகும். அக்கர்மங்கள் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் என மூன்று வகையாகும்:

(1) சஞ்சிதம்:- பிரமதேவன் ஜீவகோடிகளைச் சிருஷ்டி செய்த நாள் முதல் நாளதுவரையில் ஜனங்கள் அநேக கோடானகோடி ஜன்மங்களை எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் செய்து வந்த புண்ணிய பாபங்களெல்லாம் மூட்டை மூட்டைகளாகப் பருவதம்போல் ஒருங்கு (சிறுகச் சிறுக) சேர்ந்து வந்த கர்மங்களே சஞ்சிதமென்று சொல்லப்படும். இந்தச்சஞ்சிதமென்னும் வினைப் பயனால் பிராரப்த கர்மம் வந்து துக்கமனுபவிக்கும்போது கடவுளைத் தூஷிக்கிறார்கள்.

இந்தச் சீவனால் வருமறு பகை
  யெலாமிவன் செய லென்னாமல்
அந்தத் தேவனால் வருமென்ற
  மூடர்களதோ கதியடைவார்கள்
இந்தச் சீவனால் வரு மறு பகை
  யெலாமிவன் செயலல்லாமல்
அந்தத் தேவனா லன்றெனும்
  விவேகிகள் மலவீடடைவாரே.

இந்தப் பிராரப்த கர்மத்தை விவரித்துச் சொல்லப்படுகின்றன, கேளுங்கள்;-

பிராரப்தம்: ஷை சஞ்சிதத்திலிருந்து அவனவன் செய்த கர்மானுசாரமாய்ப் புண்ணிய பாபங்களைப் பங்கிட்டுக்கொண்டு

வந்து இந்த ஜன்மத்தில் அனுபவித்துக்கொண்டிருப்பது பிராரப்தமாகும். இந்தப், பிராரப்த கர்மங்களை விவரித்துச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

ஒருவன் அனேக ஜன்மங்களாய்ச் செய்து வந்த புண்ணிய பாப கர்மத்தில், 100 மூட்டை புண்ணியமும் 5 மூட்டை பாபமும் இருப்பதாய் நினைத்துக் கொள்ளுங்கள். அவனுக்குப் பிரமதேவன் 80 வயது ஆயுள் ஏற்படுத்தி ஜன்மத்தை உண்டாக்கினதாய் எண்ணுங்கள். இவன் புண்ணியம் விஷேஷமாய்ச் செய்திருப்பதனால் அந்த ஜன்மத்திற்குத் தக்கபடி, அனுபவிப்பதற்காக 10 மூட்டைப் புண்ணியமும் பாபம் குறைவாகச் செய்திருப்பதனால் பாபத்தில் அரை மூட்டையும் பங்கிட்டு அனுப்பி மிகுதியாகிய 90 மூட்டைப் புண்ணிய கர்மமும், 4½ மூட்டைப் பாபகர்மமும் இருப்பில். இருப்பதாய் எண்ணவேண்டும். இவன் புண்ணியம் அதிகமாகக் கொண்டுவந்தவனாதலால், ராஜன் வீட்டிலாகிலும், அல்லது பெருத்த செல்வமுடையவர்களின் வீட்டிலாகிலும், பிறந்து இம்மைச் சுகத்தை அதிகமாயும் துக்கம் சொற்பமாயும் அனுபவித்துக்கொண்டு வருவான். இந்தத் துக்கம் எப்படிப்பட்டதென்றால், சந்தானமில்லாமற் போயிற்றே என்றாகிலும், ஒரு வேளை சந்தானமிருந்தால் துன்மார்க்கனாய் வந்து பிறந்தானே என்றாகிலும், மனையாள் தன்இஷ்டம்போல் நடக்கவில்லையே என்றாகிலும், தனத்தைக் கள்ளர்கள் கொண்டு போகாவண்ணம் காப்பாற்றுவதிலாயினும் இப்படியே ஏதுவோ ஓர் வியசம் உண்டாக்கிக்கொண்டே இருக்கும்.

மற்றொருவனுக்கு 100 மூட்டைப் பாபமும் 5 மூட்டைப் புண்ணியமும் இருப்பதாய் நினைத்துக்கொள்ளுங்கள். அவனுக்கு 80 வருஷங்கள் ஆயுர்ப்பாகம் உண்டென்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் பாபம் அதிகமாய்ச் செய்திருப்பதால் பாபத்தில் 10 மூட்டையும் புண்ணியம் அற்பமாய்ச் செய்திருப்பதால் புண்ணியத்தில் அரை மூட்டையும் அனுபவிக்கும் படியாய்ச் செய்து அனுப்பப்பட்டான். அதனால் அவன் கூலிவேலை செய்யப்பட்டவர்களின் வீட்டிலாயினும், அல்லது பிக்ஷ எடுக்கப்பட்டவர்களின் வீட்டிலாயினும், ஜன்மித்து எப்போதும் கஷ்ட

தசையை அனுபவிப்பானென்று அறியவேண்டும். இவனுக்கு நித்திரைவேளை தவிர மற்றக் காலங்களிலெல்லாம் துக்கமே அதிகமாயிருக்கும்; 80 வருஷத்திற்கு அரை மூட்டை புண்ணியம் இருப்பதால் எப்போதாகிலும் ஒவ்வொரு சமயங்களில் அற்ப சந்தோஷத்தை உண்டாக்கும் என்று அறிய வேண்டும். இது போல் ஒவ்வொருவருடைய புண்ணிய பாபங்களுக்குத் தகுந்த சரீரம் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும். அதாவது,

அவரவர்களின் புண்ணிய பாபங்களுக்குத் தக்கபடி உயர்வு தாழ்வான என்றால், செல்வந்தர்களாயும், மிகவும் ஏழைகளாயும் பிக்ஷ எடுக்கப்பட்டவர்களாயும் பிறக்கிறார்கள். இவ்வாறாய்ப் பிறந்தமானவ ஜனங்களெல்லோரும் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் என்கிற மூன்று காலங்களையும் அதாவது, தம் மூன்று ஜன்மங்களையும், தாம் மிகவும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்: தம் மூன்று ஜன்மங்களையும் தெரிந்து கொள்ளும் விஷயம், ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் குழந்தையாயிருந்தது முதல், பன்னிரண்டு வருஷங்கள் வரையில் தாம் செய்து வந்த புண்ணிய பாபங்களெல்லாம், மேற் சொல்லிய ஸஞ்சிதமென்னும் புண்ணியபாபங்களின் மூட்டையில் போய்ச் சேரமாட்டா. பதின்மூன்றாவது வருஷம்முதல் அவர்கள் மரணமடையும் வரையில் செய்துவரும் புண்ணியபாபங்களெல்லாம், மேற்சொன்ன ஸஞ்சிதமென்னும் மூட்டையில் போய்ச் சேரும். ஒருவன் தன் மூன்று ஜன்மங்களையும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம், ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் அருளிய ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரஹஸயத்தில் அறியலாம்.

ஐயா! இங்கு சுருக்கமான வகையில் தரப்படுகின்றன. ஒருவர்! நல்லது எனது பதின்மூன்றாவது வயதுமுதல் இன்றுவரையில் ஏதாகிலும் பாபகர்மங்களைச் செய்தேனா? அதை இப்போது யோசித்துப் பார்ப்போமே? நான் பால்யத்திலிருந்து இன்றுவரையில் ஏதாகிலும் பாப கர்மங்களைச் செய்தேனா? என்று இரண்டு தினங்களாக, எவ்வளவோ யோசித்துப் பார்த்தபோதிலும், பதின்மூன்று வருஷங்கள் முதல் எழுபது வருஷங்கள்வரை

யில் ஒரு பாபகர்மமும் செய்ததாய்க் காணப்படவில்லை. ஆத லால், மறு ஜன்மத்தில் இதை விட அதிக செல்வமுடையவர் களின் வீட்டிலாகிலும் இதைவிட தாழ்ந்த செல்வமுடையவர் களின் வீட்டிலாகிலும் போய்ப் பிறக்க மாட்டேனென்று என் புத்திக்கு ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆதலால், நான் பூர்வ ஜன்மத்தில் சொல்ப புண்ணியம் செய்திருந்தபடியால். அந்தப் புண்ணியத்திற்குத் தக்கபடி இந்த ஜன்மத்தில் சொல்ப தனவந்தர்களின் வீட்டில் வந்து பிறந்தேன். இந்த ஜன்மத்தில் என் மனைவி மக்களுக்காக ஆஸ்தி சேகரித்து வைக்காமல் நான் சம்பாதித்த பொருள்களை எல்லாம் தான கைங்கர்யத்திற்கே உபயோகப்படுத்திவிட்டேன். நான் செய்த இவ்வாறான தரும கைங்கர்யத்தினால், முன் ஜன்மத்தில் செய்த புண்ணியத்தை விட இந்த ஜன்மத்தில் எனக்கு விஷேச புண்ணியம் உண்டாயி ருக்கலாமென்று தோன்றுகின்றது. ஆதலால், நான் இப்போது மரணமடைந்தால் மறு ஜென்மத்தில் இதைவிட விஷேஷ செல் வமுடையவர்களின் வீட்டில் போய்ப் பிறப்பேனென்று, நான் என் புத்தியினால் தெரிந்து கொண்டேன்: இது போல் இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் அவரவர்கள் இப்போதிருக்கும் ஸ்திதியை அறிந்து, முன் ஜன்மத்தின் புண்ணிய விஷேஷத்தி னால் இந்தச் ஜன்மத்தில் இவ்வழவு செய்திருக்கிறோமென்றும் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய விஷேஷத்தினால் மறு ஜன் மத்தில் இப்பேர்ப்பட்ட ஜன்மத்திற்குப் போவோமென்றும் இம் மூன்று ஜன்மங்களையும் நீங்களே யோசித்துப் பார்த்து உங்கள் மூன்று ஜன்மங்களையும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இப்போது புண்ணியம் செய்தவனுடைய விஷயம் சொல்லப்பட் டன. இனிப் பாபம் செய்தவனுடைய விஷயம் என்றால், அதா வது இந்த ஜன்மத்தில் பாபம் செய்த ஒருவன் யோசிக்கின்றான். எப்படியாகில்?

ஐயா! நான் பூர்வ ஜன்மத்தில் ஏதோ சிறிது புண்ணியம் செய்திருந்தபடியால். மிகவும் ஏழையாயும், கஷ்ட ஜீவனமா யும், இல்லாமல் இருக்கப்பட்டவர்களின் வீட்டில் பிறந்தேன் பிறந்த பன்னிரண்டு வருஷங்கள் பால்யமாய் இருந்த போது நான் என்னென்ன கார்யங்களைச் செய்துவந்தேனோ அவைகள்

ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை: இப்போது எனக்கு வயசு எண்பதிருக்கும். பதின்மூன்றும் வருஷம் முதல் இன்றுவரையில் நான் செய்த கார்யங்களையெல்லாம் நன்றாய் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் ஞாபகம் இருக்கின்றன. நான் செய்த காரியங்களெல்லாம் பாபகார்யங்களாய் இருக்கின்றனவேயொழிய நல்ல கார்யமாய்க் காணப்படவில்லை. அவையாவன,

ஐயா! எமது தாய் தந்தையர்கள் எனது தொல்லைகள் தாங்கமுடியாமல், ஒரு பலசரக்கு வியாபாரியிடம் ஒப்படைத்து சம்பளம்? கொடுத்ததை வாங்கிக் கொண்டிருக்கும் காலத்து, நான் ஒருநாள் அவ் வியாபாரியிடம், களவாண்டதின் காரணமாக வெளியேறி விட்டேன். பின் சிலநாள் சும்மா இருந்து வேறுஊர் சென்றேன். சென்று ஓர் வக்கீலிடம் குமாஸ்தாவாய், இருபது ரூபாய் சம்பழத்தில் போய்ச்சேர்ந்தேன். பிறகு, வக்கீல் பொய்க் கேசுகளை மெய்யாகவும், மெய்க்கேசுகளை பொய்யாகவும், ஜோடித்து கேசுகளைக் ஜெயித்து வருவதைப்பார்த்தேன். பார்த்தபிறகு இவர் நம்மில் சேர்ந்தவராய்த்தான் இருக்கின்றாரென்றெண்ணி, அதுமுதல் எல்லா வக்கீல் வாதிகளின் சாக்ஷிகளிலோ அல்லது, பிரவாதிகளின் சாக்ஷிகளிலோ தான் எதையும் பார்க்காவிட்டாலும் நான் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தது போல் சொல்லுகின்றேன். ரூபா இருநூறு கொடுங்களென்று பெற்றுக்கொண்டு இவ்வாறு அநேக கேசுகளில் பொய்ச்சாக்ஷிகள் சொல்லி பெரிய செல்வந்தனுனேன். அன்றியும் கொலைக் கேசுகளில் ஆயிரக்கணக்காய் ரூபாய்களை வாங்கிக் கொண்டு, கொலை செய்யாதவனைக் கொலை செய்தானென்று பொய்ச்சாக்ஷி சொல்லி அவனைத்தூக்கில் போடுவித்தேன். இவ்வாறான துஸ்டகாரியங்களால் தனத்தைச் சம்பாதித்து, ஒருவனுக்கு ரூபா ஒன்றிற்கு வட்டி அணுஒன்று விகிதம், ரூபா ஆயிரம் கொடுத்து, ஆயிரத்திற்கும் பதினுயிரம் ரூபாவரையில் வட்டிக்குவட்டியாய்ச் சேர்த்து கடைசியில் கோர்ட்டில் டிக்கிரி செய்வித்து அவன் வீட்டை ஏலம்போடுவித்தேன். அப்போது அவன் மனைவி மக்களெல்லோரும் அடாபாவீ! ஆயிரம் ரூபாயும் சரியாய்க்கொடமல் அதிலும் ஆறுமாத வட்டி பிடித்துக்கொண்டு கொடுத்து கணக்கில் ஆயிரம் ரூபாய் எழுதிக்கொண்டு, அப்போதைக்கப்ப

போது நாங்கள் கொடுக்கு வந்த ரூபாயைவரவு வைக்காமலும், எங்களைக்கேளாமலும் சம்மன்செய்து இப்போது வீட்டின்மேல் வரண்டு வந்தாய். நீ நாசமாய்ப் போவாய் என்று வயிறெரிந்து என்னைச் சாபித்தார்கள். இவ்வாறுன அனேக மோசங்கள் செய்து பொருளைச் சம்பாதித்து அதை எனது மனைவி மக்களுக்கு ஆஸ்தியாய்ச் சேகரித்து வைத்து இனி மரணமடையப் போகின்றேனல்லவா? பால்யத்திலிருந்து இது வரையில் நான் செய்துவந்த பாபகர்மங்களையெல்லாம் நினைத்துக்கொண்டால் என்மனம் துடிதுடிக்கின்றதே, இனி என்செய்வேன், இச் ஜன்மத்தில் நான் பள்ளிக்கூடத்திலும், கடையிலும் திருடினதற்காக மறு ஜன்மத்தில் மிகவும் தரித்திரர்களின் வீட்டில் பிறந்து குடிக்கக் கூழும் கட்ட வஸ்திரமும் இல்லாதவனுயிருந்து, திருடின கைகளுக்கு வெள்ளைக் குஷ்டங்களும் அங்கங்கு தேம்பல் போன்ற படைகளும் அப்படைகளில் ரணங்களும் அந்தரணத்தில் ஊரலும் (நமைச்சல்) உண்டாய் இது, ஈஸ்வர சிருஷ்டியாதலால் எவ்வளவு வெள்ளை குஷ்ட மருந்துகளும், படை மருந்துகளும் போட்ட போதிலும் போகாமலிருக்குமோ, திரவியம் சம்பாதிப்பதற்காக ஆசைப்பட்டு பொய்ச் சாக்ஷிகள் அனேகம் சொல்லி கேசுகளைக் கெலித்துக் கொடுத்த படியால், பொய் சொன்ன வாயில் புற்று உண்டாய், நாற்றமெடுத்து புழுக்கள் தள்ளுமோ, சொல்பதொகை கொடுத்து வட்டிக்குவட்டியாய்ச் சேர்த்து அதை ஆயிரக்கணக்காய்ப் பெறுக்கி, அவர்களை மிகவும் துன்பப்படுத்தி அவர்களின் திரவியத்தையெல்லாம் வாங்கிக் கொண்டபடியால், அவர்கள் வயிறெரிந்து சாபித்தார்கள். அப் பாபகர்மத்திற்காக எனக்குக் குஷ்டமுண்டாய், காலால் நடந்து கைகளால் ரூபா வாங்கியதற்காக என் கை கால்கள் குறைந்து அதிலிருந்து சீழ் ஒழுகி நாற்றமுண்டாய் ஈமொய்த்து அந்த நாற்றத்தை நானும் மற்றவர்களும் சஹிக்கமுடியாமல் இராப்பகலாய் அந்நோயினுல் அவஸ்த்தைப்பட்டு சாகும் வரையில் மிகவும் துன்பத்தை அடைய வெண்டியதாய் நேரிடுமோ கொலைக்கேசில் பொய்சொல்லி அவர்களைத் தூக்சில் போடுவித்த படியால், மறு ஜன்மத்தில் ரெயில் சக்கரத்தின் கீழோ மோட்டார் வண்டியின் சக்கரத்தின் கீழோ அகப்பட்டுக்

கொண்டு மரணமடைய வேண்டியதாய்நேரிடுமோ, தெரியவில்லையே? இவைகளையே பூர்வ ஜன்ம கர்மமென்றும் தலையெழுத்தென்றும், விதியென்றும், பிராப்தமென்றும், சொல்லுவார்கள். நான் இச் ஜன்மத்தில் செய்த துஷ்டநடவடிக்கைகளுக்காக, மறு ஜன்மத்தில் முன்சொன்ன வியாதிகளெல்லாம் எனக்குச் சிக்ஷையாய் ஏற்படும்போல் தோன்றுகின்றது. ஐயையோ! இந்தக் கர்மத்திற்கு நானென்ன செய்வேன். அப்பப்பா! இக்கர்ம பலனைத்தப்பிக்க ஈஸ்வரனாலும் சாத்தியமாகமாட்டாதென்று வேதங்களில் சொல்லியிருப்பதாய் பெரியோர்கள் சொன்னதை நான் கேட்டிருக்கின்றேன். இனி இப்பாபகர்மங்களை எப்படித்தப்பித்துக்கொள்வேன். இப்போது என்னிடமிருக்கும் திரவியங்களையெல்லாம் ஸத்விஷயத்தில் தானம் செய்த போதிலும், இப்புண்ணியத்தை அனுபவிக்க, செல்வமுடையவர்களின் வீட்டில் பிறப்பேன்? அப்படிப் பிறந்த போதிலும் நான் செய்த பாபகர்மங்களுக்காக முன் சொல்லிய வியாதிகள் வந்து துக்கத்தை அனுபவிக்க வேண்டியதாய் நேரிடுமே இதற்கு நான் என்ன செய்வேன். இப்போது யோசித்ததை, பால்யத்திலேயே யோசித்திருப்பேனேயாகில் இப்படிப்பட்ட பாபகர்மங்களைச் செய்திரேன். நான் பால்யத்திலிருந்து செய்துவந்த பாபகர்மங்கள் போல் உலகத்தில் அனேகர்கள் செய்திருக்கலாம். இப்படிப்பட்டவர்களெல்லோரும் இவைகளையெல்லாம் வாசித்து இனி, நீங்களாகிலும் ஜாக்கிரதைப் படுங்கள். எப்பொழுதும் புண்ணிய கார்யங்களையே செய்து வாருங்கள், அதனால் உங்களுக்கு மறு ஜன்மத்தில் நல்ல கதி உண்டாகும். அறியாத்தன்மையினால் நான் மோசம் போய்விட்டேன். இவ்வாறு மோசம் போவதற்கு, என் பூர்வ ஜன்மகர்மமே காரணமாயிருந்து என்னை இவ்வாறு செய்வித்ததேயொளிய நான் என் சுயமாய்ச் செய்ததல்ல. ஒவ்வொரு விஷயமும் அவரவர்களின் கர்மவிதிப்படி நடக்குமேயொளிய கர்ம விதியில்லாமல் எதுவும் நடைபெற மாட்டாதென்று அறியக்கடவீர்களாக.

இப்போது சஞ்சிதம், பிராரப்தம் என்னும் கர்மங்களையெல்லாம் உங்களுக்கு ஓர் அழவில் விவரித்துச் சொல்லப்பட்டன. இனி இந்த ஸஞ்சிதமென்னும் கர்மம் ஆகாம்யத்தி

லிருந்து உண்டாயிற்று. இந்த ஆகாம்யகர்மத்தை உங்களுக்கு விவரித்துச் சொல்லுகின்றேன். இதனால் எல்லா, ரஹஸ்யங்களும் தெரிந்து கொள்ளலாம்.

(3) ஆகாம்யம்;-

இப்போதெடுத்திருக்கும் தேகத்தினால் மரணபரியந்தம் செய்து வரும் புண்ணியபாபங்களின் கர்மமே ஆகாம்யமென்று சொல்லப்படும் மரணமடைந்தவுடன் இந்த ஆகாம்யமென்னும் கர்மங்கள், முன் சஞ்சிதத்தில் குறைவாய் நின்றிருந்த. 90-மூட்டை புண்ணியத்துடன் இந்தச் சன்மத்தில் செய்த புண்ணியம் போய்ச் சேர்ந்து விருத்தியாகும். இதுபோல் முன்தங்கியிருக்கும் நாலரைமூட்டை பாபத்துடன் இந்தஜன்மத்தில் செய்தபாபமும் போய்ச் சேர்ந்து விருத்தியாகும். இவ்விதமாய் ஜன்மாந்திரங்கள் தோறும் புண்ணியபாபங்கள் விருத்தியாய் வந்து கொண்டேயிருப்பதனால் ஜன்மங்கள் அனேகமாய்ப் பெருகிக் கொண்டேவருகின்றன. என்றால், ஆகாம்யத்தினால் சஞ்சிதம் உண்டாய் அதிலிருந்து பிராரப்தம் வருகின்றன, எப்படியென்றால், பயிரிடுவோன் நிலத்தை உழுதுநாற்றை நட்டு தண்ணீர் இறைத்துக்களை பிடுங்கி பாதுகாத்து. அறுவடைசெய்து மொத்தமாய்க் களஞ்சியத்தில் சேகரித்து வைக்கின்றான். நிலத்தில் தானியத்தை அறுக்கும் வரையில் செய்யும் வேலைகளை ஆகாம்யத்திற்கு ஒப்பிடலாம்.

தானியத்தைச் சேகரித்து மொத்தமாய்க் கட்டிவைத்தலே சஞ்சிதத்திற்கு ஒப்பிடலாம். கட்டிவைத்த தானியத்திலிருந்து எடுத்துப் புசிப்பதே பிராரப்தத்திற்கு ஒப்பிடலாம். இதுபோல் கர்மத்திற்குக் காரணம் மனோசங்கற்பம். ஒருவன் யாதேனும் ஒரு பலனை அடைவதற்கு மனதில் சங்கல்பித்துக் கொள்வதே ஆகாம்யம். இப்படிப்பட்ட சங்கற்பங்கள் (எண்ணங்கள்) அதிகமாய்ச் சேர்ந்த மொத்தமே சஞ்சிதம். சங்கற்பித்துக்கொண்டவண்ணம் பலனை அனுபவிப்பதே பிராரப்தம். ஆதலால், உலகத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் சுக துக்கங்களுக்குக் காரணம் அவரவர்கள் பூர்வஜன்மங்களிற் செய்த கர்மங்களேயாம். அதாவது, ஆசைகொண்டு எண்ணிய மனோசங்கல்பங்களே கர்மமாகிக் காரியத்திற்கு வந்து அவரவர்கள் கோரியதை மறு ஜன்மத்தில் அனுபவிக்கின்றார்கள்.

சடமதாகிய தியான மெய்யாகிய சர்வமுத்தியை நல்கும்
திடமானதெப்படி யெனிலவர் ரவர்தியானமே பிறப்பாகும்
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களாகுவார்
மைந்தா
தொடர்பவங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமாகு
வர் மெய்யே.

அப்படியிருக்க இதை நான் செய்தேன், இஃது என்னால் வந்தது, என்று ஒவ்வொரு புருஷனும் அஹங்காரம் கொள்ளுகிறான். அது அவனால் வந்ததல்ல. அவன் முன் ஜன் சென்மத்தில் வேண்டுமென்று நினைத்த வஸ்துக்கள், இந்த ஜன்மத்தில் வர வேண்டுமென்று பிராரப்தம் இருந்தபடியால், அது அவனுக்கு உண்டாயிற்றேயொழிய அவன் இந்த ஜன்மத்தில் கேட்டுக் கொண்டதனால் வந்ததல்ல. இவனைப்போல் மற்றொருவன் வேறு வஸ்துக்கள் வரவேண்டுமென்று நினைக்கிறான். அது அவனுக்குப் பிராரப்தத்தில் இல்லாததனால் கிடைப்பதில்லை. இதற்கு திருஷ்டாந்தம்:-

சிலர் புத்திரசந்தானமில்லையென்று அநேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும், ராமேஸ்வர யாத்திரைகள் செய்தும், நாகப் பிரதிஷ்டை செய்தும், அரசமரம் பிரதக்ஷணம் வந்தும், அநேக தான தர்மங்களைச் செய்தும், புத்திரசந்தானமில்லாமல் இருக்கிறார்கள் இவ்வாறு உண்டாகாததிற்குக் காரணம் என்னவென்றால், புத்திரசந்தானம் அவர்களுக்குப் பிராரப்தத்தில் இல்லாததனால் அவர்கள் என்ன செய்தபோதிலும் புத்திரன் உண்டாவதில்லை ஆனால் இந்த ஜன்மத்தில் புத்திர சந்தானத்திற்காக மிகவும் கஷ்டப்பட்டு, அனேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து காசீ ராமேஸ்வராதி யாத்திரைகள் செய்தபடியால் இதன்பயனை மறு ஜன்மத்தில் அடைவார்கள் ஆனால், சிலர் கதிர்காமஞ் சென்று வருவதனால் புத்திரசந்தானமடைகின்றனர்! அஃது எப்படியென்றால், அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். ஒருவன் தான் ஏதோ ஒரு வயதில் கதிர்காமம் போகவேண்டுமென்றும், போன பிறகே அவ

னுக்குப் புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமென்றும் அந்தப் புத்திரன் இன்ன வீட்டில் இன்னார் குமாரத்தியை இன்ன வருஷத்தில் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்றும், அவள் இத்தனை புத்திர புத்திரிகளைப் பெறவேண்டுமென்றும் பிராரப்தமிருப்பதனாலேயே அவ்வாறு நடக்க நேரிட்டதேயொழிய புருஷன் செய்யும் தீர்த்த யாத்திராதிகளினால் உண்டானதல்ல. ஆதலால், பஞ்சுப்பொதியில் நெருப்புப் பொறி பட்டவுடனே அது எப்படி பஸ்மமாகிறதோ, அதுபோல் இந்தச் சஞ்சிதகர்மமானது ஞானமென்னும் நெருப்பினால் எப்பொழுதே ஒருவன் முத்தனாகின்றான். இதற்குக் கைவல்யம்,

பஞ்சினை யூழித்தீப்போற் பலசென்மவிவித வித்தாஞ்
சஞ்சித மெல்லாம் ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கும்
கிஞ்சிதா காமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்
விஞ்சின பிராரப்தவினை யனுபவித்துத் தீரும்.

ஆதலால், உலகத்தின்கண்ணுள்ள ஒவ்வொருவரும் ஞானத்தையடைய வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த போதிலும் அவர்களினுடைய பூர்வ ஜன்மங்களின் கர்மமானது, ஞானமார்க்கத்திற்குரிய அரிய நூல்களை வாசிக்கவிடாமல் நாவல், கதைகள், வீண் சரித்திரங்கள், அருவருக்கத்தக்க நாடகங்கள், அகடவிகடமான குயுக்திக் கதைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்து, அஞ்ஞானமென்னும் படுகுழியில் வீழ்த்தி மாயா சம்சார சமுத்திரத்தில் அலைந்து கொண்டிருக்கச் செய்யும் ஆதலால், பூர்வ சுத்த வாசனையில்லாதவர்கள் இந்த ஜன்மத்திலாகிலும் நல்லொழுக்கத்துடன் இருந்து பெரியோர்களையடுத்து அவர்களால் ஞானோபதேசம் செய்யப்பெற்று அதை இடைவிடாமல் அப்பியசித்து வந்தால், அந்த அப்பியாச முதிர்ச்சியினால் ஜன்மாந்திரங்களிலாயினும் மோக்ஷத்தை அடைவதற்கு முக்கியமானதாயிருக்கும் உள்ளபடிக்கே ஞானமார்க்கத்தின் உண்மையைச் சிறிதேனும் உணர்ந்தவர்கள், ஷை நாவல் முதலிய வீண் கதைகளைப் படித்துத் தமது வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கி விடாதீர்கள்.

எனதன்பர்களே! அநேக ஜன்மங்களில் செய்துவந்த ஆகாம்யத்தினால் உண்டாகிய சஞ்சிதகர்மங்கள் நசித்தவுடனே, தேஹமும் ஜீவோபாதியும் என்றால், (சங்கல்பரூபமாயிருக்கும் மனமும்) நசித்து, 'ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவபதி' சுருதிரீதியாய், அகண்ட சஸ்சிதானந்த நித்திய நிர்மல பரிபூரணமாகிய பரப்பிரம்மத்தில் ஐக்கியமாய் நித்திய முத்தனாகின்றான். யாவராயிருந்த போதிலும் பிராரப்த கர்மங்களை அனுபவித்தே தீரவேண்டும். புண்ணிய பாபங்கள் செய்வதனால் சரீரமெடுத்து அந்தப் புண்ணியபாபங்களை அனுபவித்தேதீரவேண்டும். எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்தால் புண்ணிய பாபங்கள் சஞ்சிதத்திற்போய்ச் சேராமல் ஈஸ்வரனைச் சேர்தபோதிலும் பூர்வ சஞ்சித கர்மங்களைப் பஸ்மீ கரப்படுத்த, முன் சொல்லியது போல் எந்த எண்ணங்களுமில்லாமல் மனதைப்பரிசுத்தமாய் வைத்து ஒரே சமாதியிலிருக்கவேண்டும். அதாவது, அப்போதைக் கப்போது மத்தியில் இடைவிடாமல் அநேககாலம் தன்னை மறந்திருப்பதே சமாதி எனப்படும்.

புத்திமான்கள், சகல விஷயங்களையும் சங்கற்பிக்கும் மனதை விஷயங்களிலிருந்து நிவர்த்தி செய்து பரமாத்ம சொருபத்தில் சங்கற்பிக்க வேண்டுமென்று நிச்சயித்துப் பரமாத்மாவிலேயே மனதைஸதாகாலமும்லயிக்கச் செய்யவேண்டும். இந்தச் சமாதிநிலையே தியானமென்று கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் இதுவரையிற் சொல்லிவந்ததையும் இனிச் சொல்லப் போகும் ஆத்மோஜ் ஜீவனோபாயத்தையும் வாசிக்கப்பட்டயாவத்திராளும் பலாபேக்ஷயை விட்டு ஈஸ்வரார்ப்பண புத்தியாய்க்கர்மம் செய்கிற நிஷ்க்காமகர்மயோகி, குரு உபதேசித்த பிரம்ம ஞானத்தினால் சகல சம்சயங்களையும் போக்கடித்துக் கொண்டு, பிரம்ம நிஷ்டையில் இருப்பவனைக் கர்மங்கள் கட்டுப்படுத்தமாட்டா. ஆதலால், முன் சொல்லியது போல் எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச்செய்து வந்தால் அதனால் சித்தசுத்தியும், சித்தசுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் அடையலாம் இந்திரியங்களை அடக்கி மனதை லயப்படுத்துவதற்கா ஸ்ரீபகவத்கீதை முதல்-6-அத்தியாயங்களில்

விசேஷரர்த்தங்களுடன் தனியே எழுதப்பட்டிருக்கின்றது இந் நூலையும் ஷெ கீதையையும் வாசித்து ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து மனதை வெளியில் ஓடவிடாமல் — பரமாத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்ய எளிதில் அறிந்து அப்பியசித்து நற்கதி அடையவேண்டுமென்பதே இந்நூலின் கருத்தாகும்.

ஆகவே:-

புருஷனுக்கு ஆகாம்ய கர்மத்தினால் அதிகரித்துக்கொண்டே வரும் அஞ்ஞானம் ஞானத்தினால் நசித்தவுடனே, ஆத்மதத்வம் இப்படிப்பட்டதென்று தெரியவரும். அமாவாஸ்யையை இருட்டுக் கருக்கலில் வழி நடக்கும்போது வழிதெரியமல் லிருக்கும் சமயத்தில், மின்னல் மின்னியவுடன் அதன் வெளிச்சத்தினால் சிலதூரம் சென்று, மறுபடியும்வழி தெரியாமலிருக்கும் போது, மறுபடியும் மின்னல் மின்னியபோது, அதன் வெளிச்சத்தைக்கண்டு வழிநடக்கின்றோம்.இதற்கு சிவப்பிரகாசமூலம்:-

1. இருணணி யிரவிதான்வந் திரித்தலு மிரவிலெண்ணும்
பொருணிலை கண்டுமாந்தர் பொருந்திடு மாறுபோல
மருணிலையெங்கு நீங்கமகிழ்ந்து யிர்தன்னுண் மன்னும்
அருளையு மொழிய ஞாலத்தறிந்த வாறறியுமன்றே!

2. அறிந்திடுமனாதி வாயிலானவை யவன்றனாலே
அறிந்திடு மென்று? மொன்றுமறிந்திடாவவை போலியாவும்
அறிந்திடு மறியுந்தன்மை யறிந்திடா கன்மத்தொன்மை
அறிந்தவை நுகருமாறு மருளுவனமலன் றானே.

இதுபோல் ஸ்திரீ புருஷர்களை மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞானமாகிய இருள் நீங்கி வழிகாட்ட "ஷெ" ஜீவப் பிரமைக்ய வேதாந்த ரஹஸ்யமே மிகவு முக்கியமாய் இருக்கின்றது. ஆத்மஞானம் ஆத்ம விசாரணையினால் தெரிந்துகொள்ள வேண்டுமே யொளிய மற்றவைகளாற் தெரிந்துகொள்ளத் தக்கதல்ல. ஸ்நானம் சந்தியாவந்தனம், ஜபதவங்கள், தேவதாபூஜை, உபவாசங்கள், தீர்த்தஸ்நானம், க்ஷேஸ்த்திரதரிசனம், முதலானவைகளெல்லாம் கர்மங்களென்று சொல்லப்படும். இந்தக் கர்மங்களையெல்லாம் நாம் பிரதிதினம் அனுட்டித்துக் கொண்டு

வருகின்றுரேயொழிய அவைகளினுல் இது வரையில் சிறிதே னும் ஆத்மசொரூபம் தெரியவந்ததில்லை. இந்த ஆத்மசொரூ பத்தில் விஷேஷமாய்க் களிம்பு ஏறி இருப்பதால், ஸ்திரீ புருஷர் கள் தம்மிலிருக்கும் ஆத்ம சொரூபத்தை, அறியாமல் இருக்கி ருர்கள். இவ்வாத்ம சொரூபத்திற்கு, ஆதியில் களிம்பு எவ் வாறு பற்றிற்ருே, அதை இதனடியில் தரப்படுகின்றன கேளுங் கள்:-

களிம்பு தோய்ந்தசெம் பெனவுனே மருவுங்
கருமை கூர்மலங் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்தின்
பற்றி னுடல் பலவெடுத் துழன்ருய்
வளங்கு லாம்புவ னந்தொறுஞ் செயுமுன்
வல்வினேப்பயன் வருமுறை நெறியே
யளந்து நான்தர நுகர்ந்துமே னுகர்வு
மாக்கி யேதிரிந் தனேமன வழுக்கால்;

என்ருல்:- ஓர் செம்புக் குடத்தில் அநேக வருஷங்களாய் எண்ணெய் விட்டுக்கொண்டும், எடுத்துக்கொண்டும் வருவோர் களாகில் சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் அச்செம்புக்குடம் முழு மையும் காலங்குலத்திற்குமேல் பச்சை நிறத்துடன் களிம்புயேறி செப்புக்குடத்தைக் காண விடாமல் களிம்பு மூடிக்கொள்ளும். பிறகு, அக்குடத்தை ஒருவனுக்குக் காட்டி இது என்ன குட மென்று அவனைக் கேட்டால் அது இன்ன குடமென்று சொல்ல அவனுக்குச் சாத்தியமாக மாட்டா! பிறகு அவன் செங்கல் பொடி புளி முதலானவைகளால் அக்குடத்தைத் துலக்கி அக் களிம்புகளேயெல்லாம் போக்கி, பிறகு இது செம்புக்குடமென்று சொல்லுவான். அது போல் நமக்குள்ளே களிம்பில்லாமல் பளிங்குபோல் ஆத்ம சொரூபத்தில் களிம்புயேறிய ரஹஸ்யம் இதனடியில் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

ஆதியில் பிரமதேவர் ஜீவர்களேச் சிருஷ்டி செய்யும்போது பளிங்குபோல் இருக்கும் ஆத்மா ஜீவர்களுக்கு சாக்ஷி பூதனு யிருக்க, ஜீவராசிகளின் இருதயகமலத்தில் சேர்ந்து, அந்த ஆத்ம

சம்பந்தத்தால் எல்லா ஜீவராசிகளும் பிழைத்திருக்கின்றன. இந்த ஜீவராசிகள் அனுபவிப்பதற்காக, பார்யாள் புத்திரர்கள் புத்திரிகளும், பொன் வெள்ளி தனம் வாகனங்கள் பூமி தோட்டம் துரவுகள் முதலாகிய போக போக்கியங்களையெல்லாம் முதல் ஜன்மத்தில் ஈஸ்வரன் கொடுத்தார்!

ஸ்திரீ புருஷர்களுக்கு, ஆதியில் எடுத்த முதல் ஜன்மத்திலேயே மேற்சொல்லியவைகளின் மீதெல்லாம் ஆசை அதிகம் உண்டாய், நல்வினை தீவினைகளை (புண்ணியபாபங்களை) ச் செய்து கடைசியில் மரணமடையும்போது தாம் ஆசைப்பட்டவைகளை நினைத்துக்கொண்டே பிராணனை விட்டபடியால், ஆசைப்பட்டவைகளை அனுபவிக்க மறுபடியும், அந்தந்த வீட்டில் போய்ப் பிறக்கவேண்டியதாய் நேரிட்டது. அப்போது இவ்வாசைகள் யாவும், தனக்குள்ளே சாக்ஷிமாத்திரனாய்ப் பளிங்கு போலிருக்கும். ஆத்ம சன்னிதானத்தை, மேற்சொல்லிய ஆசையென்னும் களிம்பு (அழுக்கு) புகை சூழ்வதுபோல் முதல் ஜன்மத்தில் பற்றியது, அவ்வாசைகளை அனுபவிக்க புருஷன் மறுபடியும் இரண்டாவது ஜனநம் எடுத்தபோது, மறுபடியும் முன்போல் இரண்டாம் ஜன்மத்தில் வேறாய்வந்த, பார்யாள் புத்திரர்கள் புத்திரிகள் தனம் வீடு தோட்டம் துரவுகள் முதலானவைகளின்மீது ஆசைகள் முன் சென்மத்தைவிட அதிகமாய், அவைகளை அனுபவிக்க மறுபடியும் மூன்றும் ஜனநம் எடுக்கின்றான். (சிவானந்த போதமாக.)

மாடுமக்களுஞ் சுற்றமும்பெண்டிரு மாளிகையுடன் வாழ்வு
நாடுராச்சிய மாண்டிடும் புகழ்ச்சியு நம்மதென்றே தேகத்தி
னூடுசென்று நீயெனதுடலியானென வுழன்றலுதித்திடு நெஞ்சே
வீடுவிட்டுயி ரேகிடும்போதினில் வினைவழி நுழைந்தாயே.

இவ்வாறே பிரதி ஜன்மங்களிலும் ஆசை அதிகமாய், மேற்சொல்லிய செம்புக்குடத்தின் மேல் சிறுகச்சிறுகயேறிய பச்சை நிறமுடைய பாச்சையைப்போன்ற களிம்பு புருஷனுக்கு, அனேக கோடான கோடிகளாய் எடுத்து வந்த ஜன்மங்கள் தோறும் ஆசையென்னும் களிம்பு, சிறுகச்சிறுகப் புகை போல் சூழ்ந்து கொண்டுவருகிறபடியால், தனக்குள் பளிங்குபோல் சாக்ஷிசொரூ

பமாயிருக்கும் ஆத்ம சந்நிதானத்தை, மேற்படி பந்தபாசங்களென்னும் ஆசைகள் மூடிக் கொண்டு மோக்ஷமென்னும் வீட்டையடைய வீடாமற் செய்விக்கின்றது. எறுபு முதல் எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளும் ஏதோ ஓர் ஜன்மத்தில் மோக்ஷமென்னும் வீட்டை அடையவேண்டியது திண்ணம். இம்மோக்ஷமென்னும் வீட்டிற்கு வழிகாட்டும் குருவானவர் எப்படிப்பட்டவராயிருக்கவேண்டுமென்ருல், முன் களிம்பேறிய செப்புக்குடத்தைச் செங்கற்பொடியினுலும் புளியினுலும் தேய்த்துக் களிம்பைப் போக்கி, செப்புக்குடத்தைக் காட்டிய குருவைப்போன்றவராய் இருக்கவேண்டும். இங்கு உங்களுக்கு, ஷை ''ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யமே, களிம்பைப் போக்கி செம்புக் குடத்தைக் காட்டிய குருவைப்போல் இருக்கின்றது. ஆதலால், இதில் உபதேசமாய்ச் சொல்லிய விஷயங்களை கிரகித்து, சாதனம்செய்து வருவீர்களாகில் அப்போது, ஜன்மாந்திரங்கள் தோறும் புகையைப்போல் சிறுகச் சிறுகச் சூழ்ந்துவந்த ஆசையென்னும் களிம்பு, மறுபடியும் புகையைப்போல் சிறுகச் சிறுக, இந்த ''வீட்டுக்கோர் வாயில் என்னும் தொகுப்பில் 'அறியத்தரும்'' உபதேசத்தால், குறைந்து கொண்டே வந்து கடைசியில் எல்லாப் பந்தங்களும் நீங்கி, தான்தாஞய் நின்று பிரமத்துடன் கலந்து விடுவீர்கள்! இவ்வாறு ஆசை என்னும் களிம்பைப் போக்கினவனுக்கு மறுபிறப்பில்லை. ''இதுவே மோக்ஷவீடாம்'' மேற்சொல்லிய ஆசைகளையே, ஆணவம், மாயை, காம்யகர்மமென்று சொல்லப்படும். இது, அதிலிருந்து சகஜமாயுள்ள மூலமாயிருக்கின்றது. இம்மலம், ஆன்மாக்களின் அறிவு முழுதையும் விளங்கவொட்டாமல் களிம்பேறி மறைக்கின்றது. இக் களிம்பிற்கு தேங்காயின் மேலிருக்கும் மட்டையைத் திருஸ்டாந்தமாய் இதனடியில் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

தேங்காயின்மீது பிடித்துக் கொண்டிருந்த பட்டையைப் போல் யோகியைப் பிடித்துக் கொண்டிருந்த, சகல பந்தபாசமென்னும் பிடிப்புக்களெல்லாம் தனக்குத் தாஞகவே யோகபலத்தினுல் அந்த யோகியைவிட்டு நீங்குமென்று முன் சொல்லியிருக்கின்றன. ஆதலால், தேங்காயின் ரகஸ்யார்த்தம், இனிச் சொல்லப்படுகின்றன.

பட்டையுடன் இருக்கும் தேங்காய் மிகவும் பளபளப்பாய்க் காணப்படும். பிறகு, அத்தேங்காய் உரிக்கும் போது மிகவும் கஸ்டத்துடன் சிக்குச்சிக்காய் வரும். அச் சிக்குகளையெல்லாம் நீக்கித் தேங்காயை உடைத்துப்பார்த்தபோது, அதனுள் மிகவும் சுத்தமான, வெண்மை காணப்படும். தேங்காய்களை நாம் கோவில்களுக்குக் கொண்டு போய் உடைத்துப் பகவானுக்குக் காட்டுகின்றோம். அவ்வாறு காட்டுவதற்குக் காரணம் இதனடியில் சொல்லப்படுகின்றன,

பட்டை உரிக்காத தேங்காய், மேல்ப்பார்வைக்கு மிகவும் சுத்தமாயும் பளபளப்பாயும் இருப்பதுபோல், மானவர்களின் சரீரங்களெல்லாம் அநேக நிரங்களுடன் மிகவும் பளபளப்பாய் மேல்த்தோல் மூடிக்கொண்டிருக்கிறது. தேங்காய்ப்பட்டையை உரிக்கும்போது விஷேஷ சிக்குச்சிக்குகளாய் வருகின்றது. அதுபோல் ஸ்திரீ புருஷர்களின் சரீரங்களும் பார்வைக்கு, உரிக்காத தேங்காய் பளபளப்பாக இருப்பது போல் இருக்கின்றன. அவ்வாறு சரீரத்தின் மேல்த்தோல் பார்வைக்குமாத்திரம், மேற்சொல்லிய தேங்காயின் மேல் பட்டையைப்போல் பளபளப்பாய் இருந்தபோதிலும், சரீரத்திற்குள் இருக்கும் அநேக விதங்களாகிய ஆசைகள் என்னும் சிக்குகள், தேங்காயின்மேலிருக்கும் சிக்கைப்போல், ஸ்திரீ புருஷர்களைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஆசைகளென்னும் சிக்குகளையெல்லாம் நீக்கிப் பார்த்தபோது, தேங்காய்க்குள் வெண்மை இருப்பதுபோல் எனக்குள் பரிசுத்தமான பரமாத்ம சொரூபம் இருக்கின்றது. அந்தப் பரமாத்ம சொரூபத்தை மூடிக்கொண்டிருக்கும் ஆசையென்னும் சிக்கை நீக்கி என்னைப் பரமாத்ம சொரூபத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று, ஈஸ்வரனைக் கேட்டுக்கொள்வதற்காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்து ஈஸ்வரனுக்குக் காட்டி கற்பூரம் ஏற்றி, இதோ இக்கர்ப்பூரம் எரிந்து நீராய்க் கரைந்து, ஒன்றுமில்லாமல் ஜோதியுடன் எவ்வாறு கலந்து விடுகின்றதோ அதுபோல், என் ஆசைகளையெல்லாம் நீராய்க் கரைத்து, ஜோதி சொரூபமாயிருக்கும் உன்னில், ஆத்மசொரூபியாகிய என்னை ஐக்கியம் செய்து கொள்ளக்கடவாய் என்று ஈஸ்வரனை

வேண்டிக் கேட்டுக் கொள்வதற்காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்து ஈஸ்வரனுக்குக் காட்ட காரணமாயிருக்கின்றது, என்றால்:-

நான் பார்வைக்கு நன்றாயிருந்த போதிலும், தேங்காயின் மேல் சிக்குகளுடன் பட்டை மூடிக்கொண்டிருப்பதுபோல் என்னை அநேக விதங்களாகிய ஆசையென்னும் சிக்குகள் மூடிக்கொண்டிருப்பதனால், என் நிஜ சொரூபத்தைத் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றேன். தன் நிஜ சொரூபம் தெரிந்துகொள்வதற்காகவே, தேங்காய் உடைத்து தட்டில் வைத்து ஈஸ்வரனுக்குக் காட்டி. கர்ப்பூரம் மேற்றி இதோ, இப்படிப்பட்ட வெண்மையான ஆத்ம சொரூபம் எனக்குள் இருக்கின்றது. இப்படிப்பட்ட வெண்மையுடைய ஆத்ம சொரூபத்தை இந்தத் தேங்காயின் மேல்பட்டை அநேக சிக்குகளுடன் மூடிக்கொண்டிருந்ததுபோல் என்னை அநேக ஜன்மங்களாய் ஆசையென்னும் களிம்புகளெல்லாம், இதோ ஏற்றி உமக்குக்காட்டும் கர்ப்பூரம் எரிந்து எவ்வாறு நீராய்க் கரைந்துவிடுகின்றதோ அதுபோல், என் ஆசைகளென்னும் களிம்புகளெல்லாம் மேற்படி கர்ப்பூரம் போல் நீராய்க் கரைந்து, ஜோதி சொரூபமாகிய உன்னில், ஆத்ம சொரூபமாய் என்னை ஐக்கியம் செய்துகொள்ளக்கடவாய் என்று காட்டுவதற்காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்துக் கர்ப்பூரம் ஏற்றிக்காட்டுவதற்குக் காரணமாயிருக்கின்றதென்று அறியக்கடவீர்களாக. ஆகவே, அன்பர்களே இம்மட்டில் சொல்லிவந்த உபதேசத்தை, விவேகம்மென்னும் புத்தியைச் சித்தப்படுத்தி (விவேகம் கொண்டு) மனமென்னும், ராஜனை விவேகமென்னும் புத்தியால் (மந்திரி போன்ற) உபதேசமென்னும், பாசத்தால்க்கட்டி லயிக்கச்செய்துகொண்டபின், பிரபஞ்சபூதர்களை சமன்செய்து கொள்ளலாம்! என்றால், தான்தானாய் நின்று பின் மனதின் சுபாபத்தினால், பிராண பிரயாண அந்தரார்த்தத்தை அறிந்து, பின் ஓர் கடவுளரை சித்தப்படுத்தி, ஆன்மாவின் உயர் இலட்சியத்தைப் பெறலாம். அஃதாவது நித்தியானந்தத்தினை அடையலாம்.

ஓர் யஜமான் இரண்டு சேவகர்களை அழைத்து நீங்கள் இருவரும் தாமரைத் தாடாகத்திற்குச் சென்று தாமரையிலைகளும், புஷ்பங்களும் கொண்டுவரவேண்டும் என்று சொல்லி அந்தத் தாடாகத்தில் தாமரைக் கொடிகளும் அல்லிக் கொடிகளும் மிகவுமுண்டு, அவைகள் காலில் சுற்றிக்கொண்டால் நீங்கள் எவ்வளவு நீச்சல் கற்றவர்களாயிருந்தபோதிலும் அது பிரயோசனப்படமாட்டாது ஆதலால், நீங்களிருவரும் இவ்விரண்டு கத்திகளையும் கொண்டுபோய், கொடிகள் காலில் சுற்றிக்கொள்ளும்போது அவைகளைக் கண்டித்து விடுங்கள் என்று சொல்லி இருவருக்கும் இரண்டு கத்திகளைக் கொடுத்தனுப்பினான். இருவர்களில் ஒருவன் தன் யஜமான் உத்தரவின்படி கத்தியை மறவாமல் எடுத்துக் கொண்டு போய், காலில் சுற்றிக் கொண்ட கொடிகளை எல்லாம் கண்டித்துக்கொண்டு அந்தக் கொடிகளால் கட்டுப்படாமல் இலைகளையும் புஷ்பங்களையும் பறித்துக்கொண்டு வந்தான். மற்றொருவனோ அப்படிச்செய்யாமல் யஜமான்கொடுத்த கத்தியை வீட்டில்வைத்து மறந்து சென்று கையில் ஆயுதமில்லாமலே தடாகத்திலிறங்கிச் சென்றவுடனே, கொடிகள் காலில் சுற்றிக் கொண்டபடியால் நீந்துவதற்குச் சக்தியில்லாமல் தத்தளித்துத் தடுமாறி பிராணனை விட்டான்! இப்படியாய் பிராணனை விட்ட இவனுடைய மரணத்திற்குக் காரணபூதன் யஜமானா அல்லது தானேயாகின்றானா? ஆனால், பிரதி ஜீவனுக்கும் மானவ ஜன்மம் உண்டானபோது, மாயையை நிவர்த்தி செய்துகொள்ளச் சாதனமாகிய புத்தியைப் பகவான் கொடுத்திருக்க அப்புத்தியினால் மாயையை நீக்கி மோக்ஷத்தை அடையத்தக்க பிரயத்தினத்தைச் சுலபமாய்ச் செய்யலாமல்லவா? அப்படியிருந்தும் அது போல் செய்பவர்கள் மிகவும் அரிதாய் இருக்கின்றார்கள். என்றால், மாயையை ஜயிப்பது சுலபசாத்தியமன்று. ஆகவே, ஈஸ்வரன் ஜீவர்களையும் மாயையையும் சிருஷ்டிசெய்தது வாஸ்தவமே! ஆனால் மாயையினால் கட்டுப்பட்டிருக்கும் ஜீவர்களுக்கு அந்த மாயையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சக்தியையும் கொடுத்திருக்கிறார். அதுவே புத்தி என்று சொல்லப்படும். இனி மனோலயத்தால் பிரபஞ்ச பூதர்களை வசப்படுத்திக்கொள்ளும் திறன், சொல்லப்படுகிறது.

## பிரபஞ்ச விரக்தி மார்க்கம்

அன்பர்களே! இச்சரீரம் மலம் நிறைந்தபாண்டம். இராஜாதிகாரத்தால் பல பொருள்களும் ஓரிடத்தில் கொண்டுவந்து சந்தை சேர்ந்தபோது அச்சந்தையில் கொள்வோர் பலர் வந்து சேர்வது போல், அவரவர்களின் நல் வினைத் தீவினை போல் அந்தந்தக் குடும்பத்தில் வந்து கூடுகிறார்களாதலால், தந்தையாய் தமர் தார மகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமென்று சொல்லப்பட்டது. அதாவது, தாய் தந்தை முதலானோர் சந்தையிற் கூடிய கூட்டம் போல் வந்து சேர்ந்தவர்கள். சதுரங்கசேனையென்றால், அரசர்க்குரிய நால் வகைப்படை. அவை தேர், யானை, குதிரை, காலாட்கள் என்பதேயாம். அன்றியும், மாடமாளிகை சதுரங்கசேனை என்பவற்றோடு கூடியவாழ்வு இந்திரஜாலம் போன்றது, வஞ்சனை பொறாமை முதலானவைகளுக் கிடமாகிய சரீரமோ, சொப்பனம் போன்றது. இராஜ்ஜிய பரிபாலனமோ, தோற்பொம்மை நாடகம் போன்றது, இவைகளை எக்காலத்தும் உயர்வு தாழ்வு கருதாது ஒரு நிகராகத்தெளிந்து, மனமானது ஒரு நிலையில் நில்லாமல் சுழல்வதற்குக்காரணம். காண்க!

பந்தமெனு மக்கள்மனை வீடுதோட்டந்துரவு
   பணமாகு மிதுக ளெல்லாம்
பாரினில் வரும்போது வந்ததில்லை நாளைக்குப்
   பாடைமேலல் போகும் போது
சொந்தமென வந்திடா திடையினிற்கனவுபோல்
   தோன்றியே யழிவதென்று
சுத்தமா யெண்ணமல் நித்தமே சதமென்று
   தொல்லுலகி லெண்ணி நாளும்
வந்தமட மாதினோ டினிதாக வாடியே.
   வலிமை யெல் லாமிழந்து
வாழ்நாட் கழித்துட னிறப்பதன் யாயமே:

ஸ்த்திரீ புருஷர்களே! ஷை காரணமாக, இச்சென்மத்திற்கு முன் ஜன்மத்தில் செய்த சஞ்சிதகர்ம பந்தத்தால் வந்த, தாய் தந்தையர்கள் புத்திரர்கள் புத்திரிகள் மனைவிகள் சுற்றத்தார்

முதலானவர்கள், பந்துக்களாகத் தோன்றித் தோன்றி, நீர்க்குமிழிகளைப்போல் மறைந்தார்கள் நாமும் அவ்வாறே தோன்றி மறைந்துவிடப்போகின்றோம்: ஆதலால்,

''எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதா
னியாதினு மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ வறிகிலேன்.,,

தந்தையார் போயினர் தாயாரும் போயினர் தாமும்போவார்'' என்பதுபோல், இவர்களெல்லோரும் மாயையால் உண்டாயினும் அஞ்ஞானிகள், சரீரமே நித்தியம் இந்தச் சம்சாரமே சாஸ்வதமென்று மாயையால் கட்டுப்பட்டு, சரீரசம்பந்தமான பார்யாள் புத்திரர்கள் பார்த்துக்கொண்டிருக்க மரணமடைவதால் அவர்களுக்காகத் துக்கித்துக்கொண்டும், மறுபடியும் திரவியம் சம்பாதிக்கப் பிரயத்தினப்பட்டு துன்மார்க்கத்தையடைந்து, காமக், குரோத, லோப, மோஹ, மத, மாச்சராதிகளை அநேக விதங்களாய் விஸ்தரித்துக்கொண்டு, நமக்கு எந்த விதத்திலும் திரவியம் கிடைத்தால் போதுமென்று துச்சமான வியவகாரங்களைச் செய்து, திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு, இதுவே நமக்குச்சுகம் இதைவிடச் சுகம் வேறில்லையென்று நிச்சயித்து, அந்தகர் (குருடர்) களைப் போல் காமத்தினுல் (ஆசையினுல்) தமக்கு எந்தக்கதி உண்டாகுமோவென்று தெரியாமல், வேடன் வலையில் அகப்பட்டு மதிமயங்கிய பக்ஷிகளைப்போல், புருஷர்கள் ஸ்திரீகளின் மோகவலையில் அகப்பட்டழுந்தி, எழுந்திராதபடி ஈஷணத்திரயங்களென்னும் சமுத்திரத்தில் மூழ்கி, பெண்டுபிள்ளைகளின்மேல் ஆசை அதிகரித்து, அவர்களுக்காகத் தனத்தைச் சம்பாதித்து அவர்களால் சுகத்தையடையாமல் வாணுளெல்லாம் துக்கமாய்க் காலங்கழித்து, சரீரம் விழும்போது அநேகவித, யமபாதைகளையடைந்து, நரகக்குழியில் சிலநாளிருந்து, பாபாத்மாக்களாய்ப் பிரபஞ்சத்தில் பிறந்து பிறந்து இறந்திறந்து, இம்மையிலிருந்து மறுமைக்கும் மறுமையிலிருந்து இம்மைக்கும் கணக்கில்லாமல்உழன்று அனேக கஷ்டங்களையனுபவிக்கின்றார்கள். சூக்ஷ்ம திருஷ்டியினுல் பார்த்

தபோது தேகப்வேறு, தான்வேருகக் காணப்படும். ஆகையால் அவர்கள், பிராந்தியினுல் தேகமும் தானும் ஒன்றென மயங்கி வீழ்ந்து, காமாதி தசவர்க்கமென்பன:- காம, குரோத, லோப, மோக, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை, என்பனவேயாம்.

(1) காமமென்பது:- தனம் தானியம் புத்திர பௌத்திராதிகளின்பேரில் அதிகப் பிரீதி வைத்தல். இதனுல் துயரடைந்தவர் நரகாசுரன், முதலியோர்

(2) குரோதமென்பது:- ஒருவனுக்குக் கெடுதி விளைவிக்கப் பிரயத்தினம் செய்ய இச்சை கொள்ளுதல். இக் குணத்தால் துயரமடைந்தவர் பகாசுரன் முதலியோர்.

(3) லோபமென்பது:- தனது சொத்திலிருந்து ஞானிகளுக்குங்கூட சிறிதேனும் கொடுக்கக்கூடாது என்னும் எண்ணமிருத்தல். இதற்குச் சான்று துரியோதனன்.

(4) மோஹமென்பது:- புத்திர களத்திராதிகளின் மீது அதிகப் பிரீதியை வைத்துத் தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும், இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசையை விருத்தி செய்தல். இப் புத்திர சோகத்தால் துயரமடைந்தவர் தசரத மஹாராஜன்.

(5) மதமென்பது:- திரவியம் அதிகரிப்பதினுல் இதரர்களை லக்ஷியம் வைக்காமல் பேசுதல். இதனுல் துயரமடைந்தவர் கார்த்த வீரியார்ச்சுனன்.

(6) மச்சரமென்பது:- தன்னைப்போல் பிறரும் சுகமனுபவித்தலைச் சகியாமையை விளைவிக்கும் சித்தவிருத்தியையுண்டாக்குதல். இக்குணத்தால் துயரமடைந்தவன் சிசுபாலதந்தவக்கிரன்.

(7) டம்பமென்பது;- பலர் மெச்ச தர்மம், யாகம் முதலானவைகளைச் செய்தல். இதனுல் துயரமடைந்தவர் புரூர சக்கரவர்த்தி.

(8) தர்ப்பமென்பது;- புத்திர மித்திர களத்திரதன தந்நியதி சம்பத்துக்களில் தனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லை என்று கர்வப்படுதல். இதனுல் துயரமடைந்தவன் பரசுராமனே

(9) ஈஷைஎன்பது:- தனக்கு நேர்ந்ததுக்கம் பிறருக்கும் நேரிடவேண்டுமென்று எண்ணுதல். இதனுற் கெட்டவர் அருணுகூஷ்தனன்.

(10) அசூயை என்பது:- கெடுதி செய்தவனுக்குக் கெடுதி விளைவிக்கவேண்டுமென்று எண்ணுதல் இக்குணத்தால். துயரமடைந்தவன்.பவுண் ரீகவாசுதேவன்.

ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

தொடர்ந்து கிருஷ்ணபகவான் உபதேசம், அர்ஜுநர்க்கு (அத்தியாயம் 16) ஓ! பார்த்தா! (ஒ அர்ச்ஜுநா), கீர்த்தியைக் கருதிபலர் மெச்சதர்மம் முதலான வைகளைச் செய்தல். பெரியோர்நல் லோர்க்கு அடங்காமை, தன்னைத்தான் புகழ்ந்து கொள்வது, தன்னை மதிக்கவில்லை என்று பிறர்மேல் துவேஷிப்பது, கடினமாக எவரையும், நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லியும் கேளாமல் தன்னிஷ்டம்போல் மூடநடக்கையுடன் இருப்பவன், அசுரகுணமுடையவனேயாம்.

உலகில் வேதவிதிப்படி நடக்கவேண்டு மென்கிற மனமுடையவராயிருந்தபோதிலும், காமக்குரோராதி குணங்களை விட்டிலராயின் இவர்களையும் அசுர (புலி) யோனியில் செலுத்தி நரகத்துக்கு வழி காட்டுவேன். ஆதலால், இவற்றை ஒருங்கே விடவேண்டும்,

ஓ! குந்திபுத்திரா! ஒவ்வொரு ஜன்மத்திலும் அசுர சுபாவத்திற்குரிய பிறவியை அடைந்தமூடர்கள், என்னை அடைய சக்தியில்லாமல் அதிலிருந்து, மற்ருெரு அதிகநீசமான ஜன்மங்களை அடைகின்றனர். ஆதலால், இவைகள் யாவுந் தள்ளத்தக்க குணங்களேயாம்.

இனி கொள்ளத்தக்க குணங்களைச் சொல்லுகின்றேன், அவையாவன, இச்சை, பக்தி. சிரத்தையேயாம்.

(1) இச்சை என்பது :- அன்ன பானுதிகளை யுட்கொள்ளவும், மலமூத்திரங்களை வெளியில் தள்ள விரும்புதல், இவைகளைச் செய்யாவிடில் தேகபாதை உண்டாகும். இதைச் செய்வதனுல் பிறருக்குக் கெடுதி யாதொன்றுமில்லை.

(2) பக்தி என்பது ;- குருவினிடத்திலும், ஈஸ்வரனிடத்திலும் மாரு நேசம் வைத்து இடைவிடாப் பேரன்புடன் துதித்தல்.

(3) சிரத்தை என்பது .- குருவாக்கியத்திலும் சாஸ்திரத்திலும் முழு நம்பிக்கை வைத்தல்.

மேற்கூறிய காமக்குரோதாதி பத்துக் குணங்களும், பிறவிக் கேதுவாகிய பலவித எண்ணங்களை விளைவித்து, ஜநந மரண மென்னும் சமுத்திரத்தில் அழுந்தச் செய்யும். ஆதலால் அக் குணங்களை அறவே விட்டு பின் கூறிய மூன்று குணங்களைக் கடைப்பிடித் தொழுகினேரே முமூஷ்ஷுக்களாய் முக்தி அடைவார்களென்பது கற்றுணர்த பெரியோர்கள் கருத்து.

ஒவ்வொரு மனிதனிடத்தும் மேற் சொல்லிய காமக்குரோதாதி பத்துக்குணங்களு மில்லா விடினும், அவைகளில் ஏதாகிலும் இரண்டு அல்லது ஒருகுணமாகிலும் ஒவ்வொரு புருஷனுக்கும் இருந்தேதீரும் அதைஎப்படித்தெரிந்து கொள்ளலாம் மென்ருல், மேற்சொல்லிய காமக்குரோதாதி பத்துக் குணபேத விபரங்களை வாசித்துக்கொண்டு வரும்போது தம் மிடத்துள்ளகுணம் இதுவெனநன்ருய் விழங்கும், இப்பத்துக் குணங்களே மனிதர்களுக்கு ஆலகாலவிஷமாயிருந்து கொண்டு ஜனன மரணங்களை விருத்தி செய்து கொண்டேவருகின்றன, இப் பத்துக்குணங்களையே, கோவில்களில், பந்தம்பரிஎன்பதன் காரணம் கொண்டு பத்து நாள் உற்ஷவதிருவிழா என்பதாம். கர்மகாண்டத்தில், இவ்பத்துக்குணமே, தசகண்டன் என்றும், இராவணன் என்றும் சொல்லப்படுகின்றன. இவை வரலாற்றை குருவென்னும் ஆசியை அடைந்தறியவும்.

இன்னுமோர் ரகஸ்யம் என்னவென்ருல், நமது சரீரத்திலிருக்கும், பிராணன், அபானன் வியானன், உதானன், சமானன், என்னும் ஐந்து வாயுக்களே, ஐந்துதலை நாகனுயிருக்கின்றது. இதன் விபரமே, ஐம்புலன் என்றும், பஞ்சபூதம் என்றும் சொல்லப்படுகின்றன. இவர்களின் தொல்லையே எமக்கு மிகவும் நின் மதியற்றநிலையாய் இருக்கின்றன. இவர்களையடக்க மனமென்



னும் இராஜனைக் கட்டும்வகையாக, விவேகம் என்னும் புத்தியால், உபதேசம்பெறச் செய்துகொண்டால், ஐந்து பிராணன்களும் தான்தானய் நின்று விடுவார்கள். இதன் காரணமாகவே பிராணன்களின் கொழுப்பை அடக்கும் காரணங்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஐந்துதலைநாகன் சிரசில் காலால் மிதித்துக் காட்டியவண்ணமாய் நிற்கின்றார் என்பதாம். இவைகள் அடங்கியபின் ஆன்மா. எவ்விதப் பற்றுதலுமில்லாமல் நிஷ்க்களங்கமாய்ப் படிகம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இவ்வித ஆத்மாவானது மேற்சொல்லிய காமக்குரோதாதி என்னும் அழுக்குகளால் மூடப் பட்டிருக்கின்றது. இதையே பசு, பதி, பாசமென்று சொல்லப்படும். அதாவ து, பசு என்றால் நாம், பதி என்றால் கடவுள்! பாசம் என்றால் நமக்கும் கடவுளுக்கும் மத்தியில் இருக்கப்பட்ட ஆசையென்னும் திரை. இதுவே மனம். மனம் லயப்பட்டுக்கொண்டால் நல்ல வீடு என்பதாம். ஆகவே, இந்த ஆசையென்னும் திரையை 'யார்' ஒருவர் நீக்கிவிடுகிறார்களோ அவர்கள் பசுத்தன்மை நீக்கப்பெற்று பதியாய்விடுகிறார்கள். அதாவது பசுக்களாயிருக்கும் ஜீவாத்மாக்கள், பதியாயிருக்கும் பரமாத்மாவில் ஐக்கியமாகின்றார்கள். இந்தப் பசு என்னும் ஜீவாத்மா, அஞ்ஞானத்துடன் கூடியிருப்பதனால் ஞானரத்னம் மறைவுபட்டிருக்கின்றது. என்றால்,

துன்பநுகரும் வினையின் தொடர்ச்சியினே
ரின்பநுகர்வார் போலேந்திழை யார்கட்பட்டார்
தன்பன்மிக நடுங்க ஞானி தசையில்லா
வென்பு கறித்திட்டாலிருஞ் சுவையும் பெற்றிடுமோ.

என்னும் ஸ்காந்தபுராண வாக்கியரீதியாய், சத்தில்லாத எலும்பை நாயானது கடித்து யாதொரு ருசியை அறியாதது போல், துன்பமனுபவிக்கவேண்டிய பிராரப்த வினையையுடைய வர்கள், இன்பம் அனுபவிப்பவர்களைப்போல் நினைத்து வீசகோ சப்புழுவைப்போல் வழிதெரியாமல் காமக் குரோத லோபங்க ளில் ஆழ்ந்து உழலுகின்றூர்கள்.

வீசகோசப்புழுவானது, நுண்ணியதாகிய நூலை ஒரு வழியு மில்லாத கூடாகக் கட்டி அதிலிருந்து தான் வெளியில் புறப் பட்டுப்போக வழிகாணுமல் இறக்குந் தன்மையைப்போல் மனி தன் பஞ்சபாசங்களினுலும் தத்துவா தத்துவங்களினுலும் பந் தப்பட்டு, ஈனமாகி ஜநந மரண துக்கங்களை அடைவான்? ஆன வகையில், உபதேசம் பெற்றுக்கொண்ட மனமானது லயப்பட் டுக்கொண்ட காரணமாக!!! ஸத்தியமே மாத, ஞானமே பிதா, தர்மமே ஸகோதரன், தயையே சிநேகிதன், சாந்தியே பத்தினி, பொறுமையே புத்திரன், என்னும் ஆறு குணங்களையும் பெற் றுள்ள மனதின் சுபாவம் எப்படி என்பதை அறியவும்.

## மனதின் சுபாவம்

மனம் சுத்தம் அசுத்தம் என இரண்டு வகைப்படும். காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சராதி சங்கல்பத்துடன் இருக்கும் மனம் அசுத்தமனம். இதற்கு வாசிட்டம்பிரமாணம்.

மெத்துகின்ற வாதனையை விட்டான் மேலா நலமுளதாஞ்
சத்தினசத்தினிடை நின்று சைதன்னியத்திற் சாட்டியந்தி
லொத்து நடுநின்றலைவதுவே யுள்ளமாகு மிவ்வுள்ளஞ்
சித்தின்முயல்வாற் சித்தாகுஞ் செடத்தின் முயல்வாற்
செடமாகும்.

காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சராதி குணங்கள் நசித்து நல்ல குணங்கள், விஷய வைராக்கியம், ஆத்மா நாத்ம விவேகம் முதலானவைகள் உண்டாயிருக்கும் மனம் சுத்தமான மனம் என்று சொல்லப்படும். என்றால், ஆசையென்கிற பெரிய வாயையுடைய முதலையானது பிடித்திழுக்க அதனால், மரணமுண்டாய் சுழல்போல் சுழலுகின்றோமென்றறிபவர்கள், ஆசையுடைய அசுத்தமான மனதினால் நாசம்செய்வார்கள். என்றால் எந்த எண்ணம் உதித்தபோதிலும் உதிக்கவிடாமல் சும்மாயிருப்பதே சுத்தமான மனம். இதற்கு வாசிட்டம் பிரமாணம்.

பிறவிக் கடலிற் காதலெனும் பெருவாய்முதலை பிடிதீர்க்க
இறவுச்சுழி பாற்சுழலு மவர்க்கிதய நாவா யெட்டாவா
மறமுற்றுளத்தை யுளத்தாலே மாய்த்துப் பிறப்பில்வருந்தாமல்
உறவுற்றுனைநீ யுய்விப்பா யுயிர்க்குப் பிறராலுய் வுண்டோ.

ஆதலால், இந்த மூன்று லோகமும் மனதின் சொரூபமாகவேயிருக்கின்றன. எப்படியென்றால்.

ஒரே பொன்னானது நாநாவிதநாமரூபங்களையுடைய நாநாவித ஆபரணங்களாவதுபோல் ஓர்மனமே நாநாவித நாமரூபங்களையுடைய பிரபஞ்சரூபமாய்க் காணப்படுகின்றது. அப்படிப்பட்டமனமேநமக்குப் பெருத்தசத்துருவாயிருக்கின்றது. இதற்கு உபதேச காண்டபடலமும் நெஞ்சறிவிளக்கமும் பிரமாணம்.

1, பிரகிருதியெனச் சொல்லப்படுமாயை யுமையிடத் தெம் பெருமானென்னு
மரணையாதரித் திருக்கும் பிரமனுதியார்க்கு மயக்களிப்பதா கும்
விரவு பசும்பொன் னணிப்பால் வெவ்வேருகுதல் போல மென்கலைக்கு நூல்போற்
பரவு பிரபஞ்ச முண்டாவதற்கதுவே காரணமாய்ப் பவித் ததாமே.

2. பசும்பொன்னி னுமமென்றிற் பணதி வேருனற் போலே
விசும்பெலாங் கலந்த சோதி வெவ்வேறு தெய்வமாகி
உசும்பி சீவாத்து மாக்களுடல் பலவான தன்மை
கசிந்து கண்டுருகி நாகைலிங்கரைக் காண்பாய் நெஞ்சே.

இந்த மனமே சம்சார ரூபமாகவும், ஜகத்திரயமாகவும் (மூன்று உலகங்களாகவும்) இருக்கின்றன மனமே, துக்க சொரூபமாயிருக்கின்றது: அம்மனமே பால்ய யெளவன கெளமார (கிழத்தன) மாயிருக்கின்றது. அதுவே, காலன் (யமன்) ரூபமாகவும் ஆணவ, மாய்கை, காம்யம் என மும்மலமாகவும் இருக்கின்றது. மனமே சங்கல்ப்ப விகல்பங்களாகவும் என்ருல், நினைப்பு மறப்பாகவும் ஜீவரூபமாகவும் புத்திசித்தம் அஹங்காரமாகவும் அந்தக்கரணங்களாகவும் இருக்கின்றது. மனமே பந்தமாயிருக்கின்றது. மனமே ஆகாசாதி பஞ்சபூதங்களாகவும், சப்த ஸ்பரிசாதி பஞ்ச தன்மாத்திரைகளாகவும், அன்னமயாதி பஞ்ச கோசங்களாகவும், ஞானேந்திரிய கர்மேந்திரிய பஞ்ச பிராணன்களாகவும், காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சரங்களாகவும், சத்துவ ரஜ தமோ குணங்களாகவும் இருக்கின்றது. ஜாக்கிரதை, சொப்பன, சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளாகவும் இருக்கின்றது. அஷ்டதிக்குப்பாலகர்களும் அஷ்டவசுக்களும், ஏகாதச, ருத்திரர்களும் துவாத, சாதித்தியர்களும் மனதாகவே இருக்கின்றது. காணப்படும் எல்லா வஸ்துக்களும் மனதாகவேயிருக்கின்றது. மனமே நினைப்புமறப்பாகவும், ஞான அஞ்ஞானங்களாகவும், குரு (ஞானம்) சிஷ்யன் (அஞ்ஞானங்)

களாகவும், மாயை அவித்தையாகவும் இருக்கின்றது: நாம ரூபங்களையுடைய இந்தச் சராசர பிரபஞ்சமெல்லாம் மனதாகவே யிருக்கின்றன.

மனம் இது நல்லது இது கெட்டது என்று அறிந்து, கெட்டதை விட்டு விட்டு நல்லதை யெடுத்துக்கொள்ளாமல், எல்லா வஸ்துக்களின்மீதும் ஆசையுடையதாய்க் கிராமத்திலிருக்கும் நாயானது, யாதொரு வேலையுமில்லாமல் விருதாவாய் இங்கும் அங்கும் குடுகுடுவென்று ஓடித்திரிவதுபோல் இந்த மனமானது, க்ஷணத்திற்குள்ளே சொர்க்க மத்திய பாதாள லோகம்வரையில் ஓடி அலைந்துதிரிந்து கெட்டுவந்து விடுகிறது. இப்படி மனமானது, நான்கு பக்கங்களிலும் ஓடித்திரிவதனால், எல்லோருக்கும் ஜநந மரண துக்கங்கள் சம்பவித்துக் கொண்டேயிருக்கின்றது: இதன் திருஷ்டாந்தம், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எளுதிய ஸ்ரீ பகவத்கீதையில் பார்க்கவும்:

ஆதலால் இருதயத்தில் மேற்சொல்லிய காமக்குரோதாதி அழுக்குகள் இல்லாமற் செய்து, மனதைப் பரிசுத்தமான நிலையில் நிறுத்தி வைத்தால் தனது நிஜசொரூபத்தை அடையலாம், அப்படி மனது பரிசுத்தமாகாவிடில் அந்த மனதின் கதி என்ன ஆகின்றதென்றால், பிராண பிரயாண காலத்தில் மனமானது எதை எதை நினைத்துப் பிராணனை விடுகிறதோ, ஜீவனுக்கு அந்தந்த ஜன்மங்கள் உண்டாகின்றன. எப்படியென்றால், சதா எதில் பாசம்வைத்து நினைத்துக் கொண்டிருந்தால் பிராணன் போகும்போது சித்திரகுப்தம் (சித்திரம், படம், குப்தம் - ரகசியம்) என்றால் ரகசியமான படம் தோன்றும். இவ்வகைக்காகவே இத்தொகுப்பில் லக்ஷியம் என்பது தரப்பட்டன எத்தொழிலைப் புரிந்தாலும், லக்ஷியமார்க்கத்துடன் இருந்துகொண்டால் அச்சமயத்தில் கண்களைத் திறந்துகொண்டிருந்தாலும், அல்லது மூடிக்கொண்டிருந்தாலும், கண்களுக்கு எதிரில் காணப்படும் சித்திர குப்த படத்தில் நம் நினைவின் லக்ஷியமே தோன்றும்படி நமக்குள் சாக்ஷியாய் இருக்கப்பட்ட ஜீவாத்மா காட்டுகின்றான். இதற்கு தேவிகா லோத்திரமும், கைவல்யம் பிரமாணம்,

(1) எந்த வாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்த யோனியதா மென் றறிவினால்
பந்தமில் பொருள் பற்றுத றக்கதே.

(2) சடமதாகிய தியான மெய்யாகிய சர்வமுத்தியை நல்கும்
திடமான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடலமாசை யாற்றியானிக்கிற் றியானித்த வுடல்களாகு
வார் மைந்தா
தொடரர்பவங் கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூ
பமாகுவர் மெய்யே.

ஆத்மா மாயா சக்தியினால் பந்தப்பட்டு சம்சாரத்தை அனுபவிக்கின்றான் என்பதில் இப்பாடல்களை சொல்லப்பட்டன. இந்த மனோவாசனை, தனக்கிஷ்டமான விஷயங்களைச் சங்கல் பித்துக்கொண்டு அந்த விஷயங்களிலேயே விசேஷமாய் ஓடிக் கொண்டிருக்கும். இப்படி மனம் சற்றாகிலும் வாடாமல். நாளுக்கு நாள் விருத்தி அடைந்து கொண்டேயிருக்கும். பிர பஞ்ச விஷயத்தையும், பிரபஞ்ச விஷயத்தை அறியும்படியான சுத்த அறிவாகிய பரப் பிரம்மத்தையும் ஸ்மரித்துக்கொண்டிருப் பதனால், இதற்கு மனம் என்று பெயர் வந்தது. சங்கல்பத் தையே (எண்ணங்களையே), மனம் என்று சொல்லப்படும். சங் கல்பத்தை விட மனம் வேறானதல்ல. சங்கல்பம் எங்குப் பிறக் கின்றதோ அங்கு மனம் இருக்கிறதென்று, கண்டிதமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த மனம் உதிக்குமிடம் நான் முகன் உதித்தவிடமென்று சொல்லப்படுகின்றன, அந்த இடத் தை ஆகாச ரூபமாய்ப் பார்த்தால் அதாவது.

எங்குஞ் சிவமே இடண்டற்று நிற்குநெஞ்சே
தங்கும் சுகநீ சலியாதே — அங்கிக்கென்
றெண்ணா தேபாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே யானும்பரம்.

என்னும் ஸ்ரீ தாயுமானவர் வாக்கியரீதியாய், எங்கும் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல், முன் சொல்லியதுபோல் நிறுத்தினுல், ''தானேதானு'' கின்றுன். அதாவது எங்கும் நிறைந்திருக்கும் பரிபூரண பரப்பிரம்மத்தில் தான் ஐக்கியமாகின்றுன். ஆகவே, சங்கல்ப ரூபமாயிருக்கும் மனதினுலேயே, இந்தப் பிரபஞ்சம் கற்பிக்கப்பட்டது. அவ்விதமான மனதே, சதுர்முகப் பிரமதேவனென்றும், சிருஷ்டிக்குக் காரண கர்த்தனென்றும் சொல்லப்படும்.

மனதே, ராகத்துவேஷ காமக்குரோதாதி விருத்திகளாகவும், ஈஷணுத் திரயங்களாகவும் இருக்கின்றது. இவ்வித விகாரமுடைய மனதே, மஹா சம்சாரமாயிருக்கின்றது. ராகத்துவேஷ காமக்குரோதாதிகள், ஈஷ்ணுத்திரயங்கள் முதலானவைகளைப் பிரம்ம ஞானத்தினுல் நசிக்கச்செய்வதே மனோ நாசனமென்று சொல்லப்படும் அதுதான் மோக்ஷம். எனவே, வீடு என்பதாகும்; என்பதன்காரணம் கொண்டு, அலையும் மனதே, அவித்தியா (அஞ்ஞான) வாசனையென்று சொல்லப்படும். அதை ஆத்ம விசாரணையினுல் நாசம்செய்யவேண்டும். ஆனுல் சஞ்சல ரூபமாயிருக்கும் மனதை ஜயித்தால், மோக்ஷத்தை அடையலாம். ஆதலால் எல்லா ஜயத்தையுவிட மனோஜயமே சிரேஷ்டமானது.

பிராண பிரயாண காலத்தில், தனம் மித்திரர்கள் பந்துக்கள் முதலானவர்கள் உபகாரம் செய்ய மாட்டார்கள். சரீரகஷ்டத்துடனிருக்கும் ஏகாதசி முதலிய உபவாசங்கள், புண்ணிய தீர்த்தயாத்திரை, தேவாலயதரிசநம், பிரம்மசரியம், சந்நியாசம், இவைகளினுல் தனித்து மோஷ்மடையமுடியாது. ஆகவே முன்னும், இன்னும் சொல்லிக்கொண்ட லக்ஷியமே சதா சிரத்தையுட இருந்து கொண்டால்த்தான் மோக்ஷமென்னும் நல்ல வீடு தப்பாமல் அடையலாம் என்றவறு!!!

காலன்வருமுன்னே கண் பஞ்சடையுமுன்னே
பாலுன் கடைவாய் படுமுன்னே — மேல்விழுந்தே
உற்ரு ரழுமுன்பே ஊரார் சுடுமுன்னே
கூற்ருலத் தாணையே கூறு.

என்பதுபோல ரெயிலுக்குப் போகப்பட்டவன் பத்து நிமிஷங்களுக்கு முந்தியே ரெயிலிடம் போயிருக்கவேண்டும். ரெயில் வந்து நின்றபிறகு போய்ச் சேரப்பட்டவனுக்கு ரெயில் அகப்படமாட்டா. அதுபோல் நமது பிராண பிரயாண காலம் சமீபத்து ஸ்மரணை தப்பியிருக்கும்போது நம்முடைய பந்துக்கள் எல்லோரும் செவியிடம் வந்து, அண்ணா! எனக்கென்ன சொல்கின்றாய்? அப்பா எனக்கென்ன சொல்கின்றாய் என்று சிலரும், மற்றும் சிலர் ராமாவென்று சொல், கிருஷ்ணாவென்று சொல், நாராயணாவென்று சொல், கோவிந்தாவென்று சொல் என்று உரத்த சப்தத்துடன் கூப்பிட்டுச் சொல்வார்கள். அந்தச் சமயத்தில் ராமனாகிலும், கிருஷ்ணனாகிலும், நாராயணனாகிலும், கோவிந்தனாகிலும், வந்து அவனுக்குச் சகாயம் செய்யபோவதில்லை.

இதற்குத் திருஷ்டாந்தம். ஸ்ரீ கிருஷ்ணபகவானை அர்ச்ஜுநன், என்ன கேட்குறானென்றால், 'ஹே' சுவாமி, மரணகாலத்தில் கிருஷ்ணாவென்று சொன்னால் மேலானபதவியை அடைவனென்று சொன்னீரல்லவா? அதுபோல் மரணகாலத்தில் நான் கிருஷ்ணாவென்று சொல்லுகின்றேன் என்று சொல்லினன். அதற்குப் பகவான் சொல்லுகின்றார், ஓகோ! அதுவா உனது அபிப்பிராயம்! அப்படிக்கல்ல? 'நீ' இப்பொழுது எந்த வஸ்துவின்மீது அதிக பிரீதியை வைத்திருக்கிறாயோ அந்த வஸ்துவே உனது பிராண பிரயாண கால சமீபத்தில் உன்னெதிரில் காணப்படும் சித்திரகுப்த படத்தில் தோன்றுமேயொழிய என் நாமஸ்மரணை உனக்கு உண்டாகமாட்டா. ஆதலால் 'நீ' பிரஞ்ஞை தப்பியிருந்தபோதிலும், அந்தச் சமயத்தில் நான் உன்னுள்ளே அந்தர்யாமியாயிருப்பதனால் என் நாமஸ்மரணை உன் ஞாபகத்திற்கு வரும்படி செய்வேன். ஆதலால் இதுமுதல் என்னை சதா ஸ்மரித்துக்கொண்டு வரக்கடவாய் என்று சொல்லினர்.

# ஓர்க்கடவுளையே பக்திசெய்து கடைத்தேற வேண்டிய ரகஸ்யார்த்தம்.

ஈஸ்வரபக்தி செய்ய வேண்டிய முறை இதனடில் சொல்லப்படலாயின! கேளுங்கள்.

உலகத்தில் உள்ள மானவ ஜனங்களெல்லோரும் சிவாலயம், பெருமாள் சந்நிதி, விக்கிநேஸ்வரர், சுப்பிரமண்யர். பார்வதி, லக்ஷுமி, நவக்கிரகங்கள், ஆஞ்சநேயர், மாஹாகாளி இன்னும் அனேகமாயுள்ள அனேக தேவதைகளைத் தரிசித்து அவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கேட்டு அவ்வரங்களால் தாம் சுகமடையவேண்டு மென்று எண்ணி அந்தந்தக் கோவில் களுக்குச்சென்று தேங்காய்களை உடைத்து, கர்ப்பூரமேற்றி அவ்விக்கிரகங்களின் ரூபத்தைக் கண்களால் பார்த்து மனதினுல் கிரகித்து தாடையில் போட்டு இரண்டு கைகளையும் குவித்து நின்று பிறகு, தமக்கு வேண்டும் வரம் எதுவோ அதை நினைத்துக் கேட்கின்றுர்கள், இவர்கள் எவ்வளவு பக்தியுடனிருந்து வரங்களைக்கேட்டபோதிலும், அவர்கள் கேட்கும் வரம் இச்சென்மத்தில் சித்தியாகமாட்டா. இவைகளெல்லாம் மறு சென்மத்தில் தப்பாமல் சித்திக்கும். இதன் ரகஸ்யார்த்தம் தெரியாததனுல், அவ்வாறு கேட்கின்றுர்களே யொழிய மற்றப் படிக்கு வேரல்ல. இவ்வாறு வரம் கேட்பது அறியாத்தன்மை யேயாம். தமக்கு எந்தப் பகவான்மீது பிரீதியோ அந்தக் கடவுளை மாத்திரம் உபாசநா மூர்த்தியாகக்கொண்டு அவரது ரூபத்தை நன்ருய்த் தரிசித்துக் கண்களை மூடி புருவ மத்தியில் நினைத்து மனக்கண்ணுல் பார்த்தவுடன் அவ்வுருவம் புருவமத்தியில் காணப்படும், அதைக் கண்டபிறகு, அவ்வுருவத்திலேயே மனதை நிறுத்தி, தன் மனைவி மக்கள் மீது வைத்திருக்கும் பிரீதியை விட அதிக பிரீதி அக்கடவுளின் மேல் வைத்து ஸதா காலமும் தைல தாரையைப்போல் ஜபம் செய்து வரவேண்டும் இவர்கள் எந்தக் கோவில்களுக்குச் சென்றுலும், அவ்விக்கிரங்களின் ரூபத்தைப் பார்க்காமல் கண்களை மூடித் தனது உபாசனு மூர்த்தியாகிய கடவுளின் ரூபத்தைப் புருவமத்தியில்

நினைத்து அவ்வுருவத்தை மனக் கண்ணால் பார்த்து உள்முக மாகவே மனக்கையால் கும்பிட்டு வரவேண்டுமேயொழிய அந் தந்தக் கோவில்களிலுள்ள விக்கிரகங்களின் ரூபத்தைப் பார்த் துக் கும்பிடலாகாது. ஓர்க் கடவுளின் ரூபத்தை மாத்திரம் உருதிப்பிடியாய்ப் பிடித்தால் அக்கடவுளின் கிருபையால் தாம் கடைத்தேரலாம். இது விஷயம் தெரிந்துகொள்ள வேண்டு மானால், சஸ்சிதானந்தர் பூர்வ ஜன்ம இச்ஜன்ம சரித்திர நூலை வரவழித்து வாசித்துப் பாருங்கள். அவர் பன்னிரண்டு வருஷங் கள் ஓர்க் கடவுளையே நினைத்து விசேஷபத்தியுடன் மானஸ பூசை செய்துவந்தபடியால், அக்கடவுளின் திருவருளால், தன க்குத் தானாகவே தாம் இச்சை கொண்டிராத அனேக காரிய ங்களெல்லாம் சித்தியாயிற்று. ஆதலால், இங்கு சொல்லியது போல் ஈஸ்வரபூசை செய்து வந்தால் இச்ஜன்மத்திலேயே கடைத்தேரலாம். அனேகவித ரூபங்களையுடைய பல கடவுள் களைக் கும்பிட்டு வந்தால், அவர்களெல்லோரும் தமக்கு வச மாகமாட்டார்கள். குரங்குப் பிடியைப்போல், ஓர்க்கடவுளையே நினைத்து விஷேஷபத்தியுடன் மானசு பூசை செய்து வந்தால் அவர் தம்வசமாய்த் தாம் நினையாதவைகளையெல்லாம் அனுக் கிரகிப்பார். மேற்சொல்லியதுபோல் ஈஸ்வரபூஜை செய்து வரவேண்டுமென்பதே இத்தொகுப்பின் கருத்து.

# ஸோஹம் மந்திர ஜப கண்டனை.

திரமென்ன ஹம்ஸோஹம் மந்திராதீதம்
திருசியசூன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்கரமுத ல்வித்தை சூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விருத்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே.

எனதன்பர்களே ! முன் குரு உபதேசத்தில், "ஸோஹம்" மந்திரம் சுவாசத்துடன் சேர்ந்து ஜபம் செய்யும்படிச் சொல்லப்பட்டன விசேஷமாய் ஜீவப்பிரமைக்கியத்தில் பார்க்கலாம் இதில் "ஸோஹம்" மந்திரம் ஜபம் செய்ய வேண்டாமென்று கண்டனைச் செய்கின்றேம். இவ்வாறு கண்டனைச் செய்வதற்குக் காரணம் இதனடியில் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

மனமானது, இமைக்கொட்டு மவ்வளவு நேரமும் சும்மாயிராமல் ஏதோ ஓர் விஷயத்தை நினைத்து எப்பொழுதும் கானல் நீர்போல் அசைந்துகொண்டேயிருக்கும். இவ்வாருய் எப்பொழுதும் கானல் நீர்போல் அசைந்துகொண்டிருக்கும் மனதை ஒரேமுறையாய்ச் சும்மாயிருவென்ருல் சும்மாயிராது. ஆதலால், கானல் நீர்போல் அசைந்துகொண்டிருக்கும் மனதை முதலில் ஓர்நிலையில் நிறுத்துவதற்காக மேற் சொல்லிய இரண்டு மந்திரங்களை மனதினுல் நினைத்துச் சுவாசத்துடன் சேர்ந்து உள்ளுக்கிழுத்தும், வெளியில் விட்டுமாய்ச் ஜபம் செய்து வந்தால் அப்போது அம்மனம் ஒரேநிலையில் நின்றிருக்கும். மனதை ஓர் நிலையில் நிறுத்த சாதனம் செய்துவந்தால், சிலது நாளைக் குள் அந்த ஓர் நிலையும் நின்று தன்னைத்தான் மறந்து சமாதி நிஷ்டையில் நின்றுவிடுவார்கள். மனதை நிறுத்த இதைவிட வழி வேருென்றில்லை. எல்லா உபதேசங்களை விட இதுவே

சிரேஷ்டமான உபதேசம். மற்ற உபதேசங்களெல்லாம், இதை விடத் தாழ்ந்த உபதேசமேயொழிய இதைவிட அதிகமானதும் இதற்குச் சமானமானதும் அல்ல. இது முக்கியமான உபதேசமாதலால், இவ்வுபதேசத்தை இந்நூலில் பலயிடங்களிலும் சொல்லியிருக்கயில்லை. ஆதலால் ஹம்ஸ, ரகசியமாகிய ஸோஹம், என்னும் மந்திரத்தை எப்பொழுதும் சுவாசத்துடன் சேர்த்து ஜபித்துக் கொண்டிருப்பதே ஆத்மதியான மென்று சொல்லப்படும். இது, ஞானிகளுக்கு ஞான சாயத்திரியே ஸோஹம்,, என்னும் அஜபா காயத்திரியா இருக்கின்றது. அந்த ''ஸோஹம்'' என்னும் அஜபா காயத்திரியையும் விட்டு சகலமும் மறந்து கேவல பிரஞ்ஞையுடையவனுயிருப்பதே ஆத்ம சாக்ஷரத்கார மென்றும், பிரம்மநிஷ்டை யென்றும், நிர்விகல்ப சமாதி என்றும் சொல்லப்படும். அந்த நிர்விகல்ப சமாதியே அஸம்பிரஞ்ஞாதசமாதி இதனடியில் சொல்லப்படலாயின.

## அஸம்பிரஞ் ஞாதசமாதி.

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மேக்ஷமடா மனத்தானு மிரண்டாய்ப்போகும்
சத்தியடா மனத்தானும் ஏகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
யுத்தியடா பிரம்மத்திற் புகுந்து கொண்டால்
பூலோக மெல்லாந்தான் பணியுமுன்னை
ஏத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந்தானே.

நானே பிரம்மம், பிரம்மமே நான், என்னும் ஸோஹம் மந்திரத்தை மறந்து, மனோபுத்திகள் இரண்டும் சூன்னியமாய்ச் சகல எண்ணங்களையும் அடக்கி, தேகாதிப் பிரபஞ்சமீருகிய சகல திருசியங்களையும் (காணப்படும் எல்லா வஸ்துக்களையும்) மறந்து, தானே தானுய்த் தன்மயமாய்க் கேவல

சின்மாத்திரனுய் (சிதாகாச வடிவமாய்) இருந்து என்ருல், நிர் மலமான கண்ணுடியை வைத்தபோது எந்தப் பேதமுமில்லா மலும் ஒன்றையொன்று காணுமலும் இரண்டும்ஒன்ருயிருப்பது போல், பிரம்ம சொரூபத்தில் மனம் கலந்து சாக்ஷிமாத் திரனுய் நின்றிருப்பதே அஸம் பிரஞ்ஞாத சமாதி என்றும், நிர் விகல்ப சமாதி என்றும் சொல்லப்படும். ஆதலால், மோக்ஷத் தைக் கொடுக்கும் அஸம் பிரஞ்ஞாத சமாதியே, உயர்ந்தது அந்தச் சமாதியை அடையுமுன் மனதையே விஷயமாகக் கொண்டு, சங்கல்ப விகல்பங்கள் என்ருல், நினைப்பு மறப்புக்கள் நாபியிலிருந்து உண்டாகும் விதங்களை அறிந்து, அவைகள் உண்டாகாவண்ணம் தடுக்கவேண்டும். மனதில் ஒரு சங்கல்பமும் உண்டாகாமல் தடுத்துவிட்டால், அதுவே அசம் பிரஞ்ஞாத சமாதியாகும். சங்கல்பமே மனதிற்குச் சொரூபமான படியால் சங்கல்பங்கள் உண்டாகாமல் நின்று விட்டால், மன மிறந்த தென யோகிகள் கூறுகிருர்கள். மனமிறந்த சமாதியே அஸம் பிரஞ்ஞாத சமாதி அந்தச் சமாதியில் ஆத்மா, தான் மாத்திரமாய் நிற்கும். அசம் பிரஞ்ஞாத சமாதியில் சித்த விருத்திகள் அடங்கியிருந்த போதிலும், சமாதியிலிருக்கிருே மென்றும், தத்துவங்களின் உண்மையை அறிய வேண்டும், மனே சங்கல்பம் இருப்பதால், அடங்கியிருந்த சித்தவிருத்திகள் மனதிற்குப் பலமாய்க் கவரத்தக்க விஷயங்களின் சம்பந்தம் நேரிட்டால், மனம் வெளியே கிளம்பி, நிஷ்டையில் உட்கார்ந்த புருஷனை உலக வியாபாரத்தில் இழுத்துச் செல்லும் அஸம் பிரஞ்ஞாத சமாதியில் மனமில்லாமல் ஆத்மா மாத்திரம் நின்றிருப்பதால், மனே சங்கல்பங்களுண்டாவதற்குக் காரண மில்லை. ஆதலால், அஸம் பிரஞ்ஞாத சமாதியில் இருந்தால் மனம் விஷயங்களில் இழுத்துச் சென்று அநர்த்தத்தை விளை விக்காது.

இருத்தியே இருதயத்தில் மனதொன்ருக
 ஏகபரமாம் பொருளை யிருத்தியொன்ருய்
நிறுத்தியே வெகுகோடி காலமட்டும்
 நிருவிகற்ப சமாதியிலே நிறைந்தெந்நாளும்

பொருத்தியே வலடக்கண் திறந்து பார்க்கப்
பூலோக மெங்குமொன்ருய் நிறைந்தேன் மைந்தா
கருத்தொன்ருய் நிறுத்தியடா கபாடம்நீக்கிக்
காரணத்தைக் கண்டு விளையாடுவாயே.

இந்த நிர்விகல்ப சமாதிநிட்டையினுல் அஞ்ஞான மயமாகிய சமஸ்த இருதய கிரந்தங்களும் நசித்து. அதாவது, ஸங்கல்ப விகல்பங்கள் சூன்னியமாய்க் கேவல அத்வயபிரம்மமாகிய ஆத்ம சாக்ஷாத்காரம் உண்டாகும்- ஸதா நிர்விகல்ப சமாதி நிஷ்டாப் பியாசம் செய்துகொண்டு நிர்விகாரமாய் என்ருல், எந்த நினைப்பு மறப்புக்களும் இல்லாம லிருப்பதற்கு ஒவ்வொருவரும் பிரயத்தினம் செய்ய வேண்டும். இந்தநிர்விகல்ப சமாதியை தர்ம மேகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதனுல் சுவா நுபவா நந்தாமிருதம் விஷேஷமாய் வருஷித்துத் தேக வாசனை, சாஸ்திர வாசனை லோக வாசனை என்னும் மூன்று வாசனைகளும் நீங்குவதனுல், ஜலத்தில் ஜலமும், பாலிப்பாலும், நெய்யில் நெய்யும், கலந்து ஏகமாவதுபோல், இந்தச் சரீரம் நசிந்தவுடனே ஜீவோபாதி (அநேக எண்ணங்களையுடைய மனம்) நசித்துப் பிரம்மத்தில் ஆத்மா கலந்து ஏகமாய்ப் போவதே விதேஹமுக்தி எனப்படும்.

ஆத்மா அநாத்மா என்னும் விவேகமில்லாதவர்கள் கோடி ஜன்மங்கள் எடுத்தபோதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள் ஆத்மாவே பரப் பிரம்மமென்று அறிந்து ஆத்மாநுபவம் அடையாதவர்கள் வனவாசம் சென்று. தலை கீழாய் நின்று அன்ன ஆகாரங்களில்லாமல் தவஞ்செய்து எவ்வழவு கஷ்டப் பட்டபோதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள். ஆத்ம ஞான மில்லாதவர்களுக்கே. விக்கிரக ஆராதனைகள் சொல்லப் புட்டதேயொழிய. கேவல ஆத்ம ஞானிகளுக்கு, விக்கிரக ஆராதனைகளினுல் பிரயோசனமில்லை. ஆத்ம ஞானிகள் எதை ஆராதிக்கின்ருர்களென்ருல்:- நமது தேஹமே தேவாலயமென்றும் அதில் நிவசித்துக் கொண்டிருக்கும் ஜீவனே புராதன ஆதி புருஷனுகிய பரப் பிரம்மமென்றும் அறிந்து அஞ்ஞான மென்

னும் பழைய புஷ்பங்களைக் களைந்து, "ஸோஹம்'' பிரம்ம நிஷ்டை என்னும் புதிய புஷ்பங்களினால் பூஜை செய்து. அதையும் மறந்து, பிரம்ம ஐக்கிய அநுபவத்தை அடைந்தவர்களே புநர் ஜநந (மறு ஜநந) மில்லாதவர்களாய் நித்திய முத்தியை அடைவார்களேயன்றி, மற்றவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் முக்தியை (மோக்ஷத்தை) அடையமாட்டார்கள்.

## சிதாகாசம் எது? நிர்விகல்ப சமாதி எது?

மனமானது க்ஷணத்திற்குள்ளே ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் சஞ்சரித்துக் (ஓடிக்) கொண்டிருக்கும்; அப்படி ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு ஓடும்போது, இவ்விரண்டிற்கும் மத்தியில் எந்த ஞானம் மத்யஸ்தமா யிருக்கின்றதோ அதாவது இவ்விரண்டிற்கும் மத்தியில் இமை கொட்டு மவ்வளவு நேரம் எது வெளியாய் இருக்கின்றதோ அந்தவெளியே சிதாகசம். இந்தச் 'சிதாகாசமே,, 'நீ. யென்று அறிந்து அந்த ரூபமாயிருக்க வேண்டும். என்றால், எந்த எண்ணங்களும் இல்லாமல் சும்மாயிருக்கவேண்டும். ஆகவே, உங்களுக்கு முதல் எந்தந்த எண்ணம் உதிக்கின்றதோ அந்த எண்ணம் வெளிப்புறப்பட்டு வந்தவுடன் மறுபடியும் எந்தவார்த்தையும் நினையாமல் சும்மாயிருந்து பாருங்கள் எவ்வளவு நேரம் சும்மாயிருக்கின்றீர்களோ அவ்வளவு நேரம் ஓர்வித சுகத்தை அடைவீர்கள். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்.

ஓரிடம் விட்டோரிடத்தேயுள்ள
முறிலவற்றி னடு வுண்மையாகிப்
பேரிலதா யுணர் விலதாய்ச்
சடமிலதா யதுநீயாய்ப் பிரியேலென்றுங்
கூரியபுத்தியினாலே யூகித்துக்
குடும்பி யெனுங் குறிப்பை மாற்றித்
தூரியதாம்படி மனத்தின் றுவக்கறுத்து
விருந்தபடி துணிந்து நிற்பாய்.

அப்படிப்பட்ட சிதாகாசத்தில் (வெளியில்) சகல எண்ணங்களும் அடங்கித்தான் தானுய் இருப்பானுகில், சர்வத்திற்கும் அதிகப்பட்டதும் பரம சாந்தமாயிருப்பது மாகிய பிரம்ம சொரூபத்தில் ஐக்கியபாய் விடுவான். இப்படி ஐக்கியமாவதே "நிர்விகல்பசமாதி" என்று சொல்லப்படும். மனமானது, ஒரு விஷயத்திலிருந்து மற்ருெரு விஷயத்திற்குப் பேகும் போது அதன் மத்தியில் சித்த சலனமில்லாமல் நிற்கும் நிலே யெதுவோ அதுவே "நிர்விகல்பசமாதி,, என்றும், உனது சொரூப மென்று சொல்லப்படும். சங்கல்ப விகல்பரூபமாயிருக்கும் என்ருல் நினைப்பு மறப்பாயிருக்கும் மனதைத் தூரப்படுத்தி சேஷமாய், நின்றிருக்கும் ஞானமே உன் சொரூபமாதலால், சஞ்சலமில்லாமல் என்ருல், எதையும் நினையாமல் சும்மா இருக்கவேண்டும்.

கண்கள், மூக்கு, வாய், செவிகள், தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களும். அஹங்காரமும் நானல்ல, இந்த ஜகத்து மித்தியா (மாயா) சொரூபமானது என்று நிச்சயமாய் அறிந்து, இந்தத் தேஹேந்திரிய ஜகத்திற்குச் சாக்ஷி மாத்திரனுய் இருந்து கொண்டு எது அறிகின்றதோ, அந்தச்சாக்ஷியே என் சொரூபமென்று அறிந்து சதா அந்தச்சாக்ஷியுடன் சேர்ந்து தன்மயமாய் (தான்தானுய்) யிருக்கவேண்டும்

காண்பான், காக்ஷி. காணப்படும் பொருள் (திருசியபிரபஞ்சம் இம்மூன்றும் திரிபுடி யென்று சொல்லப்படும்.

அப்படிபட்ட திரிபுடி மத்தியில் சாக்ஷியாய் எந்த அறிவு பிரகாசிக்கின்றதோ அந்த அறிவே ஆத்மான என்று சொல்லப்படும் அந்த அறிவே தானென்று தெரிந்து சதா தன்மயமாயிருப்பதைவிட வேறு சாஸ்திரார்த்த ஸாராம்சம் இல்லேயாதலால், சதா அந்த "அறிவேதான்,, என்று அறிந்து எப்பொழுதும் தன்மயமாயிருக்க வேண்டும். இதற்குத் திருஷ்டாந்தம் எப்படியானுல்!

ஒரு வீட்டிலுள்ள கூடத்தில் தீபம் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது அந்தத்தீபத்தை அனுசரித்து ஜனங்கள் மேற்படி கூடத்தில் நடந்து கொண்டும் அனேககாரியங்க்ளேச் செய்து வந்தபோதிலும், அந்தத் தீபம்மாத்திரம் எந்தக்கார்யங்களேயும் செய்யாமலும் எந்தவிகாரங்களேயும் அடையாமலும் சலிக்காம

லும் இருப்பது போல், ஜீவ ஐந்துக்களின் தேஹமத்தியில் புத்தியென்னும் குகையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆத்ம சந்நிதானத்தை ஆசிரயித்துக் கொண்டிருக்கும், மனம் புத்தி சித்த அகங்காரங்கள் சலித்துக் (அசைந்து) கொண்டு அதது அதன தன் காரியங்களைச் செய்து கொண்டிருந்தபோதிலும் ஆத்மா மாத்திரம் மேற்படி கூடத்திலுள்ள தீபம்போல் இருந்து எந்த விகாரங்களில்லாமலும் எந்தக் காரியங்களைச் செய்யாமலும் சலிக்காமலும் சாக்ஷி சொரூபமாயிருக்கின்றது. இப்படிச்சாக்ஷி சொரூபமாயிருக்கப்பட்ட ஆத்மாமே "கூடஸ்தன்,, என்று சொல்வப்படும். அதாவது, இந்தச் சரீரமென்னும் கூண்டுக்குள் ஜீவன் அடைப்பட்டிருப்பதனுல் (புகுந்துகொண்டிருப்பதனுல்) கூடஸ்தன் என்று பெயர் வந்தது. ஆகவே இவ்வளவு உபதேசம்மும் கற்று உணர்த பின்னே, "நல்லவீடு" தேடிக்கொள்ளும் வகை தோன்றும் என்பதே உணர்வு.

அன்பர்களே:- சுத்தஞானஸம் பன்னர்களாயிருக்கப்பட்டவர்களுக்கு ஸ்திர விசாரணையினுல் பிரம்மமே தானென்றும், திருசிய பிரபஞ்சமெல்லாம் மித்தை யென்றும், தோன்றுவது சகஜமாதலால், அப்படிப் பட்டவர்கள் நிச்சயமாய் பரப்பிரம்மத்தில் கலந்து பரவசமடைந்து மௌன நிட்டையை அவலம்பித்து 'நீ' 'நான்' என்னும் துவைதபாவம் நீங்கித் துரீய திருஷ்டியுண்டாய் நிர்மலத்துவம் அடைந்திருக்கவேண்டும்.

அன்பே சிவம்

அறிவுகெட்டு வாழ்ந்து மக்கள், அனைவரையும் ஒன்று கூட்டி
நெறியுடனே வாழவேண்டி, நேர் வழியைக் காட்டி விட்ட
திருமறையே வாழ்க எங்கள், தேன் மறையே வாழ்க!
ஓம் சக்தி முருகவேல், வாழ்க ! வாழ்க !! வாழ்க !!!
இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்வோம்.

வணக்கம்.

வீட்டுக்கோர் வாயில் முற்றும்.

## முத்தியடைந்த ஐவர் சரீரத்தில் ஒன்று

இது சச்சிதானந்த யோகீஸ்வர சுவாமிகள் இருக்கப்பட்ட ஆசிரமத்தினிடமே, அகஸ் மாத்தாய்க் , கிடைத்ததாக! சுவாமிகள் அதைப்பார்த்து மானிடயாக்கை யெடுத்த ஒவ்வொருவருக்கும் பத்திரசத்தை ஊட்டுவதற்கு இது தான் சரியான நூல் என் றெண்ணிப்? புண்டரீ நாதரைப் பக்திசெய்து முக்தியடைந்த மஹானுபாவர்களகிய ஸ்ரீ கபீர்தாஸ், ஸ்ரீ துளஸீதாஸ், ஸ்ரீ ஞானதேவ், ஸ்ரீ ஜயதேவ், ஸ்ரீ நாமதேவ், ஆகிய இவ்வைந்து பக்தர்களின் சரித்திரங்களைக் கன்னடத்திலிருந்து தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து எழுதியிருக்கின்றனர். ஆதியில் உண்டாகிய சரியான பக்த விஜயம் மூலகிரந்தம் இதுவேயாம். இப்படிப்பட்ட கிரந்தம் இது வரையில் தமிழ் பாஷையில் வெளி வரவில்லை, பக்த விஜயமென்று பெயர் வைத்து ஏதேதோ விஷயங்களை எழுதி இதுவரையில் அச்சிட்டிருக்கிறார்களாம். அதற்கும் இதற்கும் விஷேஷ தாரதம்மியம் உண்டென்பதாம். ஆகவே, இப்போது கபீர்தாஸ் சரித்திரத்தை இதில் சுருக்கிக் காட்டியிருக்கின்றது, மிகுதி ஷை சுவாமிகளின் ஜீவப்பிரமைக்தில் அறியலாம்.

அதாவது:- பூலோகத்தில் பாமரர்களுக்குகுப் பக்தி ஞானங்களை உபதேசிப்பதற்காகப் பகவான் ஸ்ரீ சுகப்பிரம்ம ரிஷியைச் சிசு ரூபமாய்ச் செய்து கங்கா நதியில் மூன்று முறை மூழ்த்தி முத்துச் சிப்பியில் வைத்துக் கங்கையில் விட்டுவிட்டனர். பகவான் சிசுவைக் கங்கையில் மூன்று முழுக்குகள் மூழ்த்தினவுடனே ஸ்ரீ சுகர் மாயையால் மூடப்பட்டுத் திக்குமுக்கலாடித் திணறித் திமிறி குவா! குவா!! குவா!!! என்று அழுது முத்துச் சிப்பியில் மிதந்து கொண்டிருந்தது. அப்போது. கங்காதேவி, முத்துச்சிப்பியைத் தன் அலைகளால் தள்ளிக்கொண்டே சென்று கங்கை ஓரமாய்த் தவம் செய்து கொண்டிருக்கும் தமால் சமீபமாய்க் கொண்டு போய் நிறுத்தினள். அப்போது சிசு தமால் கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்து வந்தது. இவர் அயோனி சம்பந்தர். ஆதியில், ரம்பை

சுகரைக் கூடுவதற்காக சந்யாசி வேஷங் கொண்டு அவர் செல்லும் மார்க்கத்தில் பர்ண்சாலைக்கட்டி அகோரமான தவம் செய்பவளைப்போல் நடித்துக் காட்டினள், அப்போது சுகர், வேஷதாரியாகிய சந்யாசியைக்கண்டு பேசிய போது, என் தவத்தைக் கெடுத்தாய் என்று கோபித்துச் சபிப்பதாய்ச் சந்யாசி வேஷதாரியாகியரம்பை சொல்லலின். சுகர் மன்னிக்கும் படி கேட்டனர். என் எண்ணத்தை நிறை வேற்றினல் மன்னிப்போம் என்று சொல்லினன் சுகர் அதற்குச் சம்மதித் தவுடன் ரம்பைகஷாய வஸ்திரத்தை நீக்கித் தன் நிஜ சொரூ பத்தைக் காட்டித் தன்னைச் சேரும்படி சொல்லினன். உடனே சுகர் திடுக்குற்றுப் பதில் சொல்ல யாதொன்றுந் தோன்ருமல் சில நேரம் சென்ற பிறகு கலியுகத்தில் உன்னிஷ்டத்தைப் பூர்தி செய்கின்றேன் என்று வரங் கொடுத்தனர். அது போல் இக்கலியுகத்தில் அதிக ரூபரேகா விலாசத்துடன் சுந்தரா என்னும் பெயருடையவளய்க் கபீருக்கு நெருங்கிய பாத்தியஸ்த் தர்களின் வீட்டில் அவதரித்தனன் பிறகு கபீர் சுந்தராவை மணம் புரிந்து கோடாலியில் காம்பிருந்து கொண்டு தன்குல மாகிய மரங்களை யெல்லாம் துய்ஸம் செய்வதுபோல் கபீர் மகமது மதத்திலிருந்தும், மகம்மது மதத்திற்கெல்லாம் கோ டாலிக் காம்பாயிருந்து தும்சப்படுத்தி, பக்தி மார்க்கங்களினல் பிரபஞ்ஸத்தைச் சீர் திருத்தி, முடிந்தவுடன், பகவான் கபீரு க்குப் பிரத்தியக்ஷமாய், 'கபீர்நீ' அவதரித்த காரியம் முடிந்தது இனி பரமபதம் வந்து சேரக்கடவாய் என்று ஆஞ்ஞாபித்து சுந்தராதேவியைத் தன்னுடன் கூட அழைத்துக் கொண்டு விமானத்தின் மீதேற்றி உட்கார்ந்தவுடன் அந்த திவ்விய விமானம் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பி மிகவும் வேகமாய்ச் சென்று மறைந்தது. பிறகு கபீர் பகவதாஞ் ஞானுசாரமாய்ச் சந்தோஷத்துடன், இந்தச் சரீரத்தைத் தகனமும் செய்யலா காது, சமாதியும் செய்யலாகாது என்று சுவரின் மீது எழுதி விட்டுப் பத்மாசனத்துடன் உட்கார்ந்து யோக பலத்தினல் நாயிலிருக்கும் குண்டலி சக்தியைக் கிளப்பி பிரம்மரந்திரத் தைத் திறந்துகொண்டு சுகப் பிரம்மரிஷியாய்த் திவ்விய விமான மேறிச் செல்லுப்போது. ஸுரர்களும் முனிவர்களும் வந்து

எதிர்கொண்டு அழைத்துச் சென்றார்கள். இவர் யாக்கை ஓர் பகுதி துளசிதளமாகவும், மற்றப்பகுதி சரீரம் மல்லிகைப் புஷ்பமாகவும் இருந்தது. துளசி தளத்தை இந்துக்களும், மல்லிகைப் புஷ்ப தளத்தை மகமதியரும் எடுத்துச் சென்று உசிதமானஸ் தலத்தில் வைத்துப் பூஜித்து வந்தார்கள். இ... விபரமே தான் சுவரில் எழுதப்பட்டன. இதன் மிகுதி விரி... ஜீவப் பிம்மைக்ய வேதாந்த ரகஸ்யத்தில் அறியலாம்..

அகட்சியுடன் ஆலிலேமே லிருப்பாரையா
அப்போது இவரிடத்தி லெல்லா ஞாயம்
இகழ்ச்சியுட னிவற்குப் பின்னெவ ரோகாணேன்
இவ்வார்த்தை நானறிவே னவரைக் கேளீர்

ஸ்ரீ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பொற்தாழ் வாழ்க !!!

ரக்கை ஓர்
மல்லிகைப்
துக்களும்,
சென்
ள். இ
தி விரி
..

ணன்

!!

200-3507